REGISTERED AS A NEWSPAPER IN SRI LANKA
www.thinakaran.lk
/ Thinakaran.lk / ThinakaranLK

2023 செப்டெம்பர் 27 புதன்கிழமை

# தினகரன்
THINAKARAN

வரு. 91 இல. 229 | Wednesday 27, September, 2023 | 24 பக்கங்கள் | 50/-

## புத்தள பிரதேசத்தில் மீண்டும் நில நடுக்கம் 2.4 ரிச்டர் அளவில் பதிவு

**இவ்வருடத்தில் இதுவரை நாட்டில் 16 நிலநடுக்கங்கள்**

*(லோரன்ஸ் செல்வநாயகம்)*



நாட்டில் இவ் வருடத்தில் இதுவரை 16 நிலநடுக்கங்கள் ஏற்பட்டுள்ளதாக புவிச்சரிதவியல் மற்றும் சுரங்கப் பணியகம் தெரிவித்துள்ளது.

நேற்றும் புத்தள பிரதேசத்தில் நில நடுக்கம் ஒன்று ஏற்பட்டுள்ளது.

06

# கொழும்பு நிதி வலயமாக மாறவுள்ள துறைமுக நகரம்

## மாற்றியமைக்க புதிய சட்டத்தை உருவாக்கும் பணிகள் ஆரம்பம்

**முதலீட்டுச் சபையை பொருளாதார ஆணைக்குழுவாகவும் மாற்றியமைக்க நடவடிக்கை**




கொழும்பு துறைமுக நகரத்தை கொழும்பு நிதி வலயமாக மாற்றியமைப்பதற்கான சட்டமூலத்தை உருவாக்கும் பணிகள் இடம்பெற்று வருவதாக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

இந்த சட்டத்தினூடாக முதலீட்டுச் சபையை, பிரச்சினைகளுக்கு செயல்திறனுடன் தீர்வுகளை பெற்றுக் கொடுக்கும் பொருளாதார ஆணைக்குழுவாக மாற்றியமைக்க தீர்மானித்துள்ளதாகவும் ஜனாதிபதி தெரிவித்தார்.

இலங்கையின் திறந்த பொருளாதார கொள்கையை அமுல்படுத்துவதற்கு பிரச்சினைகளை தீர்ப்பதில் காணப்படும் சாதக நிலைமை முக்கிய பங்கு வகிப்பதாகவும் தெரிவித்த ஜனாதிபதி, சர்வதேச சுதந்திர வர்த்தக ஒப்பந்தங்களின் முக்கியத்துவம் மற்றும் மாற்று பிரச்சினைகளை தீர்ப்பதற்கான மத்தியஸ்தானமாக இலங்கையை மாற்றியமைப்பதற்கான அவசியத்தையும் வலியுறுத்தினார். நாட்டின் போட்டித்தன்மை மிக்க எதிர்காலத்தை பாதுகாப்பதற்காக இலங்கையின் எல்லைகளுக்கு அப்பால் சென்று செயற்கை நுண்ணறிவு (AI) மற்றும் புளொக்செயின், பசுமை வலுசக்தி உள்ளிட்ட வளர்ந்து வரும் துறையில் சிறப்பம்சங்களை உருவாக்க ஒன்றுபடுமாறு சட்ட வல்லுநர்களிடத்தில் கேட்டுக்கொண்டார்.

இலங்கையின் பிரச்சினைகளை செயல்திறனுடன் தீர்ப்பதற்கு தற்போதுள்ள முறைமைகளில் மாற்றம் செய்யப்பட

06

**ரஷ்ய குடும்பத்தின் நேற்றைய வருகையுடன்**

## வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கை பத்து இலட்சமாகியது



*(கட்டுநாயக்க நிருபர்)*

நாட்டுக்கு வந்த வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கை நேற்று (26) ரஷ்ய பிரஜை மற்றும் அவரது குடும்பத்தினரின் வருகையுடன் பத்து இலட்சமாக அதிகரித்தது.

ரஷ்ய பிரஜை ஒருவரும் மற்றும் அவரது குடும்பத்தினர் அனைவரும் நேற்று செவ்வாய்க்கிழமை (26) பிற்பகல் கட்டுநாயக்க விமான நிலையத்தை வந்தடைந்தனர்.

அவர்களை வரவேற்கும் முகமாக இலங்கை சுற்றுலா

06



03
**ஜனாதிபதி, பாராளுமன்ற தேர்தல்கள் உரிய காலத்தில் நடத்தப்படும்**
ஐ.தே.க தவிசாளர் வஜிர அபேவர்தன எம்பி

## கிளிநொச்சி மாவட்டத்தில் மீண்டும் மணல் விநியோகத்திற்கு அனுமதி

**மாவட்ட ஒருங்கிணைப்பு குழுக் கூட்டத்தில் தீர்மானம்**



கிளிநொச்சி மாவட்டத்தில் மீண்டும் மணல் விநியோகத்திற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளதாக அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார்.

மணல் விநியோக விடயத்தில் தற்போது ஏற்பட்டுள்ள அவசியம் கருதி நேற்று நடைபெற்ற கிளிநொச்சி மாவட்ட ஒருங்கிணைப்பு குழுக் கூட்டத்தில் எடுக்கப்பட்ட தீர்மானத்தின் பிரகாரம் இம்முடிவு எடுக்கப்பட்டுள்ளது.

எதிர்வரும் அக்டோபர் (02) திங்கட்கிழமையிலிருந்து, காலை ஆறு மணி முதல் மாலை

06

## பயங்கரவாதிகளின் புகலிடமாக கனடா மாறியுள்ளது



**இலங்கையில் இனப்படுகொலை என்பதும் பொய்யே**

பயங்கரவாதிகளின் புகலிடமாக கனடா மாறியுள்ளதாக வெளிவிவகார அமைச்சர் அலிசப்ரி தெரிவித்துள்ளார்.

நியுயோர்க்கில் ஏஎன்ஐ செய்திச் சேவைக்கு கருத்து தெரிவிக்கையிலேயே அவர் இதனை குறிப்பிட்டுள்ளார். கனடா இந்திய இராஜதந்திர முறுகல் நிலை குறித்து கருத்து தெரிவிக்கையில் இவ்வாறு கூறிய அமைச்சர் அலிசப்ரி, உறுதியான ஆதாரங்களின்றி இந்தியாவுக்கு எதிரான குற்றச்சாட்டுகளை முன்வைத்தமைக்காக கனடா பிரதமரை

06

**மகாவலி காணிகளில் அறுவடைக்கு பின்**

## இரத்தினக்கல் அகழ்வுக்கு அனுமதி வழங்குவதற்கு அமைச்சு திட்டம்



எம்பிலிபிட்டிய பகுதியில் மகாவலி காணிகளில் அறுவடைக்குப் பின்னரான காலப் பகுதியில் இரத்தினக்கல் அகழ்வுப் பணிகளுக்கு இடமளிப்பது குறித்து தேசிய மாணிக்கம் மற்றும் நகை ஆணையகத்துடன் கலந்துரையாடல்களை நடத்தி தீர்மானம் எடுப்பது தொடர்பில் கைத்தொழில் அமைச்சுசார் ஆலோசனைக் குழுவில் கலந்துரையாடப்பட்டது. கைத்தொழில்

06

## சவூதி அரேபியாவின் 93 ஆவது தேசிய தின வைபவம்



சவூதி அரேபியாவின் 93 ஆவது தேசிய தின வைபவம் கொழும்பு கோல்பேஸ் ஹோட்டலில் இலங்கைக்கான சவூதி தூதுவர் காலித் பின் ஹமூத் அல் கஹ்தானி தலைமையில் (25) மாலை நடைபெற்றது. வைபவத்தில் அமைச்சர்களான விதுர விக்கிரமநாயக்க, ஹாபிஸ் நஸீர் அஹமட், சுசில் பிரேமஜயந்த, இராஜாங்க அமைச்சர் தாரக பாலசூரிய ஆகியோர் சவூதி தூதுவருடன் இணைந்து கேக் வெட்டி கொண்டாடிய போது பிடிக்கப்பட்ட படம்.

## மலேசியாவில் இலங்கையர் கொலை சந்தேக நபர்கள் பொலிஸில் சரண்



மலேசியாவில், இலங்கையர் மூவரைக் கொலை செய்த சம்பவத்துடன் தொடர்புடைய சந்தேக நபர்கள் இருவர், சரணடைந்துள்ளனர். மலேசியாவின் கோலாலம்பூர் செந்துல் பிரதேசத்தில் இடம்பெற்ற கொலை அங்கு பெரும் பரபரப்பை ஏற்படுத்தியது. இவர்கள் பொலிஸாரிடம் சரணடைந்துள்ளதை மலேசியாவுக்கான இலங்கை உயர்ஸ்தானிகராலயம் உறுதிப்படுத்தியுள்ளது.இலங்கையர்களே சந்தேக நபர்களென தகவல் கிடைத்துள்ளதாகவும் உயர்ஸ்தானிகராலயம் குறிப்பிட்டுள்ளது. மலேசியாவின் செந்துல் லோவர்

06

## IMF - ஜனாதிபதியுடனான பேச்சு மிகவும் வெற்றிகரம்

**எடுக்கப்பட்ட தீர்மானங்கள் விரைவில் அறிவிப்பு**



ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கும் சர்வதேச நாணய நிதியத்தின் பிரதிநிதிகளுக்குமிடையிலான முக்கிய கலந்துரையாடல் நேற்று நடைபெற்றது. இக் கலந்துரையாடல் மிகவும் வெற்றிகரமாக அமைந்தன.

அரசாங்கம் மற்றும் நாணய நிதியத்துக்குமிடையிலான ஒப்பந்தத்தின் பிரகாரம் எடுக்கப்பட்ட தீர்மானங்களின் முன்னேற்றம் குறித்து நாட்டுக்கு அறிவிக்கவும் உள்ளதாக தேசிய

06



03
**'INFOTEL தகவல் தொழினுட்ப கண்காட்சி' நவ. 03 முதல் 05 வரை BMICH இல்**

**ADB யிடமிருந்து விசேட கடன் வசதி**

## ஜனாதிபதியின் யோசனைக்கு அமைச்சரவையில் அனுமதி

*(லோரன்ஸ் செல்வநாயகம்)*



ஆசிய அபிவிருத்தி வங்கியிடமிருந்து கொள்கை அடிப்படையிலான விசேட கடன்களை அரசாங்கம் பெற்றுக் கொள்வதற்கு, அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

பொருளாதார உறுதிப்பாடு மற்றும் மறுசீரமைப்பு செயற்திட்டங்களுக்காக அவ்வங்கியிடமிருந்து குறித்த விஷேட கடன் வசதிகளைப்

06

## 2024 பட்ஜட்; நவ.13இல் சமர்ப்பிப்பு நிதி அமைச்சராக ஜனாதிபதி சமர்ப்பிப்பார்

**இறுதி வாக்கெடுப்பு டிசம்பர் 13ஆம் திகதி**

*(லோரன்ஸ் செல்வநாயகம்)*



2024 ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்டம் எதிர்வரும் நவம்பர் மாதம் 13 ஆம் திகதி பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படவுள்ளதாக நிதி இராஜாங்க அமைச்சர் ரஞ்சித் சியம்பலாபிட்டிய தெரிவித்துள்ளார்.

நிதி அமைச்சரென்ற வகையில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அடுத்தவருடத்துக்கான இந்த வரவுசெலவுத் திட்டம் யோசனையை அன்றைய தினம் முற்பகல் பாராளுமன்றத்தில் சமர்ப்பிப்பாரென்றும்

06

## அடுத்து வரும் 04 மாதங்களுக்கு 04 டீசல் கப்பல்கள் கொள்வனவு

**அமைச்சர் கஞ்சனவின் யோசனைக்கு அமைச்சரவை அனுமதி**



*(லோரன்ஸ் செல்வநாயகம்)*

நான்கு டீசல் கப்பல்களை அடுத்து வரும் 4 மாதங்களுக்காக கொள்வனவு செய்வதற்கு அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளது. அதற்கிணங்க, நவம்பர் 01ஆம் திகதி முதல் எதிர்வரும் 2024ஆம் ஆண்டு பெப்ரவரி 29ஆம் திகதிவரையான காலத்திற்கென, இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனத்திற்கு

06

## இலத்திரனியல் வடிவில் நீர்க்கட்டண பட்டியல்

**அக்டோபர் 01ஆம் திகதி முதல் நடைமுறை**

*(லோரன்ஸ் செல்வநாயகம்)*



அச்சிடப்பட்ட நீர் கட்டண பட்டியலுக்கு பதிலாக அக்டோபர் மாதம் 01ஆம் திகதி முதல் ஒன்லைன் மூலமான இலத்திரனியல் நீர் கட்டணப் பட்டியல் முறைமையை ஆரம்பிப்பதற்கு திட்டமிட்டுள்ளதாக தேசிய நீர்வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபை தெரிவித்துள்ளது. இச்சபையின் பிரதிப் பொது முகாமை

06

## பதுளை யூரி தோட்ட மாப்பாகல லயன் குடியிருப்பில் தீ விபத்து

**09 வீடுகள் உடைமைகளுடன் எரிந்து நாசம்**

*(பசறை நிருபர்)*



பதுளை பசறை வீதியிலமைந்துள்ள யூரி தோட்ட மாப்பாகல லயன் குடியிருப்பில் திடீர் தீ விபத்து ஏற்பட்டதால், அங்கிருந்த வீடுகள் அனைத்தும் தீயில் எரிந்து சேதமடைந்துள்ளன. பதுளை பசறை வீதி 07ஆவது மைல்கல் பகுதியில் அமைந்துள்ள

06

## தயாசிறி MPயின் இடைக்கால தடையுத்தரவு இடைநிறுத்தம்

**கொழும்பு மாவட்ட நீதிமன்றம் உத்தரவு**

*(லோரன்ஸ் செல்வநாயகம்)*



சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் முன்னாள் பொதுச் செயலாளர் தயாசிறி ஜயசேகரவிடம் விளக்கம் கோரி, அக்கட்சியின் தலைவர் மைத்திரிபால சிறிசேன தாக்கல் செய்துள்ள கடிதத்தை செயற்படுத்துவதை தடுக்கும் வகையில் விடுக்கப்பட்டுள்ள உத்தரவை, இடைநிறுத்துவதற்கு கொழும்பு மாவட்ட நீதிமன்றம் நேற்று உத்தரவு பிறப்பித்துள்ளது.

06

# கொழும்பில் நடைபெற்ற சவுதி அரேபியாவின் 93வது தேசிய தின வைபவத்தில்...

சவுதி அரேபியாவின் 93வது தேசிய தினக் கொண்டாட்டம் இலங்கைக்கான சவுதி அரேபிய தூதுவர் காலித் ஹமூத் அல் கஹ்தானி தலைமையில் கொழும்பு கோல்பேஸ் ஹோட்டலில் நேற்று முன்தினம் (25 ஆம் திகதி) நடைபெற்றது. சுற்றாடல் அமைச்சர் ஹாபிஸ் நசீர் அஹ்மட் கலந்து கொண்ட இவ்வைபவத்தில் ஆளும் கட்சி, எதிர்க் கட்சிகளின் அரசியல் தலைவர்கள், அமைச்சர்கள் இராஜாங்க அமைச்சர்கள், மாகாண ஆளுநர்கள் கொழும்பிலுள்ள வெளிநாடுகளின் தூதுவர்கள், உயர் ஸ்தானிகர்கள், பாராளுமன்ற உறுப்பினர்கள், இராஜதந்திரிகள், புத்திஜீவிகள், துறைசார் நிபுணர்கள் சமூக சேவை நிறுவனங்களின் பிரதிநிதிகள் உட்பட முக்கியஸ்தர்கள் பலரும் பங்குபற்றியிருந்தனர்.


முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தூதுவரினால் வரவேற்கப்பட்ட போது...


தூதுவருடன் எதிர்க்கட்சி தலைவர் சஜித் பிரேமதாச....


சுற்றாடல் அமைச்சர் ஹாபிஸ் நசீர் அஹ்மட் தூதுவருடன்...




தூதுவருடன் கல்வி அமைச்சர் சுசில் பிரேம ஜயந்த்...


தூதுவருடன் ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீம் எம்.பி


தூதுவருடன் இலங்கை மத்திய வங்கி ஆளுனர் நந்தலால் வீரசிங்க...




தூதுவருடன் அல் ஹிக்மா நிறுவனப் பணிப்பாளர் மௌலவி எம்.எச். சேஹுத்தீன் மதனி


வைபவத்தில் கலந்து கொண்ட ஏ.எச்.எம். பௌசி எம்.பி உட்பட கொழும்பிலுள்ள வெளிநாடுகளின் தூதுவர்கள், உயர்ஸ்தானிகர்கள்

### ஹம்பாந்தோட்டையில் கடும் மழை;

## சுமார் 15,000 ஏக்கரில் பயிரிடப்பட்ட பயறுச் செய்கை முற்றாக பாதிப்பு

### பாரிய நஷ்டம் ஏற்பட்டுள்ளதாக விவசாயிகள் தெரிவிப்பு

**ஹம்பாந்தோட்டை குறூப் நிருபர்**

ஹம்பாந்தோட்டையெங்கும் கடந்த சில வாரகாலமாக பெய்த கடும் மழையினால் திஸ்ஸமகாராம பிரதேச விவசாய நிலங்களில் சுமார் 15,000 ஏக்கரில் மேலதிக பயிர்ச்செய்கையாக மேற்கொள்ளப்பட்டுவந்த பயறுச் செய்கை முற்றாக பாதிக்கப்பட்டு பாரிய நஷ்டம் ஏற்பட்டுள்ளதாக விவசாயிகள் தெரிவிக்கின்றனர்.

மேற்படி பயறுசெய்கை மேற்கொள்ளப்பட்ட வயல் நிலங்களில் நீர் நிரம்பி வழிந்தோடாமல் தேங்கி நின்றதன் காரணமாக பயறு செடிகள் முற்றாக நீரில் மூழ்கடிக்கப்பட்டு அழிவிற்குள்ளாகியுள்ளன. இதனால் விவசாயிகள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர். இவ் வருடத்தில் ஒக்டோபர் மாதம் வரையில் மழை பெய்யாதென வளிமண்டலவியல் திணைக்களம் அறிவித்ததனைத் தொடர்ந்து மேலதிக பயிர்ச் செய்கையாக விவசாயிகள் தங்களது வயல் நிலங்களில் பயறு செய்கையில் ஈடுபட்டு வந்தனர்.



சுமார் 15,000 ஏக்கர் நிலப்பரப்பில் மேலதிக பயிர்செய்கையாக பயறு பயிரிடப்பட்டு வந்த நிலையில், விவசாயிகள் 1 கிலோ பயறு விதையினை சுமார் 1150 ரூபாவிற்கு கொள்வனவு செய்திருந்தனர். கடந்த காலங்களில் சந்தையில் பயறிற்கு அதிக விலை காணப்பட்டதினாலும் நீர் குறைந்தளவு தேவைப்படுவதினாலும் விவசாயிகள் பயறை பயிரிட நடவடிக்கை எடுத்திருந்தனர். இருந்தாலும் முற்றிலும் எதிர்பாராதவிதமாக பெய்த அதிக மழையின் காரணமாக பயிர்ச்செய்கை முற்றாக பாதிப்படைந்து நஷ்டமேற்பட்டுள்ளதாகவும் விவசாயிகள் தெரிவித்தனர்.

### நகர்வலம்

## பேருவளை இக்ரா தொழில்நுட்ப கல்லூரியில் ஸ்தாபகர் தின விழா இன்று

**(அஜ்வாத் பாஸி)**



பேருவளை இக்ரா தொழில்நுட்பக்கல்லூரியின் பழைய மாணவர்களால் ஒழுங்கு செய்யப்பட்டுள்ள 'ஸ்தாபகர் தினம்' இன்று 27ஆம் திகதி மு.ப 11.00 மணிக்கு கல்லூரி மாநாட்டு மண்டபத்தில் வெகுவிமர்சையாக நடைபெறவுள்ளது.

இக்ரா தொழில்நுட்பக்கல்லூரி பணிப்பாளர் வை.எல்.எம். றமீஸ் தலைமையில் நடைபெறும் இந்நிகழ்வில் ஜாமியா நளீமியா கலாபீட சிரேஷ்ட விரிவுரையாளர் அஷ்ஷெய்க் அரபாத் கரீம் (நளீமி) எம்.ஏ. "நளீம் ஹாஜியார் மறைந்தும் மறவாத ஒரு முன்மாதிரி" எனும் தலைப்பில் விசேட உரை நிகழ்த்துவார்.

இன்றைய நிகழ்வின்போது பழைய மாணவர்களின் நிதியுதவியில் தொழில்நுட்பக்கல்லூரியில் நிர்மாணிக்கப்பட்டுள்ள 'Solar Power Project' ஐயும் அதிதிகள் வைபவரீதியாக அங்குரார்ப்பணம் செய்து வைப்பர்.

இந்நிகழ்வில் கல்லூரி விரிவுரையாளர்கள்,

பழைய மாணவர்களும் கலந்து சிறப்பிக்கவுள்ளதாக ஏற்பாட்டாளர்கள் தெரிவித்தனர்.

## மீலாத் தின வைபவத்தில் ஹதீஸ், மஜ்லிஸ் நிகழ்வு

**ருஸைக் பாரூக்**

நபி (ஸல்) அவர்களின் பிறந்த நாளை முன்னிட்டு கொழும்பு 12, முஸ்லிம் வாலிபர் நலன் புரி சங்கம் ஒழுங்கு செய்துள்ள 50வது ஆண்டு நிறைவாக ஹதீஸ் மஜ்லிஸ் மற்றும் பரிசளிப்பு வைபவம் நாளை 28ம் திகதி இரவு 8.00 மணிக்கு மெசெஞ்சர் வீதி முஹியத்தீன் தைக்கா முற்றவெளியில் உம்மு சாவியாவின் இமாம் கலீபத்துஷ் ஷாதுலி மௌலவி அஹமத் சூபி (மஹ்லரி) தலைமையில் நடைபெறும்.

மலேசியா மஸ்ஜித் நாகூர் இமாம் மௌலவி ஜே. அப்துல் மஜீத் மற்றும் மௌலவி அமீர் ஹம்ஸா ஆகியோர் சிறப்பு பேச்சாளராக கலந்துகொள்ளவுள்ளதாக ஏற்பாட்டாளர்கள் சார்பில் கொழும்பு முன்னாள் பிரதி மேயர் எம்.டி.எம். இக்பால் தெரிவித்தார்.

## இஸ்லாமிய தினப்போட்டியில் கொழும்பு பாத்திமா சாம்பியன்




2023ஆம் வருடத்திற்கான பாடசாலைகளுக்கிடையில் நடைபெற்ற இஸ்லாமிய தினப்போட்டிகளில் பல போட்டிகளில் வெற்றிபெற்று கொழும்பு, பாத்திமா முஸ்லிம் பெண்கள் கல்லூரி சாம்பியன் பட்டத்தை பெற்றுக்கொண்டது.

கொழும்பு வெஸ்லி கல்லூரியினால் நடாத்தப்பட்ட 51ஆவது வருடாந்த பாடசாலைகளுக்கிடையிலான இஸ்லாமிய தினப் போட்டிகளிலே கொழும்பு பாத்திமா முஸ்லிம் மகளிர் கல்லூரி ஒட்டுமொத்த சம்பியனாகியுள்ளது.

போட்டிகள் கடந்த 13ஆம் திகதி வெஸ்லி கல்லூரி வளாகத்தில் நடைபெற்றது.

இப்போட்டியில் 18 பாடசாலைகள் பங்குபற்றியதுடன் 400ற்கும் மேற்பட்ட மாணவர்கள் போட்டியிட்டு அதிகூடிய புள்ளிகளை (நான்கு முதலாம் இடங்கள், மூன்று 2ம் இடங்கள் மற்றும் நான்கு 3ம் இடங்கள்) பெற்றதன் மூலம் பாத்திமா முஸ்லிம் மகளிர் கல்லூரி முதலாம் இடத்தைப் பெற்று முதன் முறையாக சம்பியனாக தெரிவுசெய்யப்பட்டுள்ளது.

### அகில இலங்கை தமிழ் மொழித்தின;

## தென் மாகாண போட்டிகள் இன்று வெலிகம அறபாவில்

**வெலிகம தினகரன் நிருபர்**

அகில இலங்கை தமிழ் மொழித் தின தென் மாகாண போட்டிகள் இன்று (27) புதன் கிழமை வெலிகம அறபா தேசிய பாடசாலையில் மிக விமர்சையாக நடைபெறவுள்ளன.

தென் மாகாண தமிழ் மொழி மூல பாடசாலைகளுக்குப் பொறுப்பான பிரதிக் கல்விப் பணிப்பாளர் அஷ்ஷெய்க் எம்.ஏ.எம் மஷாஹிர் (நளீமி) தலைமையில் இடம் பெறும் இப் போட்டிகளின் அங்குரார்ப்பண வைபவம், தென் மாகாண கல்விப் பணிப்பாளர் சன்ன உபாலி வீரசேகர மற்றும் பிரதிக் கல்விப் பணிப்பாளர் அசேனி பரன விதாரன ஆகியோரின் பங்கேற்புடன் இடம் பெறவுள்ளன.

காலி, மாத்தறை, மற்றும் ஹம்பாந்தோட்டை ஆகிய மூன்று மாவட்டங்களிலிருந்தும் 50 பாடசாலைகளைச் சேர்ந்த 360 போட்டியாளர்கள் இதில் கலந்து கொள்ளவுள்ளனர்.

எழுத்தாக்கப் போட்டிகள் ஏற்கனவே நடைபெற்று முடிந்துள்ள நிலையில் , ஏனைய போட்டிகளான வாசிப்பு, பேச்சு பாவோதல், நாட்டார் பாடல், நாடகம், இசை (தனி), இசை (குழு), நடனம் (தனி), நடனம் ( குழு) தமிழ் அறிவு வினா விடை, முஸ்லிம் நிகழ்ச்சி, விவாதம் போன்றன இடம் பெறவுள்ளன.

இப்போட்டிகளுக்கான நடுவர்களாக கொட்டகல கல்வியியற் கல்லூரி விரிவுரையாளர்கள் வரவழைக்கப்பட்டுள்ளனர். தமிழ் மொழித் தின போட்டிகளின் இறுதி நிகழ்வான சான்றிதழ் வழங்கும் வைபவம் இன்றைய தினம் பிற்பகல் 4.00 மணியளவில் இடம் பெறவுள்ளதாக தமிழ் மொழித் தின போட்டிகளின் செயலாளர் அஷ்ஷெய்க் எம்.எம்.எம். முன்திர் (நளீமி) தெரிவித்தார்.

# தமக்கெதிராக அடிப்படையற்ற குற்றச்சாட்டு; தொழிற்சங்க பிரமுகருக்கு எதிராக நடவடிக்கை

## அமைச்சருக்கான சலுகைகள் எதையும் நான் பெறவில்லை

**லோரன்ஸ் செல்வநாயகம்**

ரயில்வே தொழிற்சங்க பிரமுகரான இந்திக்க தொடங்கொட தமக்கு எதிராக முன்வைத்துள்ள அடிப்படையற்ற குற்றச்சாட்டுகள் தொடர்பில், உச்சளவில் சட்ட நடவடிக்கை எடுக்கப்போவதாக போக்குவரத்து ஊடகத்துறை அமைச்சர் பந்துல குணவர்தன தெரிவித்துள்ளார்.

ரயில்வே திணைக்கள தொழிற்சங்க பிரதிநிதிகள் மற்றும் நிர்வாக அதிகாரிகளுடனான விசேட பேச்சு வார்த்தையின் போதே, அமைச்சர் இவ்வாறு தெரிவித்துள்ளார். இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில், போக்குவரத்து துறையில் முன்னேற்றகரமான பல்வேறு செயற்திட்டங்களை நான் முன்னெடுத்துள்ளேன்.

பாராளுமன்றத்திற்கு தெரிவான பின்னர் எந்த ஒரு சந்தர்ப்பத்திலும் எனது பாராளுமன்ற உறுப்பினர் சம்பளத்தை நான் பெற்றுக் கொண்டதில்லை. அந்த நிதியை நான் 'எமக்காக நாம்'நிதியத்திற்கு



அன்பளிப்பு செய்து வருகின்றேன். அத்துடன் ஒரு போதும் நான் அரசாங்கத்திடமிருந்து மின் கட்டணம், நீர்க்கட்டணம், மற்றும் உத்தியோகபூர்வ இல்லத்தையும் பெற்றுக் கொண்டதில்லை.

போக்குவரத்து அமைச்சரான நான், கடந்த ஒரு வருடம் மற்றும் நான்கு மாத காலங்கள் நான் ரயில்வே திணைக்களத்தின் முன்னேற்றத்திற்காக பல சிறந்த செயற்பாடுகளை முன்னெடுத்துள்ளேன். அந்த திணைக்களத்துக்காக அதிகமான அமைச்சரவைப் பத்திரத்தை சமர்ப்பித்த அமைச்சர் நானாவேன்.

ரயில்வே திணைக்களத்தின் காணி பிரச்சனைகள் ஊழியர்களின் பிரச்சினைகளுக்கு தீர்வு பெற்றுக் கொடுக்கவும் வெற்றிடங்களை நிரப்புதல் தொடர்பான அனைத்து நடவடிக்கைகளையும் நான், முன்னெடுத்துள்ளேன்.

பிரதி வாரமும் ரயில்வே பொது முகாமையாளர் மற்றும் அதிகாரிகளை அழைத்து நிறுவனங்களில் நிலவும் பிரச்சனைகள் தொடர்பில், பேச்சு வார்த்தை நடத்தி வருகின்றேன்.

நாட்டு மக்களின் பெரும்பாலானவர்கள் ரயில்வே திணைக்களத்தை தனியார் மயப்படுத்துவதையே விரும்புகின்றனர். அந்த வகையில் தற்போது ரயில்வே திணைக்களத்தின் செலவுகள் குறைக்கப்பட்டு வருமானத்திலும் அதிகரிப்பு ஏற்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

# ஜனாதிபதி, பாராளுமன்ற தேர்தல்கள் உரிய காலத்தில் நடத்தப்படும்

## ஐ.தே.க தவிசாளர் வஜிர அபேவர்தன எம்பி

**லோரன்ஸ் செல்வநாயகம்**



ஜனாதிபதித் தேர்தல் மற்றும் பாராளுமன்ற தேர்தல் ஆகியவற்றை உரிய காலத்தில் அரசாங்கம் நடத்துமென, ஐக்கிய தேசியக் கட்சியின் தவிசாளர் பாராளுமன்ற உறுப்பினர் வஜிர அபேவர்தன தெரிவித்துள்ளார்.

இத்தேர்தல்களுக்காக நிதி ஒதுக்கப்பட்டாலும், ஒதுக்கப்படாவிடினும் மீண்டும் எதிர்காலத்தில் இதற்கான நிதியைப் பெற்று, இந்த தேர்தல்களை ஜனாதிபதிக்கு நடத்த முடியும் என அரசியலமைப்பில் தெளிவாக குறிப்பிடப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

அத்துடன் ஏனைய தேர்தல்கள் அரசியலமைப்பின் ஒரு பகுதியாக காணப்படவில்லை. அவை, வேறு சட்டங்களின் கீழ் உள்ள கட்டளைகளாகும் என்று அவர் தெரிவித்துள்ளார்.

தென் மாகாணத்தில் நேற்று இடம்பெற்ற நிகழ்வுகளில் கலந்து கொண்ட பின்னர் ,ஜனாதிபதித் தேர்தல் தொடர்பில் ஊடகவியலாளர்கள் எழுப்பிய கேள்விகளுக்குப் பதிலளிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

எதிர்வரும் வரவு செலவுத் திட்டத்தில் நாட்டு மக்களுக்கு எவ்வாறான நிவாரணங்கள் வழங்கப்படவுள்ளது என ஊடகவியலாளர்கள் இதன்போது கேள்வி எழுப்பினார். இதற்குப் பதிலளித்த வஜிர அபேவர்தன எம்பி,

வரவு செலவுத் திட்டமானது ஒரு கற்பனை கதை அல்ல. இவ்வாறான கதை அல்லாத வரவு செலவு திட்டத்தையே தயாரிக்க வேண்டும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

# அமைச்சரவை அனுமதி

**லோரன்ஸ் செல்வநாயகம்**

2024 ஆம் நிதியாண்டுக்கான ஒதுக்கீட்டுச் சட்ட மூலத்தை தயாரிப்பதற்கு அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளது. அத்துடன் அந்த ஒதுக்கீட்டுச் சட்ட மூலத்தை பாராளுமன்றத்தில் சமர்ப்பிப்பதற்கும் அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

நிதி, பொருளாதார மேம்பாடு மற்றும் தேசிய கொள்கைகள் அமைச்சர் என்ற வகையில்,ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க சமர்ப்பித்துள்ள மேற்படி யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

# 2 பொலிஸாரைத் தாக்கி காயமேற்படுத்திய மாணவர்கள் உள்ளிட்ட அறுவர் கைது

## கல்கிசை கடற்பகுதியில் சம்பவம்

**லோரன்ஸ் செல்வநாயகம்**

கல்கிசை கடற்கரைப் பகுதியில் இரண்டு பொலிஸ் உத்தியோகத்தர்களை தாக்கி காயப்படுத்திய, ஐந்து மாணவர்கள் உள்ளிட்ட ஆறு பேரை கைது செய்துள்ளதாக கல்கிசை பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

தாக்குதலுக்குள்ளான பொலிஸ் கான்ஸ்டபிள் மற்றும் பொலிஸ் சார்ஜன்டும் சிகிச்சைக்கா களுபோவிலை போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

கல்கிசை கடற்கரைப் பகுதியில் ஆபத்தான கடற் பகுதியில் மது அருந்திய நிலையில் சிலர் குளிப்பதாக, பொலிஸாருக்கு தகவல்கள் கிடைத்தன.இதையடுத்து கல்கிசை

கடற்கரை பாதுகாப்பு பிரிவு அதிகாரிகள் அந்த இடத்திற்கு சென்று சோதனை நடத்தியுள்ளனர்.

அப்போது குளிப்பதற்கு பொருத்தமில்லாத பாதுகாப்பற்ற கடற்பகுதியில் ஆறு பேர் குளித்துக் கொண்டிருந்தனர்.

இது, குளிப்பதற்கு பொருத்தமில்லாத ஆழமான பகுதியென தெரிவித்து அவர்களை அங்கிருந்து செல்லுமாறு அந்த அதிகாரிகள் கேட்டுக் கொண்டனர். இதனை மறுத்த அவர்கள், மிகமோசமான வார்த்தைகளில் பொலிஸாரை திட்டி குழப்பகரமான சூழல் ஒன்றை உருவாக்கியுள்ளனர். நிலைமையை கட்டுப்பாட்டிற்குள் கொண்டுவர முனைந்த பொலிஸ் உத்தியோகத்தர்களை அந்த 6 நபர்களும் தாக்கியுள்ளனர்.

இதன்போதே இவர்களை கைது செய்ததாகவும், அவ்வாறு கைது செய்யப்பட்டவர்கள் 16 வயதிற்கும் 30 வயதிற்கும் இடைப்பட்டவர்கள் என்றும் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

# திருகோணமலை நகருக்குள் திலீபனின் நிகழ்வுகளுக்கு தடை

## திருமலை நீதிமன்றம் உத்தரவு

**றொட்டவெவ குறூப், தம்பலகாமம் குறூப் நிருபர்கள்**

திருகோணமலையில் திலீபனின் நினைவேந்தல் நிகழ்வுக்கு தடை விதித்து நீதிமன்றம் நேற்று செவ்வாய்க்கிழமை (26) உத்தரவு பிறப்பித்துள்ளது.

திருகோணமலை துறைமுக பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கொட்டான் மண்டபம், காந்தி சுற்றுவட்டம் மற்றும் திருகோணமலை பொலிஸ் பிரதேசம் ஆகிய இடங்களில் திலீபனின் நினைவு தின கொண்டாட்டங்கள், அணிவகுப்புகள் அல்லது ஆர்ப்பாட்டங்கள் எதுவும் நடத்தப்படக் கூடாதென நீதிமன்ற உத்தரவில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

திருகோணமலை துறைமுக பொலிஸாரால் நீதிமன்றத்தில் விடுத்த கோரிக்கைக்கமைய, இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

# உறவினர்களுடன் இணைவதற்காக படகு மூலம் தனுஷ்கோடி சென்ற இருவர் இராமேஸ்வரத்தில் கைது

**திருச்சி எம். கே. ஷாகுல் ஹமீது**



தமிழக அகதி முகாமில் தங்கியுள்ள மகன், மகள், உள்ளிட்ட உறவினர்களுடன் இணையும் நோக்குடன், படகில் தனுஷ்கோடி சென்ற இருவர் கைதாகியுள்ளனர். வுனியா தலைமன்னார் பகுதியைச் சோ்ந்த பெண்ணும், ஆணுமே

கைதாகியுள்ளனர்.தனுஷ்கோடியில் தஞ்சமடைந்த இவ்விருவரையும் தமிழக கடலோரப் பாதுகாப்பு பொலிஸார் அழைத்துச் சென்று (25) விசாரணை செய்து மண்டபம் முகாமில் தங்க வைத்தனர்.

வவுனியா பகுதியைச் சேர்ந்த ரபியத்துல் அலவியா (வயது 62) என்ற பெண்ணும், தலைமன்னார் பகுதியைச் சேர்ந்த நேசபெருமாள் (64) என்ற இருவருமே தஞ்சடைந்துள்ளனர்.

இதில், ரபியத்துல் அலவியாவின் மகள், மகன் உள்ளிட்டோர் தமிழகத்திலுள்ள அகதிகள் முகாமில் தங்கி இருப்பதாகவும், வெளிநாட்டில் வேலை செய்துவிட்டு இலங்கை வந்த அவர் தனது குடும்பத்தினருடன் சேர்ந்து வாழ்வதற்காக இலங்கையிலிருந்து படகோட்டிக்கு ரூ.50 ஆயிரம் கொடுத்து தனுஷ்கோடிக்கு சென்றதும் தெரியவந்தது.

விசாரணையின் பின்னர், இலங்கை தமிழா்கள் மறுவாழ்வு முகாமில் இவர்களை ஒப்படைத்ததாக பொலிஸார் தெரிவித்தனா்.

இதேபோல், நேசபெருமாளும் மன்னார் பகுதியை சேர்ந்தவரெனவும் இவரது குடும்பத்தினர் மண்டபம் அகதிகள் முகாமிலிருப்பதால் அவர்களுடன் சேர்ந்து வாழ்வதற்காக இங்கு வந்ததாகத் தெரிவித்துள்ளார்.

விசாரணைக்குப் பின்னர் 02 பேரும் மண்டபம் அகதிகள் முகாமில் ஒப்படைக்கப்பட்டுள்ளனர்.

# 'INFOTEL தகவல் தொழினுட்ப கண்காட்சி' நவம்பர் 03 முதல் 05 வரை BMICH இல்



ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் டிஜிட்டல் மயமாக்கப்பட்ட நவீன இலங்கையை கட்டியெழுப்பும் வேலைத் திட்டத்துடன் இணைந்ததாக, இலங்கை தகவல் தொழினுட்ப கைத்தொழில் சபையினால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள 'INFOTEL தகவல் தொழினுட்ப கண்காட்சி' நவம்பர் 03 ஆம் திகதி முதல் 05 ஆம் திகதி வரை கொழும்பு பண்டாரநாயக்க சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

தொழினுட்ப இராஜாங்க அமைச்சகத்தின் வழிகாட்டுதலின் கீழ் 'டிஜிட்டல் பொருளாதாரத்தை மேம்படுத்துதல்' என்ற தொனிப் பொருளில் இந்தக் கண்காட்சி ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

இது தொடர்பில் தெளிவுபடுத்தும் ஊடக மாநாடு தொழினுட்ப இராஜாங்க அமைச்சர் கனக ஹேரத்தின் தலைமையில் ஜனாதிபதி ஊடக மையத்தில் நேற்று (26) நடைபெற்றது.

இக்கண்காட்சி இலங்கையின் தகவல் தொடர்பாடல் தொழினுட்ப துறை வளர்ச்சிக்கு பெரிதும் உதவுமென இராஜாங்க அமைச்சர் சுட்டிக்காட்டினார்.

மேலும், டிஜிட்டல் பொருளாதாரம், இணைய இணைப்பை மேம்படுத்துதல் மற்றும் விரிவுபடுத்துதல், டிஜிட்டல் உட் கட்டமைப்பை மேம்படுத்துதல், பாதுகாப்பான டிஜிட்டல் கட்டமைப்புகள் மற்றும் தீர்வுகளை பாதுகாத்தல், பணமில்லா பரிவர்த்தனைகளை ஊக்குவித்தல் மற்றும் டிஜிட்டல் பொருளாதாரத்தை மேம்படுத்துவதற்குத் தேவையான மனித வளத்தை மேம்படுத்துதல் ஆகியவற்றுக்கு இந்த கண்காட்சி சிறந்த வாய்ப்பை வழங்கும் எனவும் இராஜாங்க அமைச்சர் சுட்டிக்காட்டினார்.

அபிவிருத்தியடைந்த நாடுகள் தமது பொதுச் சேவைகளை டிஜிட்டல் மயமாக்கியுள்ளதாகவும், இதனால் வினைத்திறன் அதிகரித்துள்ளதாகவும் சுட்டிக்காட்டிய இராஜாங்க அமைச்சர், 2030 ஆம் ஆண்டுக்குள் டிஜிட்டல் மயமாக்கப்பட்ட இலங்கையை கட்டியெழுப்பும் அரசாங்க வேலைத்திட்டத்தை வெற்றி கொள்ளும் நோக்குடன் 'INFOTEL தகவல் தொழினுட்ப கண்காட்சி' ஏற்பாடு செய்யப்பட்டமைக்காக, தகவல் தொழினுட்ப கைத்தொழில் சபைக்கு தனது நன்றிகளைத் தெரிவித்தார்.

இங்கு கருத்துத் தெரிவித்த இலங்கை தகவல் தொழினுட்ப கைத்தொழில் சபையின் தலைவர் இந்திக்க டி சொய்சா, 2030 ஆம் ஆண்டளவில் டிஜிட்டல் பொருளாதாரத்தினூடாக 15 பில்லியன் அமெரிக்க டொலர்களை வருமானமாக ஈட்ட எதிர்பார்ப்பதாக தெரிவித்தார். இக்கண்காட்சியானது டிஜிட்டல் புத்தாக்க சூழலை உருவாக்குவதோடு, டிஜிட்டல் கல்வியறிவை மேம்படுத்தவும், நாட்டில் டிஜிட்டல் தொழினுட்பத்தின் பயன்பாட்டை ஊக்குவிக்கவும் உதவும் என்று அவர் மேலும் சுட்டிக்காட்டினார்.

இந்தக் கண்காட்சிக்கான அனுசரணை காசோலைகளும் இதன்போது கையளிக்கப்பட்டன.

# 2023: இதுவரை 77 துப்பாக்கி சூட்டு சம்பவங்களில் 46 பேர் பலி

## ஆறு வயது சிறுமியும் உள்ளடக்கம்; பொலிஸ் தலைமையகம் தெரிவிப்பு

**லோரன்ஸ் செல்வநாயகம்**

இவ்வருடத்தின் (2023) இதுவரையான காலப்பகுதியில் இடம்பெற்ற 77 துப்பாக்கி சூட்டு சம்பவங்களில் 06 வயது சிறுமி உட்பட 46 பேர் உயிரிழந்ததாக பொலிஸ் தலைமையகம் தெரிவித்துள்ளது.

நாட்டுக்குள் துப்பாக்கிச் சூட்டு சம்பவங்கள் அதிகரித்து வருவதாக தெரிவித்துள்ள பொலிஸ் தலைமையகம்,தென் மாகாணத்திலேயே அதிகளவான துப்பாக்கிச் சூட்டுச் சம்பவங்கள் பதிவாகியுள்ளதாகவும் தெரிவித்துள்ளது.

இச்சம்பவங்களில் 35 பேர் காயமடைந்து பல்வேறு வைத்தியசாலைகளில் சிகிச்சை பெற்று வருவதாகவும் பொலிஸ் தலைமையகம் மேலும் தெரிவித்தது.

# மீகொடை தளபாட நிலையத்தில் துப்பாக்கி முனையில் கொள்ளை

## 80 இலட்சம் ரூபாவுடன் தலைமறைவு

கொழும்பு, மீகொடை பிரதேசத்திலுள்ள தளபாட மொத்த விற்பனை நிலையமொன்றில் ஆயுதங்களுடன் பிரவேசித்த இருவர், பணத்தை கொள்ளையிட்டு தப்பிச் சென்றுள்ளனர்.

சந்தேக நபர்கள் இருவரும், சுமார் 80 இலட்சம் ரூபாவை கொள்ளையடித்து தப்பிச் சென்றுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

மோட்டார் சைக்கிளில் வந்த இருவர், விற்பனை நிலையத்துக்குள் ஆயுதங்களுடன் நுழைந்து அச்சுறுத்தல் விடுத்து பணத்தை கொள்ளையிட்டுச் சென்றுள்ளனர்.

சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை மீகொடை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

தகவல் தந்து உதவுமாறும் பொலிஸார் வேண்டுவதுடன் இரகசியங்கள் பேணப்படும் என்றும் அறிவித்துள்ளனர்.

# வரிச்சலுகை கோரும் வகையில் இறைவரி சட்டத்தில் திருத்தம்

## அமைச்சரவை அனுமதி வழங்கியது

**லோரன்ஸ் செல்வநாயகம்**

தேசிய இறைவரி சட்டத்தை திருத்துவதற்காக சட்டமூலமொன்றை தயாரிக்க அரசாங்கம் உத்தேசித்துள்ளது.

இது தொடர்பான சட்டமூலத்தை தயாரிப்பதற்கு சட்டமூலம் தயாரிப்பதற்கான ஆலோசனைகளை வழங்க, பதில் நிதி அமைச்சரால் சமர்ப்பிக்கப்பட்டுள்ள அமைச்சரவைப் பத்திரத்திற்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

சமூகத்தில் வாழும் வலது குறைந்த பிள்ளைகளின் கல்வி, சுகாதாரம் ஆகியவற்றை சிறப்பாக முன்னெடுக்கும் நடவடிக்கைகளை மேற்கொள்வது மற்றும் அதற்காக

ஸ்தாபிக்கப்பட்டுள்ள நிலையான நிறுவனத்துக்கு வரிச் சலுகையை கோரும் வகையில் தேசிய இறைவரி சட்டத்தில் திருத்தம் கொண்டு வருவதற்கும் அமைச்சரவைப் பத்திரம் மூலம் யோசனைகள் முன்வைக்கப்பட்டுள்ளன.

ජාතික ලොතරැයි මණ්ඩලය
தேசிய லொத்தர் சபை
National Lotteries Board
திங்கட்கிழமை 2023.09.25
உத்தியோகபூர்வ முடிவுகள்
www.nlb.lk
NLB

மஹஜன சம்பத
சீட்டிழுப்பு இலக்கம் 5248
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 28,192,640.00
ஆங்கில எழுத்து W
வெற்றி இலக்கங்கள் 0 5 0 4 6 1

ராசி சுப பலன் Handahana
சீட்டிழுப்பு இலக்கம் 557
சீட்டிழுப்பு திகதி 2023-09-25
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 3,000,000.00
வெற்றி இலக்கினம் விருச்சிகம்
வெற்றி இலக்கங்கள் 08 17 50 62
விசேட இலக்கினம் விருச்சிகம்

லக்கி 7 Lucky 7 லக்கி
திகதி 25.09.2023
சீட்டிழுப்பு இலக்கம் 0074
வெற்றி இலக்கினம் கன்னி
வெற்றி இலக்கங்கள் 1 5 2 1 6 3
L7 இலக்கம் 0 4
அடுத்த சீட்டிழுப்புக்கான சுப்பர் பரிசு ரூ. 11,094,348.16

தன நிதானய
தேதி 2023/09/25
சீட்டிழுப்பு இலக்கம் 1278
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 112,131,977.60
ஆங்கில எழுத்து W
வெற்றி இலக்கங்கள் 28 58 64 71
விஷேசட ஆங்கில எழுத்து W
Double Chance இலக்கம் 02870

கொவிசெத
சீட்டிழுப்பு இலக்கம் 3490
சீட்டிழுப்பு திகதி 2023.09.25
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு Rs. 62,227,848.40
ஆங்கில எழுத்து N
வெற்றி இலக்கங்கள் 18 38 42 48
விசேட எழுத்து N
இலட்சாதிபதி டபள் சான்ஸ் வெற்றி இலக்கம் 20515

Mega Power
சீட்டிழுப்பு இலக்கம் 1596
25/09/2023
30449
அடுத்த மெகா சுப்பர் பரிசு ரூ. 408,861,580.00
அடுத்த பவர் சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00
அடுத்த கிராண்ட் சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00
ஆங்கில எழுத்து X
சுப்பர் இலக்கம் 11
வெற்றி இலக்கங்கள் 12 15 37 50

தினகரன் THINAKARAN

35, டி. ஆர். விஜயவர்தன மாவத்தை, கொழும்பு - 10

தபால் பெட்டி இலக்கம் : 834
தொலைபேசி இலக்கம் : 2429429, 2429272, 2429279
பெக்ஸ் : 2429270, 2429329, விளம்பர முகாமையாளர் : 2429321

சோபகிருது வருடம் புரட்டாதி மாதம் 11ஆம் நாள் புதன்கிழமை
ஹிஜ்ரி வருடம் 1445 ரபீஉனில் அவ்வல் பிறை 11

## குறள் தரும் சிந்தனை



நண்பாற்றார் ஆகி நயமில செய்வார்க்கும்
பண்பாற்றார் ஆதல் கடை

நட்புக்கு ஏற்றவராக இல்லாமல் தீமைகளையே செய்து கொண்டிருப்பவரிடம், நாம் பொறுமை காட்டிப் பண்புடையவராக நடந்து கொள்ளாவிட்டால் அது இழிவான செயலாகக் கருதப்படும்.

# போதைப்பொருள் குற்றங்களை தடுப்பதில் அதிக கவனம் தேவை!

இன்றைய காலகட்டத்தில் இலங்கை முகம்கொடுத்துள்ள பாரிய அச்சுறுத்தல்களில் போதைப்பொருள் குற்றங்கள் பிரதான இடத்தைப் பிடித்துள்ளன. அந்தளவுக்கு போதைப்பொருட்கள் சட்டவிரோதமான முறையில் நாட்டுக்குள் வந்து சேர்வதே இதற்கான காரணமாக உள்ளது.

ஒரு காலத்தில் கொழும்பில் காணப்பட்ட போதைப்பொருள் துஷ்பிரயோகங்களும் குற்றங்களும் இன்று கிராமம், நகரம் என்ற வேறுபாடுகள் இன்றி வியாபித்துக் காணப்படுகின்றன. கஞ்சா, ஐஸ் முதல் ஹெரோயின், கொக்கைன் வரையான கடும் பயங்கரமான போதைப்பொருட்களும் சட்டவிரோதமான முறையில் நாட்டுக்குள் வந்து சேரவே செய்கின்றன.

இந்த நிலையில் போதைப்பொருள் குற்றங்களைத் தடுக்கும் சட்டத்தை அமுல்படுத்தும் பிரிவினரின் தரவுகளின்படி, போதைப்பொருள் குற்றங்கள் மாத்திரமல்லாமல் அவற்றைப் பாவிப்போரினதும் விற்பனை செய்வோரினதும், கட்டத்தலில் ஈடுபடுவோரினதும் எண்ணிக்கை அதிகரித்தே காணப்படுகிறது. அதன் விளைவாகப் பாடசாலை மாணவர்கள் கூட போதைப்பொருள் பாவிக்கக் கூடியவர்களாக இருப்பது தெரியவந்துள்ளது.

இவ்வாறு போதைப்பொருள் பாவனை அதிகரிப்பது ஆரோக்கியமானதல்ல. அதன் விளைவாக உடல், உள ரீதியில் ஏற்படுகின்ற உபாதைகள் இலகுவில் குணப்படுத்தக்கக் கூடியவையும் அல்ல. அவற்றுக்கு சிகிச்சை அளிக்கவென பெருந்தொகை நிதியை செலவிட நேரிடும்.

அதேநேரம் போதைப்பொருள் பழக்கத்தின் ஊடாக வறுமையின் பிடிக்குள் தள்ளப்படுவதோடு, சமூக கலாசார சீரழிவுகளுக்கும் முகம்கொடுக்க நேரிடும். இவையும் சமூகத்தின் நற்பண்புகள் மற்றும் பழக்க வழக்கங்களில் வீழ்ச்சி ஏற்படவே வழிவகுக்கும்.

போதைப்பொருள் குற்றங்களால் சமூகமும் நாடும் முகம்கொடுக்கும் நெருக்கடிகளையும் சீரழிவுகளையும் கருத்தில் கொண்டு அவற்றைக் கட்டுப்படுத்துவதற்கான சட்டத்தை அமுல்படுத்தும் தரப்பினர் கடுமைப்படுத்தியுள்ளனர். அதற்கேற்ப போதைப்பொருள் குற்றங்கள் தொடர்பிலான கைதுகளும் தண்டனை வழங்குதல்களும் கூட அதிகரித்துள்ளன.

அத்தோடு போதைப்பொருள் குற்றங்களின் தீங்குகள் குறித்து மக்கள் மத்தியில் விழிப்புணர்வை ஏற்படுத்தும் நடவடிக்கைகளும் முன்னெடுக்கப்பட்டுள்ளன. சட்டவிரோதமான முறையில் போதைப் பொருட்கள் நாட்டுக்குள் கொண்டு வரப்படவே செய்கின்றன.அந்த வகையில் கடந்த ஞாயிறன்று 300 மில்லியன் ரூபா பெறுமதியான கொக்கைன் போதைப்பொருள் நாட்டுக்குள் கடத்தி வரப்பட்டமை குறிப்பிடத்தக விடயமாகும்.

இவ்வளவு தொகை பெறுமதியான போதைப் பொருள் இந்நாட்டுக்குள் கடத்தி வரப்பட்ட நிலையில் போதைப்பொருள் கட்டுப்பாட்டுக்கான சுங்கத் திணைக்கள அதிகாரிகள் கைப்பற்றியுள்ளனர்.

ஆனால் இப்போதைப்பொருளை இந்நாட்டுக்குள் கடத்தி வரப்பட்டுள்ள முறை பலர் மத்தியில் ஆச்சரியத்தை ஏற்படுத்தி உள்ளது. கிழக்கு ஆபிரிக்க நாடான கென்யாவைச் சேர்ந்த 34 வயது மதிக்கத்தக்க நபர் ஒருவர் தான் இப்போதைப்பொருள் கடத்தலை மேற்கொண்டுள்ளார்.

கென்யாவைச் சேர்ந்தவர் என்றாலும் வடஆபிரிக்க நாடான எதியோப்பியாவில் இருந்துதான் இந்த போதைப்பொருளை இங்கு கடத்தி வந்துள்ளார். எதியோப்பியாவின் அடிஸ்அபாபா விமான நிலையத்திலிருந்து கட்டார் நாட்டின் டோஹா விமான நிலையத்தின் ஊடாக கட்டுநாயக்க சர்வதேச விமான நிலையத்தை சட்டவிரோத கொக்கையுடன் வந்தடைந்துள்ளார். நான்கு கிலோ கிராம் கொக்கெய்ன் போதைப்பொருளை மூன்று பிஸ்கட் ரின்களில் சூசகமான முறையில் மறைத்து வைத்தே இங்கு கொண்டு வந்துள்ளார். அதனை இந்நாட்டு போதைப்பொருள் தடுப்பு பிரிவினர் உடனடியாகச் செயற்பட்டு இக்கடத்தலை முறியடித்து போதைப் பொருளைக் கைப்பற்றியுள்ளனர்.

இந்நபர் கென்யாவிலிருந்து நேரடியாகவே டோஹாவுக்கு பயணித்திருக்க முடியும். அதனை தவிர்த்து கென்யாவில் இருந்து எதியோப்பியாவுக்கு சென்று அங்கிருந்து டோஹாவுக்கு விமானத்தில் பயணித்து கட்டுநாயக்க சர்வதேச விமான நிலையத்தை வந்தடைந்திருக்கிறார்.

எத்தனையோ ஆயிரம் கிலோ மீற்றர்களுக்கு அப்பால் உள்ள கென்யாவைச் சேர்ந்த இந்நபர் எவ்வளவு தூரம் சூட்சுமமான முறையில் இந்த நான்கு கிலோ போதைப்பொருளையும் இங்கு கடத்தி வந்துள்ளார் என்பது தெளிவாகிறது. இதன் ஊடாக சட்டவிரோத போதைப்பொருள் மூலம் கிடைக்கப்பெறும் வருமானம் எத்தகையது என்பதை எவராலும் இலகுவாகப் புரிந்து கொள்ளலாம்.

ஆகவே போதைப்பொருள் குற்றங்களை முழுமையாகக் கட்டுப்படுத்தி தவிர்த்துக் கொள்வதில் கூடுதல் கவனம் செலுத்தப்பட வேண்டும். அதன் ஊடாக போதைப்பொருள் குற்றங்கள் அற்ற தேசத்தை உருவாக்க முடியும். அதுவே மக்களின் எதிர்பார்ப்பும் ஆகும்.

editor.tkn@lakehouse.lk

# வரலாற்றுப் பிரசித்திபெற்ற பாண்டிருப்பு திரௌபதையம்மன் வனவாசம் இன்று



இலங்கையில் வரலாற்றுப் பிரசித்தி பெற்ற பாண்டிருப்பு திரௌபதை அம்மன் ஆலய வருடாந்த உற்சவம் கடந்த 12 ஆம் திகதி திருக்கதவு திறத்தல், கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி நடைபெற்று வருகிறது.

மகாபாரத இதிகாசக் கதையினை நினைவுகூரும் வகையில் 18 தினங்கள் நடைபெறும் உற்சவத்தில் இன்று 27 ஆம் திகதி புதன்கிழமை பாண்டவர்கள், திரௌபதை சகிதம் வனவாசம் செல்லும் நிகழ்வு நடைபெறுகிறது. மகாபாரதத்தில் பாண்டவர்கள் சூதாட்டத்தில் தோல்வி அடைந்து நாடு, நகர் இழந்து 12 ஆண்டுகள் வனவாசம், ஒரு ஆண்டு அஞ்ஞாத வாசம் சென்றார்கள். இதனை உணர்த்தும் வகையில் பாண்டிருப்பு திரௌபதை அம்மன் ஆலயத்தில் பாண்டவர்கள் வனவாசம் செல்லும் நிகழ்வு நடித்துக் காண்பிக்கப்படுகின்றது.



இதன்போது ஆயிரக்கணக்கான பக்தர்கள் தங்கள் நேர்த்திக்கடனை நிறைவேற்றும் வகையில் காவடிகள், கற்பூரச்சட்டிகள் எடுத்தும், கால்நடையாகவும் பஞ்சபாண்டவர்களுடன் பாண்டிருப்பில் இருந்து புறப்பட்டு நற்பட்டிமுனை, சேனைக்குடியிருப்பு ஆகிய கிராமங்களுடாகச் சென்று 'துரியோதனன் நாடு' என அழைக்கப்படும் மேட்டுவட்டை வயல் சார்ந்த இடத்தினூடாக அஞ்ஞாதவாசம் மேற்கொண்டு மீண்டும் திரௌபதை அம்மன் ஆலயத்தை வந்தடைவர்.

இதனையடுத்து 28 ஆம் திகதி அருச்சுனன் பாசுபதம் பெறுவதற்காக தவநிலை செல்லும் காட்சி நள்ளிரவு 12 மணிக்கு இடம்பெறவுள்ளது. இதன் போது அருச்சுனன் இடர்கொள்ளும் துன்பங்கள் காட்சிகளாக நடித்துக் காண்பிக்கப்படும்.

29 ஆம் திகதி வெள்ளிக்கிழமை மாலை 5 மணியளவில் தீப்பள்ளய உற்சவத்தின் சிகரம் எனப் போற்றப்படும் தீமிதிப்பு வைபவம் நடைபெறவுள்ளது. இதன் போது பாண்டவர்கள், திரௌபதை, கிருஷ்ணர் தேவாதிகள் சகிதம் கடலில் குளித்து, உடல் முழுதும் மஞ்சள்பூசி தீயில் இறங்கும் கண்கொள்ளாக்காட்சி இடம்பெறவுள்ளது. மறுநாள் 30 ஆம் திகதி தருமருக்கு முடி சூட்டி, தீக்குளிக்கு பால்வார்க்கும் சடங்குடன் இரவு 7 மணிக்கு இந்து இளைஞர் மன்றத்தின் ஏற்பாட்டில் திரௌபதை அம்மன், கிருஷ்ணர் முத்துச் சப்புறத்தில் எழுந்தருளி ஊர்வலம் செல்லும் நிகழ்வுடன் உற்சவம் நிறைவுபெறவுள்ளது.

பாண்டிருப்பு திரௌபதை அம்மன் ஆலய உற்சவத்தின் இறுதி மூன்று நாட்களும் விசேட பஸ் சேவைகள் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன.

**துஜியந்தன்...**
*(பாண்டிருப்பு தினகரன் நிருபர்)*

# நிந்தவூர் கடலரிப்பை கட்டுப்படுத்த இரண்டாம் கட்ட நடவடிக்கை



நிந்தவூர் பிரதேசத்தில் பல வருடங்களாக இடம்பெற்றுவரும் கடலரிப்பைக் கட்டுப்படுத்துவதற்கான வேலைத்திட்டங்கள் நிந்தவூர் பிரதேச சபையின் முன்னாள் பிரதிதவிசாளர் வை.எல். சுலைமாலெவ்வையின் முயற்சியின் கீழ் நடைமுறைப்படுத்தப்பட்டுவருகின்றன. இதன் இரண்டாம் கட்ட வேலைகளை ஆரம்பிப்பதற்கு தற்போது நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

இது விடயம் சம்பந்தமாக அண்மையில் கரையோர பாதுகாப்பு மற்றும் கரையோர வளங்கள் முகாமைத்துவ திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம் பொறியியலாளர் ஆர். ஏ.எஸ். ரணவக்கவை அமைச்சில் வைத்து சுலைமாலெவ்வை சந்தித்து கலந்துரையாடியுள்ளார். இதன் பலனாக இரண்டாம் கட்ட வேலைத்திட்டங்களை ஆரம்பிப்பதற்கு ஒருகோடி எழுபது இலட்சம் ரூபா ஒதுக்கீடு செய்வதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.இந்தியா சென்றுள்ள பணிப்பாளர் நாயகம் ஆர்.ஏ.எஸ். ரணவக்க நாடு திரும்பியதும், இதன் அடுத்த கட்ட வேலைத்திட்டம் ஆரம்பிக்கப்படவுள்ளது.



**பிரதேசசபையின் முன்னாள் பிரதித்தவிசாளர் சுலைமான் முயற்சியினால் பலன்**

இப்பிரதேசம் கடல் அரிப்பினால் முற்றாகப் பாதிக்கப்பட்டு வருவதுடன், பல்வேறு இழப்புக்களையும் இதன் மூலம் இப்பிரதேச மக்கள் சந்தித்து வருகின்றனர். அத்துடன் நிந்தவூர் அட்டப்பள்ளம் பிரதேச இந்து மயானத்தில் நல்லடக்கம் செய்யப்பட்ட உடல்கள் கடல் அரிப்பினால் அள்ளுண்டு சென்ற சம்பவங்களும் இடம்பெற்றுள்ளன. இந்த நிலையிலேயே நிந்தவூர் பிரதேசத்தில் கடலரிப்பினைக் கட்டுப்படுத்தும் இரண்டாம் கட்ட வேலைத்திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்படவுள்ளன.

இது தவிர நிந்தவூர் ஜேர்மன் பாடசாலையின் பின்னால் ஆரம்பித்து வைக்கப்பட்ட கிராமிய பாலத்தின் இரண்டாம்கட்ட நிர்மாணப்பணிகளை மீண்டும் ஆரம்பிப்பதற்கான நடவடிக்கைகளையும் முன்னாள் பிரதிதவிசாளர் சுலைமாலெவ்வை மேற்கொண்டுள்ளார். இவ்விடயம் சம்பந்தமாக அமைச்சர் பந்துல குணவர்தனவின் கவனத்திற்கு கொண்டு வந்துள்ளதுடன், இது பற்றி வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் பணிப்பாளர் நாயகம் எல்.வி.எஸ். வீரக்கோனை அவரது அலுவலகத்தில் சந்தித்து நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளார். இதன் இரண்டாம் கட்ட நிர்மாணப்பணிகள் விரைவில் ஆரம்பிக்கப்படவுள்ளன.

குறித்த பலமானது நிந்தவூர் அட்டப்பள்ளம் பிரதேச மாணவர்கள் கல்வி பயிலும் ஜேர்மன் நட்புறவுப் பாடசாலைக்குச் செல்லும் வீதியில் புதிதாக அமைக்கப்படவுள்ள பாலமாகும்.

# தினகரன் முன்னாள் நிருபர் முஸ்தபா எம். ஜிப்ரி மறைவு ஈடுசெய்ய முடியாத இழப்பு



அநுராதபுரம் மிகிந்தலை கட்டுகெலியாவ கிராமத்தைச் சேர்ந்த முஹம்மது முஸ்தபா (ஆசிரியர்) அலீமா உம்மா தம்பதிகளின் புதல்வரான மர்ஹூம் முஸ்தபா முஹம்மது ஜிப்ரி கஹடகஸ்திகிலிய துருக்கராகம கிராமத்தை வசிப்பிடமாகக் கொண்டவர்.

ஒரு ஆசிரியராக தனது தொழில் பயணத்தை ஆரம்பித்த இவர், மரணிக்கும் போது கலன்பிந்துனுவெவ கல்வி வலயத்தில் ஆசிரிய ஆலோசகராகப் பணியாற்றிக் கொண்டிருந்தார். இது தவிர ஊடகவியலாளராகவும், எழுத்தாளராகவும், அறிவிப்பாளராகவும், சித்திரக் கலைஞராகவும், பேச்சாளராகவும், சிறந்த குரல்வளம் கொண்ட பாடகராகவும் விளங்கிய இவர், சிறந்த தொரு ஆசிரியராக, பள்ளிவாசல் நிர்வாகியாக, சமூகசேவை அமைப்புகளின் போசகராகத் திகழ்ந்தார்.

தினகரன் பத்திரிகையின் இப்பகுதி பிராந்திய நிருபராக நீண்ட காலம் பணியாற்றியதோடு, இலங்கையின் தேசியப் பத்திரிகைகள் பலவற்றில் இவரால் எழுதப்பட்ட கட்டுரை, கவிதை, கதைகள் வெளிவந்துள்ளன. இவர் எழுதி வெளியிட்ட 'மிஹ்ராஜ் ஓர் அற்புதப் பயணம்' என்ற நூல் குறிப்பிடத்தக்கது.

பாலர் பாடசாலை ஒன்றை கிராமத்தில் ஆரம்பித்தல், அஹதியாப் பாடசாலையை ஆரம்பித்தல், வை.எம்.எம்.ஏ கிளையைத் தாபித்தல் உள்ளிட்ட பல பணிகளில் முன்னோடியாக விளங்கிய இவர், அவற்றின் வளர்ச்சிக்குத் துணை நின்றார். ஊரில் இயங்கிய ஜனசா நலன்புரிச் சங்கம், இளைஞர் கழகம், பழைய மாணவர் சங்கம் என்பனவற்றின் ஆலோசகராகவும் வழிகாட்டியாகவும் செயற்பட்டார்.

சமாதான நீதவானாகவும், சமாதான நீதி மன்றத்தின் /சமரச சபையின் உபதலைவராகவும், துருக்கராகம வை.எம்.எம்.ஏ, துருக்கராகம அஹதியா பாடசாலை, பள்ளி நிர்வாகசபை உள்ளிட்ட பல்வேறு அமைப்புக்களில் தலைவர், செயலாளர், கணக்குப் பரிசோதகர், ஆலோசகர் போன்ற பல பதவிகளை வகித்துள்ளார்.

துருக்கராகம முஸ்லிம் வித்தியாலயம் உள்ளிட்ட பல பாடசாலைகளில் ஆசிரியராக கடமையாற்றிய இவர், மாணவர்களின் கல்வி முன்னேற்றத்திற்கும் மற்றும் பாடசாலைகளின் அபிவிருத்திக்கும் செய்த சேவைகள் எண்ணிலடங்காதவை. 2005 ஆம் ஆண்டு கல்வி அமைச்சினால் சிறந்த ஆசிரியராக தெரிவு செய்யப்பட்டு 'வித்தியா கீர்த்தி ஶ்ரீ' பட்டம் வழங்கி பாராட்டி கௌரவிக்கப்பட்டார்.

தமிழ், சிங்களம், ஆங்கிலம், அரபு ஆகிய நான்கு மொழிகளிலும் மிகவும் அழகாகவும், நேர்த்தியாகவும் எழுதக் கூடிய ஆற்றலை இவர் பெற்றிருந்தார்.

இவர் அஷ்ரப் நுபைனா பாலர் பாடசாலை ஆசிரியையின் கணவராவார். மர்ஹூம் எம். எம். ஜிப்ரி தனது 55 ஆம் வயதில் அண்மையில் காலமானார். இவரின் மறைவு இந்தப் இப்பிரதேசத்திற்கு ஈடுசெய்ய முடியாத இழப்பாகும்.

**கிரிபாவையூரான் ஏ.எம்.எம்...**

# AgStar-NETAFIM TM புதிய ஒப்பந்தத்தின் மூலம் விவசாயிகளுக்கான நீர்ப்பாசன தீர்வுகள்

NETAFIM நிறுவனத்துடன் AgStar புதிதாக செய்துகொண்ட ஒப்பந்தமானது பயிச்செய்கையாளர்கள், சிறு விவசாயிகள் மற்றும் உள்ளூர் தோட்டச்செய்கையாளர்களுக்கு பயனளிக்கும் வகையில் வடிவமைக்கப்பட்ட ஒரு கூட்டாண்மையாகும்.

AgStar என்பது இலங்கையின் முன்னணி உரம், பயிர் பராமரிப்பு, விதைகள் மற்றும் விவசாய தொழில்நுட்ப சேவைகளை வழங்கும் ஒரு நிறுவனமாகும். ஒரு முன்னோடியான விவசாய உள்ளீட்டு விநியோகஸ்தர் என்ற முறையில் இப்போது உலகின் மிகப் பெரிய நீர்ப்பாசன தீர்வுகளுக்கான சூத்திரங்களைக் கொண்ட முன்னோடிகளான NETAFIM இஸ்ராயேல் நிறுவனத்துடன் கூட்டிணைந்துள்ளது.



NETAFIM நிறுவனமானது உலகளாவிய உணவுப் பற்றாக்குறையை தீர்ப்பது போன்ற சவால்களுக்கு முகம் கொடுக்கும் Orbia அமைப்பின் பங்குதாரராகும். இவர்களுடைய நீர்ப்பாசன உபகரணங்கள் Drippers, DripperLines, Sprinklers and MicroEmitters போன்றவற்றுக்கு மிகவும் அனுசரணையாக இருக்கின்றது.

உலகளவில் 2 மில்லியனுக்கும் அதிகமான விவசாயிகளுடன் தொடர்புடைய இந்நிறுவனமானது 200 ஹெக்டெயர் தொடங்கி 0.2 ஹெக்டெயர் வரையிலான விவசாய நிலத்தினைக் கொண்ட விவசாயிகளுக்கான நீர்ப்பாசன தீர்வுகளை வழங்கியுள்ளது.

பயிர்வகை, தட்பவெப்பம், மண்வகை எதுவாக இருந்தாலும் சரியான அளவு நீர் மற்றும் ஊட்டச் சத்துக்களை ஏற்ற நேரத்தில், ஏற்ற அளவுகளில் பயிர்களுக்கு வழங்குவதன் மூலம் பயிர்கள் உகந்த விதத்தில் வளரும். இதுவே விவசாயத்திற்கான தனித்துவமான மற்றும் நிலையான அணுகுமுறையாகும்.

கடந்த இரண்டு தசாப்தங்களாக இந்நிறுவனமானது இலங்கையின் வேளாண்மை மற்றும் பயிற்சிக்காக அதிகளவில் முதலீடு செய்துள்ளது.

NETAFIM நிறுவனத்தின் செயற்பாடுகளானது சிறு மற்றும் குறும் விவசாயிகளுக்காக பிரத்தியேகமாக வடிவமைக்கப்பட்ட மற்றும் மலிவு விலையிலான பலவகையான தயாரிப்புக்களை அறிமுகப்படுத்த உதவியுள்ளது. NETAFIMநிறுவனம் குடுநுஓNநுவு உள்ளிட்ட நீர்ப்பாசன உபகரண தயாரிப்புக்களுக்காக நூற்றுக்கும் மேற்பட்ட காப்புரிமைகளைப் பெற்றுள்ள காரணத்தினால் விவசாயிகளுக்கு தரம் மற்றும் மலிவு விலையை உறுதி செய்கின்றது.

இந்நிறுவனத் தயாரிப்பான FLEXNET PIPES தற்போது நீர்க்கசிவு, நீர்வடிதல் போன்ற பிரச்சினைகளுக்கு நிரந்தரத் தீர்வாக அமைவதோடு உலக சந்தையில் தனக்கென முன்னணி இடத்தை தக்கவைத்துள்ளதுடன், மலிவு விலை, நம்பகத்தன்மை மற்றும் விற்பனைக்குப் பிந்திய சேவையையும் உறுதி செய்கின்றது.

# சீனன் கோட்டை நளீம் ஹாஜியார் மாவத்தை முர்ஸியா ஷாதுலிய்யா ஸாவியாவின் வருடாந்த ஸுப்ஹான மௌலித் மஜ்லிஸ்

## தென்னிந்திய இஸ்லாமிய அறிஞர் பேராசிரியர் அபூதாஹிர் (பாகவி) விஷேட சொற்பொழிவாற்றினார்





இறைந்தூதர் முஹம்மத் ஸல்லல் லாஹூ அலைஹிவஸல்லம் அவர்கள் அவதரித்த இந்த புனித ரபியுனில் அவ்வல் மாதத்தினை முன்னிட்டு பேருவளை சீனன் கோட்டை பகுதியில் உள்ள பள்ளிவாசல்கள், ஷாதுலிய்யா ஸாவியாக்கள் மற்றும் இஹ்வான்களின் வீடுகளில் சுப்ஹான மௌலித் மஜ்லிஸ் மற்றும் விஷேட மார்க்கச் சொற்பொழிவுகள் தொடர்ந்து நடைபெற்று வருகிறது. அந்த வகையில் நளீம் ஹாஜியார் மாவத்தை முர்ஸிய்யா ஷாதுலிய்யா ஸாவியாவில் இரண்டாவது வருடமாக கடந்த 23 ஆம் திகதி (23.09.2023) மாலை ஸாவியா பிரதம இமாம் மௌலவி முஹம்மத் இஸ்மத் (முர்ஸி) தலைமையில் மிகச் சிறப்பாக நடைபெற்றது.

சீனன் கோட்டை பள்ளிச் சங்கத்தின் வழிகாட்டலின் கீழ் மேற்படி ஸாவியா பரிபாலன கமிட்டி பிரதேச ஜமாஅத்தாரின் பங்களிப்புடன் ஏற்பாடு செய்த இம் மஜ்லிஸில் இந்தியா சேலம் நூருல் இஸ்லாம் அரபுக் கல்லூரி முதல்வர் பேராசிரியர் அப்ழலுல் உலமா மௌலவி அல்ஹாஜ் அபூதாஹிர் (பாகவி) விஷேட சொற்பொழிவாற்றினார்.

இப்பிரதேச இஸ்லாமியர்கள் இறைத் தூதரின் பிறந்த தினத்தை முன்னிட்டு ஸூப்ஹான மௌலித் மஜ்லிஸ், ஸலவாத் மஜ்லிஸ், நபிகளாரின் அழகிய முன்மாதிரிகள் தொடர்பில் மார்க்கச் சொற்பொழிவுகள் மற்றும் அன்னதானம் வழங்கி சிறப்பிப்பதை அவர் பெரிதும் பாராட்டிப் பேசினார்.

இறைத்தூதர் நபி முஹம்மத் (ஸல்) அவர்களின் வாழ்க்கை வரலாறு மற்றும் அழகிய முன்மாதிரிகள் தொடர்பில் அவர் நீண்டதொரு சொற்பொழிவை நிகழ்த்தினார்.

கலீபதுஷ் ஷாதுலி மௌலவி எம்.எம் ஸைனுலாப்தீன் (பஹ்ஜி) திக்ர் (ஹழரா)













மஜ்லிஸை நடாத்தினார். மௌலவி ரயீஸூல் முகத்தமுஷ் ஷாதுலி முஹம்மத் பாரூக் (மக்கி) துஆப் பிராத்தனை நடாத்தினார்.

அஸர் தொழுகையைத் தொடர்ந்து ஸூப்ஹான மௌலித் மஜ்லிஸூம் மஃரிப் தொழுகையைத் தொடர்ந்து வலீபா யாகூதிய்யா மற்றும் திக்ர் (ஹழரா) நிகழ்வும் துஆப் பிராத்தனையும் இடம் பெற்றதோடு இஷாத் தொழுகையின் பின்னர் விஷேட மார்க்கச் சொற்பொழிவும் நடைபெற்றது.

சீனன் கோட்டை பள்ளிச்சங்கத் தலைவர் ஏ.எச். எம் முக்தார் ஹாஜியார், உபதலைவர் அஷ் ஷெய்க் எம்.எஸ்.எம் ரில்வான் (நளீமி), பள்ளிச்சங்க உறுப்பினரும் அகில இலங்கை ஜம்மியதுல் ஒலமாவின் நிறைவேற்றுக் குழு உறுப்பினருமான அஷ்ஷெய்க் இஹ்ஸானுத்தீன் அபுல் ஹஸன் (நளீமி) உட்பட பள்ளிச் சங்க உறுப்பினர்கள், உலமாக்கள், பிரதேச மூத்த இஹ்வான்களான நயீம் ஹாஜியார், முஹம்மத் பாஸி ஹாஜியார், கலாநிதி எம். இஸட்.எம் நிஸார் ஹாஜியார், முகத்தமுஷ் ஷாதுலி ஹூஸைன் ஹாஜியார், முஹம்மத் ரபா ஹாஜியார் உட்பட பெருமளவிலான இஹ்வான்கள் நிகழ்வில் கலந்து கொண்டனர். இறுதியில் அன்னதானமும் வழங்கப் பட்டது.

**பேருவளை பீ.எம் முக்தார்...**

# உள்ளத்துக்கு புத்துணர்ச்சியும் அமைதியும் தருவது சுற்றுலா

## உலக சுற்றுலா தினம் இன்று




சுற்றுலா செல்ல விரும்பாத மனிதர்கள் யாரும் உலகில் இருக்க முடியாது. சுற்றுலா மனிதனுக்கு பல்வேறு உலகங்களை அறிமுகப்படுத்துவதன் வாயிலாக, பல்வேறு கலாசாரங்களைக் கற்றுக் கொள்ள வழிவகுக்கிறது. பல்வேறு இடங்களை காண்பதால் மனிதன் மனதில் புத்துணர்ச்சி ஏற்படுகிறது.

மலைகள், நீர்வீழ்ச்சி, தீவுகள், உலக அதிசயங்கள், கட்டடங்கள், கேளிக்கை பூங்காக்கள், கடற்கரை என உலகில் பல்வேறு வகையான சுற்றுலா இடங்கள் உள்ளன.

கல்விச் சுற்றுலா, மகிழ்ச்சிச் சுற்றுலா, வியாபாரச் சுற்றுலா, சுற்றுச்சூழல் சுற்றுலா, பாரம்பரிய சுற்றுலா, கலாசார சுற்றுலா என பல வகைகள் உள்ளன. சுற்றுலா மூலம் மனித குலத்தை மேம்படுத்தும் வகையில், செப்டம்பர் 27 ஆம் திகதியை உலக சுற்றுலா தினமாக 1970 ஆம் ஆண்டில் ஐ.நா. சபை அங்கீகரித்து அறிவித்தது. அன்று முதல் சுற்றுலா தினம் உலகம் முழுவதும் கொண்டாடப்பட்டு வருகிறது.

உலகம் முழுவதும் தற்போது சுற்றுலா தொழிலில் 2 கோடி 31 இலட்சம் பேர் ஈடுபட்டுள்ளனர். சுற்றுலா மூலமாகவே பல்வேறு நாடுகளிலும் வெவ்வேறு தொழில்கள் வளர்ந்து வந்துள்ளன.

ஈஸ்டர் குண்டுத் தாக்குதலால் இலங்கையில் சுற்றுலாத்துறை முற்றாகப் பாதிக்கப்பட்டது. அதன் பின்னர் கொவிட் தொற்றினால் சுற்றுலாத்துறை பாதிக்கப் பட்டது. தற்போது படிப்படியாக சுற்றுலாத் துறை வளர்ச்சியடைந்து வருகின்றது.

போக்குவரத்தும் தொடர்புத்துறையும் மேம்பட்டுவரும் இக்காலத்தில் சுற்றுலாத்துறையும் வளர்ச்சி கண்டு வருகின்றது.

நவீன காலத்தில் சுற்றுலாப்பயணிகளை கவருவதற்காக பல்வேறு செயற்றிட்டங்கள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. நாடு கடந்து வரும் சுற்றுலாப்பயணிகளை கவருவதற்காக பல்வேறு ஏற்பாடுகள் செய்து



கொடுக்கப்படுகின்றன. மூன்றாம் உலக நாடுகளில் சுற்றுலா பெரும் வருவாய் ஈட்டித்தரும் துறையாகப் நோக்கப்பட்டாலும் பல கேடுகளையும் பாதிப்புகளையும் கொண்டுள்ளதையும் அவதானித்தல் வேண்டும். எனவே சுற்றுலாத்துறை வருமானத்தை ஈட்டித்தரும் அதேவேளை சுற்றாடலுக்கு அது அச்சுறுத்தலாகவும் அமைகிறது. சுற்றுலாவுக்கு அடிப்படையானது சுற்றாடலாகும். திட்டமில்லாத, கட்டுப்பாடில்லாத சுற்றுலா, சுற்றாடலில் மோசமான விளைவுகளை ஏற்படுத்தியுள்ளது.

ஹோட்டல் கழிவுகள், நீர்மாசமடைதல், சட்டவிரோத குடிசைகளும், விடுதிகளும், சுண்ணக்கற்பாறை அகழ்வு போன்றன சுற்றாடலைப் பாதிக்கின்றன. இதைவிட மறைமுகமாக சுற்றுலாத்துறையுடன் சங்கமித்துள்ள பாலியல் சுற்றுலா, கடற்கரைச் சிறுவர்கள், போதை வஸ்து பாவனையும் கடத்தலும், அந்நியரின் ஆபாசங்கள், கசினோ சூதாட்டம் என்பன பௌதிகச் சுற்றாடலை மட்டுமன்றி பண்பாட்டுச் சூழலையும் சீரழிக்கின்றன.

**நடராஜன் ஹரன்...**
*(பனங்காடு)*

# சுகாதாரத்துறையில் 36 வருட சேவையிலிருந்து ஓய்வு



கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனையின் கீழ் உள்ள பிராந்திய மருந்து விநியோகப் பிரிவின் பொறுப்பதிகாரியாக சுமார் 17 வருடங்கள் கடமையாற்றிய மருந்தாளர் ஐ.எல்.அப்துல் றகுமான் தனது 36 வருட கால அரசசேவை சுகாதாரப் பணியில் இருந்து ஓய்வு பெற்றுள்ளார்.

அட்டாளைச்சேனை 4ஆம் பிரிவைச் சேர்ந்த இப்றா லெப்பை_ஆசறா உம்மா தம்பதிகளுக்கு 1963.12.20 ஆம் திகதி மூத்த புதல்வனாக பிறந்த அப்துல் றகுமான் தனது ஆரம்பக் கல்வி மற்றும் உயர்கல்வியினை அட்டாளைச்சேனை முஸ்லிம் மத்திய கல்லூரியில் (தேசிய பாடசாலை) கற்றார்.

1986 ஆம் ஆண்டு அம்பாறையில் மருந்து கலவையாளர் பயிற்சியினை நிறைவு செய்து 1987.10.01 திகதி மருந்து கலவையாளராக நியமனம் பெற்றார். அக்காலப்பகுதியில் அம்பாறை மற்றும் பொத்துவில் வைத்தியசாலைகளிலும் கடமையாற்றினார்.

1996 ஆம் ஆண்டு நடைபெற்ற மருந்தாளர்களுக்கான போட்டிப் பரீட்சைக்கு தோற்றி சித்தியடைந்த அவர், கொழும்பு மருத்துவக் கல்லூரியில் இரண்டு வருடங்கள் மருந்தாளர் பயிற்சினை நிறைவு செய்து மருந்தாளராக நியமனம் பெற்றார். அதன் பின்னர் அங்கொடை மனநல வைத்தியசாலை, மட்டக்களப்பு போதனா வைத்தியசாலை, அக்கரைப்பற்று ஆதார வைத்தியசாலை போன்றவற்றில் மருந்தாளராகவும் கடமையாற்றினார்.

2005.01.13ஆம் திகதி இக்கட்டான சூழ்நிலையில் கல்முனை பிராந்திய மருந்து விநியோகப் பிரிவில் பொறுப்பு உத்தியோகத்தராகக் கடமையேற்றார். சுமார் 17வருடங்கள் அங்கு கடமையாற்றிய அவர், 2006 தொடக்கம் 2014 வரையான காலப் பகுதிகளில் பதில் பிராந்திய மருந்தாளராகவும் பணியாற்றினார்.

அவர் அதிகாரிகள், சக உத்தியோகத்தர்கள், ஊழியர்களால் நேசிக்கப்பட்டார். சுகாதாரத்துறையில் நன்மதிப்பைப் பெற்று விளங்கினார். ஐ.எல்.அப்துல் றகுமான் கடந்த 2023.09.20 ஆம் திகதி சுகாதாரத்துறையிலிருந்து ஓய்வு பெற்றார்.

அவருடைய பணியை பாராட்டி கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனையினால் ஏற்பாடு செய்யப் பட்ட சேவை நலன் பாராட்டு விழா பணிப்பாளர் வைத்திய கலாநிதி ஐ.எல்.எம்.றிபாஸ் தலைமையில் இடம்பெற்றது.

றகுமானின் சேவையினை பாராட்டி பலரும் பொன்னாடை போர்த்தி நினைவுச் சின்னம் வழங்கி கௌரவித்தனர்.

**ஆதம்லெப்பை றியாஸ்...**
*(பாலமுனை விசேட நிருபர்)*

# நிலஅளவைத் திணைக்களத்தின் 54 ஆவது ஆணையாளர் நாயகமாக சுதத் பெரேரா





இலங்கையின் பழைமைமிகு அரச நிறுவனங்களில் ஒன்றான நிலஅளவைத் திணைக்களத்தின் ஐம்பத்து மூன்றாவது நில அளவையாளர் நாயகமான எஸ். சிவானந்தராஜா அரசசேவையிலிருந்து ஓய்வு பெற்றதையடுத்து, திணைக்களத்தின் ஐம்பத்து நான்காவது நில அளவையாளர் நாயகமாக டபிள்யு.சுதத் எல். ஸீ.பெரேரா அண்மையில் தனது பதவிப் பொறுப்புக்களை ஆரம்பித்தார்.

இலங்கை நிலஅளவைத் திணைக்களத்தின் ஐம்பத்து மூன்றாவது நிலஅளவையாளர் நாயகமாக கடமையாற்றிய எஸ். சிவானந்தராஜா அரச சேவையிலிருந்து அண்மையில் ஓய்வு பெற்றார். இதனையடுத்தே புதிய நில அளவையாளர் நாயகமாக சுதத் பெரேரா நியமனம் பெற்றார்.

இலங்கை நிலஅளவைத் திணைக்களத்தின் 223 ஆவது வருட நிறைவு தினம் கடந்த ஓகஸ்ட் மாதம் இருபத்தோராம் திகதி அனுஷ்டிக்கப்பட்டது. 'உலகளாவிய நில அளவையாளர் தினத்துக்கு' சமாந்தரமாக பிரதி வருடமும் ஓகஸ்ட் மாதம் இருபத்தோராம் திகதி நிலஅளவையாளர் தினம் எமது நாட்டில் நினைவு கூரப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

இலங்கையின் பழைமைமிகு அரசாங்க நிறுவனங்க ளில் ஒன்றான நிலஅளவைத் திணைக்களம் ஆயிரத்து எண்ணூறாம் ஆண்டு (1800) ஓகஸ்ட் மாதம் இரண்டாம் திகதி ஆரம்பிக்கப்பட்டுள்ளது. அரச காணிகளின் நிலஅளவை விபரங்கள் உள்ளிட்ட நிலஅளவீடு பணிகளும் இந்த திணைக்களத்தினால் மேற்கொள்ளப்படுகின்றன.

இலங்கை நிலஅளவைத் திணைக்களம் கடந்த இருநூற்று இருபது வருட காலத்தில் சுமார் ஐம்பது நிலஅளவையாளர் நாயகங்களின் கீழ், நில அளவை வரைபடம் ஏற்பாடு உள்ளிட்ட அரச பணிகளில் முன்னின்று செயற்பட்டுள்ளது. தேசத்தின் காணி அபிவிருத்தி விடயங்களில் பிரதான செயல்பாட்டாளர் என்ற கௌரவத்தையும் திணைக்களம் பெற்றுள்ளதாக திணைக்களம் தொடர்பான அறிக்கைகள் தெரிவிக்கின்றன

எமது தேசத்தில் பொதுமக்களிடையே ஏற்படும் நீதிமன்றம் சென்ற பிணக்குகள் தொடர்பில் குறிப்பாக மாவட்ட நீதிமன்றங்களில் எடுத்துக் கொள்ளப்படும் காணி வழக்குகளில் தனியார் நில அளவையாளரினால் மன்றுக்கு சமர்ப்பிக்கப்படும் காணி அளவீடு அறிக்கையை ஏதேனும் தரப்பினர் ஏற்றுக் கொள்ளாத பட்சத்தில் நிலஅளவையாளர் நாயகத்தின் அளவீட்டுக்காக நீதிமன்றில் கோரிக்கை மனு சமர்ப்பிக்கப்படுவதுடன் நில அளவையாளர் நாயகத்தின் நிலஅளவை அறிக்கையே நீதிமன்றில் முக்கியத்துவம் பெற்று மேலோங்குகின்றமை குறிப்பிடத்தக்கது.

**எம்.எஸ்.எம்.முன்தஸிர்...**
*(பாணந்துறை மத்தியகுறூப் நிருபர்)*

# 'லண்டன் வெம்மை' நாவல் வெளியீட்டு விழா

இலங்கை தமிழ் இலக்கிய நிறுவகம் மற்றும் இலண்டன் தமிழ் இலக்கிய நிறுவகம் இணைந்து வெளியிட்ட ரொட்ணி விதானபத்திரணின் 'லண்டன் வெம்மை' நாவல் வெளியீட்டு விழா எதிர்வரும் முதலாம் திகதி முற்பகல் 10.30 மணிக்கு கொழும்பு பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் நடைபெறவுள்ளது. சு.முரளிதரனால் தமிழில் வெளியிடப்படும் இந்த நாவலின் முதல் பிரதியை இலக்கிய புரவலர் ஹாஸிம் உமர் பெற்றுக்கொள்ளவுள்ளதாக, ஏற்பாட்டாளர்கள் தெரிவித்தனர்.

## பயங்கரவாதிகளின்...

கடுமையாக சாடியுள்ளார். கனடா பிரதமர் ஜஸ்டின் ட்ருடோ ஆதாரமற்ற பரபரப்பு குற்றச்சாட்டுகளை முன்வைப்பவரென்பதால், அவரது கருத்துக்கள் எனக்கு ஆச்சரியமளிக்கவில்லையென அலிசப்ரி தெரிவித்துள்ளார்.

சில பயங்கரவாதிகள் கனடாவில் அடைக்கலம் பெற்றுள்ளதாக குறிப்பிட்டுள்ள அமைச்சர், ஆதாரங்களற்ற கடும் குற்றச்சாட்டுகளை முன்வைக்கும் சுபாவம் கனடா பிரதமருக்குள்ளதாகவும் தெரிவித்துள்ளார்.

இலங்கை விவகாரத்திலும் கனடா பிரதமர் இவ்வாறு நடந்துகொண்டார். இலங்கையில் இனப்படுகொலை இடம்பெற்றதாக பெரும் பொய்யை கூறினார். இலங்கையில் இனப்படுகொலை இடம்பெறவில்லை என்பதுஅனைவருக்கும் தெரியும் எனவும் அலி சப்ரி தெரிவித்துள்ளார். கனடாவில் சீக்கிய செயற்பாட்டாளர் ஒருவர் கொல்லப்பட்டமையின் பின்னணியில், இந்திய அரசாங்கம் உள்ளதென்ற கனேடிய பிரதமரின் குற்றச்சாட்டினால் இந்தியாவுக்கும் கனடாவுக்கும் இடையில் இராஜதந்திர முறுகல் நிலை உருவாகியுள்ளது. இச்சந்தர்ப்பத்திலேயே இலங்கை வெளிவிவகார அமைச்சரின் இந்த கருத்துக்கள் வெளியாகியுள்ளன.

## இரத்தினக்கல்...

அமைச்சர் ரமேஷ் பத்திரண தலைமையில் அண்மையில் பாராளுமன்றத்தில் நடைபெற்ற கைத்தொழில் அமைச்சுசார் ஆலோசனைக் குழுக் கூட்டத்திலேயே இவ்விடயம் கலந்துரையாடப்பட்டது. அம்பிலிப்பிட்டிய பிரதேசத்தில் அறுவடை முடிந்த பின்னர் மகாவலி காணிகளில் அனுமதி வழங்கப்பட்ட விவசாய நிலங்களில் மாணிக்கக் கல் அகழ்வுக்கு கடந்த காலங்களில் அனுமதி வழங்கப்பட்டதாகவும், மகாவலி அதிகாரசபை இதற்குத் தற்பொழுது அனுமதி வழங்குவதில்லையென்றும் பிரதிச் சபாநாயகர் அஜித் ராஜபக்ஷ குழுவில் சுட்டிக் காட்டினார்.

அத்துடன், இரத்தினக்கல் அகழ்வின் மூலம் கிடைக்கும் இலாபத்தின் பங்கு அகழ்வுப் பணியில் ஈடுபடும் தொழிலாளர்களுக்கு சரியான முறையில் சென்றடைவதில்லையென்ற விடயம் குறித்தும் இங்கு விரிவாகக் கலந்துரையாடப்பட்டது.

தொழிலாளர்களுக்கு உரிய பங்கு சென்றடைவதை உறுதிப்படுத்துமாறும் அமைச்சர் அதிகாரிகளுக்கு உத்தரவிட்டார். கொவிட்19 சூழல் காரணமாகப் பாதிக்கப்பட்ட சிறிய மற்றும் நடுத்தர தொழில்முயற்சியாளர்கள் எதிர்கொண்டுள்ள கடன் பிரச்சினை தொடர்பில் எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கைகள் குறித்தும், அவற்றில் ஏற்பட்டுள்ள முன்னேற்றங்கள் குறித்தும் இங்கு கலந்துரையாடப்பட்டது.

சிறிய மற்றும் நடுத்தர தொழில் முயற்சியாளர்களை வலுப்படுத்துவதற்கு அமைச்சின் கீழ் முன்னெடுக்கப்பட்டுவரும் ஸ்மைல் கடன்திட்டம் குறித்தும் அதிகாரிகள் விளக்கமளித்தனர்.

அத்துடன், 2007ஆம் ஆண்டின் 07ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் கீழான வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட ஒழுங்குவிதிகளுக்கும் குழுவில் அனுமதி வழங்கப்பட்டது.

இந்தக் கூட்டத்தில் பிரதி சபாநாயகர் அஜித் ராஜபக்ஷ, இராஜாங்க அமைச்சர்களான சாமர சம்பத் தசநாயக, விஜித பேருகொட, பியல் நிஷாந்த, பாராளுமன்ற உறுப்பினர்களான பேராசிரியர் சரித ஹேரத், ஜகத் குமார சுமித்திராரச்சி, உதயகாந்த குணதிலக, குலசிங்கம் திலீபன், சுமித் உடுகும்புர, குணதிலக ராஜபக்ஷ, குமாரசிறி ரத்னாயக ஆகியோரும், அரசாங்க அதிகாரிகள் பலரும் கலந்து கொண்டனர்.

## மலேசியாவில்...

கோயில் கிராமத்தில் பர்ஹென்டியன் வீதியில் உள்ள வீடொன்றில், கடந்த (22) மூன்று பேர் கொலை செய்யப்பட்டனர்.

கைகள் கட்டப்பட்டு, தலை பிளாஸ்டிக் பைகளால் மூடப்பட்டு காணப்பட்ட இலங்கையர்களின் சடலங்களை, மலேசிய பொலிஸார் கடந்த 23 ஆம் திகதி மீட்டுள்ளனர்.

சம்பவத்தில் கொல்லப்பட்டவர்கள் சம்பவம் நடந்த வீட்டில் அறையை வாடகைக்கு எடுத்து தங்கியிருந்தவர்கள். இதில் 20 முதல் 40 வயதுக்குட்பட்டவர்களே கொல்லப்பட்டுள்ளனர்.

கொலைச் சம்பவம் நடப்பதற்கு முன்னர் சந்தேக நபர்கள் வீட்டின் இரண்டாவது மாடியில் தங்கியிருந்ததாக கோலாலம்பூர் பொலிஸ் பிரதான டத்தோ அலாவுதீன் அப்துல் மஜீத் தெரிவித்துள்ளார். சந்தேக நபர்கள் சுமார் ஆறு மாதங்கள் அந்த வீட்டில் தங்கியிருந்துள்ளனர். இக்கொலைகள் திட்டமிட்டு செய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் கூறியுள்ளனர்.

கொலை சம்பவம் நடந்து 24 மணி நேரத்துக்கு பின்னர், பொலிஸார் சந்தேக நபர்களின் புகைப்படங்களை வெளியிட்டு, அவர்களை கைது செய்ய பொது மக்களின் உதவியை கோரியிருந்தனர்.

இதனிடையே பொலிஸார் மிக தீவிர விசாரணைகளை மேற்கொண்டதுடன், தயார்நிலையிலும் இருந்தனர்.

சம்பவம் தொடர்பான தகவல்களை அறிந்த எவரும் முன்வந்து தகவல்களை வழங்க முடியுமென அலாவுதீன் அப்துல் மஜீத் அறிவித்திருந்தார்.

விரைவில் சரணடையுமாறு சந்தேக நபர்களுக்கு அறிவிக்கப்பட்டிருந்தது . இந்நிலையிலேயே சந்தேக நபர்கள் பொலிஸில் சரணடைந்துள்ளனர்.

## IMF ஜனாதிபதியுடனான ...

பொருளாதாரம் மற்றும் பௌதீகத் திட்டங்கள் பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவின் தலைவர் மஹிந்தானந்த அளுத்கமகே தெரிவித்தார்.

ஜனாதிபதி ஊடக மையத்தில் நேற்று (26) நடைபெற்ற ஊடக சந்திப்பிலேயே குழுவின் தலைவர் மஹிந்தானந்த அளுத்கமகே இதனைத் தெரிவித்தார். இங்கு மேலும் கருத்துத் தெரிவித்த மஹிந்தானந்த அளுத்கமகே,

சர்வதேச நாணய நிதியம் பரிந்துரைத்த மூன்று முக்கிய விடயங்கள் உள்ளன. அதன்படி, பணவீக்கத்தை ஒற்றை இலக்கத்துக்கு கொண்டு வருதல், அந்நியச் செலாவணிக் கையிருப்பை அதிகரித்தல், அரச வரி வருமானத்தை அதிகரித்தல் அவசியமாகும்.

கடந்த காலங்களில் 95% ஆக இருந்த உணவுப் பற்றாக்குறை, தற்போது 5% ஆகக் குறைந்துள்ளது. பணவீக்கம் 70% லிருந்து 2.6% ஆகவும், 20 மில்லியன் டொலர்களாக இருந்த அந்நியச் செலாவணிக் கையிருப்பு, 04 பில்லியன் டொலர்களாகவும் அதிகரித்துள்ளது. எனினும், சர்வதேச நாணய நிதியம் அரச 2022 ஆம் ஆண்டு இந்த நிறுவனங்கள் உரிய வரியை முறையாக வசூலிக்கத் திட்டங்களை தயாரித்திருந்தால் இந்த வருமானத்தை எட்டியிருக்க முடியும் என்பது அதன்போது தெரியவந்தது.

கடந்த ஆண்டு (2022) தனிநபர் வரிக் கோப்புகளின் எண்ணிக்கை இரண்டு இலட்சத்து தொண்ணூற்று இரண்டாயிரமாக பதிவு செய்யப்பட்டுள்ளது. அதன்படி, இந்தக் கோப்புகளில் 10% சதவீதமானவர்கள் மாத்திரமே ஒரு ரூபாவேனும் வரி செலுத்துகின்றனர்.

அரச வரி வருமானத்தை அதிகரிக்க செயற்படாத அதிகாரிகள் குறித்து அரசாங்கம் கடுமையான முடிவுகளை எடுக்க வேண்டும். இந்த நிறுவனங்களில் நடக்கும் முறைகேடுகளை கட்டுப்படுத்தினால், 500 பில்லியன் வருமானத்தை உயர்த்தும் திறன் எம்மிடம் உள்ளது.

உள்நாட்டு இறைவரித் திணைக்களம் உட்பட நாட்டுக்கு வரி வருமானத்தை ஈட்டும் நிறுவனங்களை கண்காணிப்பதற்கு விசேட பிரிவொன்று ஸ்தாபிக்கப்பட வேண்டுமென தேசிய பொருளாதாரம் மற்றும் பௌதீகத் திட்டங்கள் பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவின் தலைவர் மஹிந்தானந்த அளுத்கமகே தெரிவித்தார்.

அரச வரி வருமானத்தை அதிகரிப்பதற்கு செயற்படாத அதிகாரிகள் தொடர்பில் அரசாங்கம் கடுமையான தீர்மானங்களை எடுக்க வேண்டும் எனவும் பாராளுமன்ற உறுப்பினர் மஹிந்தானந்த அளுத்கமகே சுட்டிக்காட்டினார்.

இந்த நிறுவனங்களின் திறமையின்மை மற்றும் முறைகேடுகள் காரணமாக அரசாங்கம் இலங்கை சுங்கத்தில் இருந்து வருடமொன்றுக்கு சுமார் 360 பில்லியன் ரூபாவையும், மதுவரித் திணைக்களத்தில் இருந்து வருடத்திற்கு சுமார் 60 பில்லியன் ரூபாவையும் இழந்துள்ளது.

உதாரணமாக, இந்த நாட்டின் மதுபான தொழிற்சாலைகள் ஒவ்வொரு மாதமும் சுமார் 50 மில்லியன் மது போத்தல்களை உற்பத்தி செய்கின்றன. ஆண்டுக்கு 540600 மில்லியன் மது போத்தல்கள் உற்பத்தி செய்யப்படுகின்றன. ஆனால் இந்த உற்பத்தியில் 40% வேறு வழிகளில் வெளியே செல்கின்றன. இதன் ஊடாக அரசாங்கத்துக்கு வரி கிடைப்பதில்லை. இதனைத் தடுப்பதற்காக 2018 இல், பாதுகாப்பு ஸ்டிக்கர் ஒட்டும் முறையொன்று அறிமுகப்படுத்தப்பட்டது. இதன் மூலம் முதல் சில மாதங்களில் அரசின் வருமானம் அதிகரித்தாலும், போலி ஸ்டிக்கர்களால் மதுவரித் திணைக்களத்தின் வருமானம் மீண்டும் 40% குறைந்துள்ளது. மதுவரித் திணைக்களம் மேற்பார்வைக் குழுவின் முன்னிலையில் அழைக்கப்பட்டு பணிப்புரைகள் விடுக்கப்பட்ட பின்னர், 40,000 இற்கும் மேற்பட்ட போலி மது போத்தல்கள் கைப்பற்றப்பட்டுள்ளன. இந்த நிறுவனங்களில் பணிபுரியும் ஒரு சில அதிகாரிகளின் திறமையின்மையினால், அரசியல்வாதிகள் மீது மக்களால் குற்றம் சுமத்தப்படுவதாக நாம் தொடர்ந்து கூறுகின்றோம். எனவே, இந்த நிறுவனங்களின் செயல்பாடுகளை கண்காணிக்க முறையான திட்டம் தயாரிக்கப்பட்டால், அரச வருமானத்தை அதிகரிக்க முடியும்.

உள்நாட்டு இறைவரித் திணைக்களம் மாத்திரம் 904 பில்லியன் ரூபா வரிகளை அறவிட வேண்டியுள்ளது. அரசாங்கத்திற்கு வரி செலுத்தாமல் நான்கு மேன்முறையீடுகளை சமர்ப்பிக்கக்கூடிய ஒரே நாடு இலங்கை மாத்திரமே ஆகும். அந்த 04 மேன்முறையீடுகளை ஆய்வு செய்ய 15 ஆண்டுகள் செல்லும். அப்படியானால், இந்நாட்டு மக்கள் எவ்வாறு வரி செலுத்த முடியும்? இதன் காரணமாக 904 பில்லியன் ரூபாவை வசூலிப்பது 15 ஆண்டுகளாக தாமதமாகியுள்ளது.

எனவே, இந்த நிறுவனங்களை கண்காணிக்கவும், ஒழுங்குபடுத்தவும் தனிப் பிரிவு ஏற்படுத்தப்பட வேண்டும். இது தொடர்பில் துறைசார் மேற்பார்வைக் குழு என்ற வகையில், ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவிடம் அறிக்கை ஒன்றையும் சமர்ப்பித்துள்ளோம். வரி விதிப்பு உயர்வுக்குப் பிறகு, 10 இலட்சம் புதிய வரிக் கோப்புகள் திறக்கப்படும் என உள்நாட்டு இறைவரித் திணைக்களம் அறிவித்தது. ஆனால் தற்போது, பத்தாயிரம் கோப்புகள் மாத்திரமே புதிதாக திறக்கப்பட்டுள்ளன. அரச வருமானம் அதிகரிப்பதை நாம் காணவில்லை. உள்நாட்டு இறைவரித் திணைக்களம் கவனம் செலுத்தாத பிரதான நிறுவனங்களும் வர்த்தகர்களும் இந்நாட்டில் உள்ளனர். அவர்களில் பெரும்பாலானோர் அரசுக்கு வரி செலுத்துவதில்லை. உள்நாட்டு இறைவரித் திணைக்களத்திடம் இவற்றைக் கவனிப்பதற்கான உரிய வேலைத்திட்டமும் இல்லை.

நாட்டு மக்களுக்கு மானியங்கள் வழங்குதல், அபிவிருத்தி நடவடிக்கைகள், அரசாங்க ஊழியர்களின் சம்பளம் வழங்குதல் போன்ற அனைத்து விடயங்களும் அரச வரி வருமானத்தின் மூலமே மேற்கொள்ளப்படுகின்றன. வரி வருமானத்தை அதிகரிப்பது குறித்து உள்நாட்டு இறைவரித் திணைக்களம் மீண்டும் சிந்திக்க வேண்டும்.

வரி வசூலிக்கும் முறை இல்லாதது குறித்து அரசாங்கம் கடுமையான முடிவுகளை எடுக்க வேண்டிய நேரம் வந்துவிட்டது." என்று தேசிய பொருளாதாரம் மற்றும் பௌதீகத் திட்டங்கள் பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவின் தலைவர் மஹிந்தானந்த அளுத்கமகே தெரிவித்தார்.

## கொழும்பு நிதி...

வேண்டியது அவசியமென, ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

நீதிமன்றங்களுக்குள் நீண்டகாலமாக வழக்கு விசாரணைகள் நீடிப்பது நெருக்கடியாக அமைந்துள்ளதாகவும், பிரச்சினைகளை தீர்ப்பதற்கான மாற்று வழிகளை கண்டறிய வேண்டியதன் அவசியத்தையும் ஜனாதிபதி வலியுறுத்தினார்.

கொழும்பு ஹில்டன் ஹோட்டலில் நேற்று (26) நடைபெற்ற 2023 வர்த்தக மத்தியஸ்தம் தொடர்பான மாநாட்டிலே, ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மேற்கண்டவாறு தெரிவித்தார்

தேசிய பிரச்சினைகளை தீர்ப்பதற்கான மத்தியஸ்தானத்தால் (IADRC) இந்த மாநாடு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

2018 ஆம் ஆண்டில் மாற்று பிரச்சினைகளுக்கு தீர்வு காண்பதற்கான மத்தியஸ்தானம் ஒன்று நிறுவப்பட்டிருப்பதை நினைவுகூர்ந்த ஜனாதிபதி, இதன் தொடர்ச்சியான முன்னேற்றத்திற்கு அரசாங்கம் அர்பணிப்புடன் செயற்படுவதாகவும் தெரிவித்தார். இந்த ஆரம்பத்துக்கு ஒத்துழைப்பு வழங்குமாறும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நீதித்துறை மற்றும் முதலீட்டு ஊக்குவிப்பு அதிகாரிகளிடத்தில் கேட்டுக்கொண்டார்.

அங்கு மேலும் கருத்து தெரிவித்த ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க,

"மாற்று பிரச்சினைகளை தீர்த்தல் மற்றும் மத்தியஸ்தம் உள்ளிட்ட இரு துறைகளிலும் இலங்கை பெருமளவான செயற்பாடுகளை மேற்கொள்ள வேண்டியுள்ளது என்பதே தற்போதைய பிரச்சினையாகும். நாம் முதலில் இந்த செயன்முறைக்கு எவ்வாறு எம்மை வடிவமைத்துக் கொள்வதுஎன்பதுதொடர்பில்சிந்திக்க வேண்டும்.

இது தொடர்பில் எமக்கு கலாசார ரீதியான மாற்றம் அவசியம். குறுகிய காலத்தில் பிரச்சினைகளுக்கு தீர்வு காணக்கூடிய வகையில் அந்த மாற்றங்கள் அமைய வேண்டும். அதேபோல் நாம் பழமையான நீதிமன்ற கட்டமைப்புடன் இணைந்துள்ளமை எமக்கு சவாலான விடயமாகும்.

நாம் இலங்கையை பொருளாதார மத்தியஸ்தானமாக மாற்றியமைக்க வேண்டும். கடல்சார் நடவடிக்கைகள் தொடர்பில் தேவையான சட்ட ஏற்பாடுகளுடன் துறைமுக நகரத்தை "கொழும்பு நிதி வலயமாக" மாற்றுவதற்கு புதிய சட்டம் அறிமுகப்படுத்தப்படும். அந்த சட்டத்தை உருவாக்கும் பணிகள் இவ்வருட இறுதிக்குள் நிறைவடையும். அடுத்தபடியாக முதலீட்டு ஊக்குவிப்புச் சபைக்கு மாறாக பொருளாதார ஆணைக்குழுவொன்றை நிறுவ வேண்டும் என்பதோடு, மேற்படி விடயம் சார்ந்த பிரச்சினைகளுக்கு அந்த ஆணைக்குழுவே தீர்வுகளை வழங்கும்.

நாம் பல சுதந்திர வர்த்தக ஒப்பந்தங்களுக்குச் செல்லவுள்ளோம். சிங்கப்பூர் மற்றும் தாய்லாந்து ஆகிய நாடுகளுடன் ஒப்பந்தம் தொடர்பிலான பேச்சுக்கள் நிறைவை எட்டியுள்ளன. மேம்படுத்தப்பட்ட ஒப்பந்தமொன்று தொடர்பில் இந்தியாவுடனும் கலந்தாலோசித்துள்ளோம். பங்களாதேஷுடனும் பேச்சுவார்த்தைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

அதற்கு மேலதிகமாக பிராந்தியத்தின் பரந்த பொருளாதார கூட்டிணைவான (RCEP) அமைப்பினுள் இணைந்துகொள்ள எதிர்பார்த்துள்ளோம். உலகின் வலுவான பொருளாதார சமூகம் அதற்குள் இருக்கின்றது.

அதனால் எமக்கு மாற்று பிரச்சினைகளுக்கு தீர்வு காண வேண்டியதன் முக்கியத்துவத்தை புரிந்துகொள்ள வேண்டும். அதேபோல் இலங்கையை பொருளாதார கேந்திர நிலையமாக உறுதிப்படுத்த வேண்டும்.

சிங்கப்பூரை போன்ற அபிவிருத்தியை இலங்கையில் ஏற்படுத்த நாம் முயற்சிக்க வேண்டும். இதன்போது சிங்கப்பூருக்கு நிகராக எமது செலவீனங்கள் குறைவடைய வேண்டும். அதனால், சிங்கப்பூருடன் போட்டியிடும் இயலுமையும் எமக்கு கிட்டும். அந்த இடைவெளியை குறைத்துக் கொள்ள வேண்டுமெனில் எமது பயணத்தை துரிதப்படுத்த வேண்டும். அடுத்ததாக, நாட்டின் சட்டத்தரணிகளும் ஏனைய நீதித்துறை சார்ந்தவர்களும் மாற்றுச் செயற்பாடுகள் தொடர்பிலும் சிந்திக்க வேண்டும். இலங்கை உங்களுக்கான சந்தையல்ல, இலங்கைக்கு வெளியிலேயே உங்களுக்கான மிகப்பெரிய சந்தை வாய்ப்பு உள்ளது. இந்த துறை மாத்திரமின்றி புதிய துறைகள் தொடர்பிலும் கவனம் செலுத்த வேண்டியுள்ளது.

செயற்கை நுண்ணறிவு (AI), புளொக் செயின் மற்றும் மருத்துவத் துறை உள்ளிட்ட அபிவிருத்தி கண்டுவரும் துறைகள் தொடர்பில் அவதானம் செலுத்த வேண்டும்.

அதனை செய்யும் பட்சத்தில் நாம் பொருளாதார மத்தியஸ்தானமாக மாற முடியும். நாம் தாமதமடைந்தால் அந்த வாய்ப்பு மற்றுமொருவருக்கு கிட்டும்.

காலநிலை அனர்த்தங்கள் தொடர்பில் கவனம் செலுத்தும் போது, நாம் பாரிய அர்பணிப்புக்களை செய்து வருகிறோம். பசுமை ஹைட்டிரிஜன், பச்சை அமோனியா மற்றும் காற்றின் மூலம் 60 கிகாவோட் மின் உற்பத்தியை மேற்கொள்ள முடியும். சிலர் 40 கிகாவோட்களை உற்பத்திச் செய்ய முடியும் என்றும் கூறுகின்றனர்.

அது தொடர்பிலான வர்த்த வாய்ப்புகள் தொடர்பில் நாம் அவதானம் செலுத்த வேண்டியுள்ளது. அத்தோடு அனைத்து புதிய துறைகள் தொடர்பிலும் கவனம் செலுத்த வேண்டும்.

மேற்படி துறைகளில் கல்வி,நிபுணத்துவ தெரிவுகளை பெற்றுக்கொள்ளல் மற்றும் மேம்படுத்தல்களுக்கு அவசியமான தேவைப்பாடுகளை பெற்றுக்கொடுக்க தயாராகவுள்ளோம். இலங்கையை செயல்திறன் மிக்க தூரநோக்குடன் கூடிய சட்ட சூழலை கொண்ட நாடாக மாற்றியமைப்பதற்கான பயணத்தில் இணைந்துகொள்ளுங்கள்." என ஜானாதிபதி ரணில் விக்ரமசிங்க இதன்போது அனைவருக்கும் அழைப்பு விடுத்தார்.

## புத்தள பிரதேசத்தில்...

மேற்படி 16 நிலநடுக்கங்களில் 06 நில நடுக்கங்கள் புத்தள மற்றும் அதனை அண்டிய பிரதேசங்களிலே இடம்பெற்றுள்ளதாகவும் பணியகத்தின் உயரதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

அதேவேளை, இலங்கையை அண்டிய கடற்பரப்பில் மூன்று பூமியதிர்வுகள் பதிவாகியுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில் புத்தள பிரதேசத்தில் நேற்று முன்தினம் இரவு இடம்பெற்றுள்ள நிலநடுக்கம் ரிச்டர் அளவு 2.4 ஆக பதிவாகியுள்ளது.

இந்நில நடுக்கம் நேற்று முன்தினம் இரவு 11.20 மணியளவில் இடம்பெற்றது. இது சிறியளவிலான இந்நில நடுக்கம் நாட்டில் நிர்மாணிக்கப்பட்டுள்ள பூமியதிர்ச்சி தொடர்பான நான்கு அலகுகளிலும் பதிவாகியுள்ளது.

## வெளிநாட்டு...

ஊக்குவிப்பு பணியகம் கட்டுநாயக்க விமான நிலைய வருகை முனையத்தில் வைபவமொன்றை ஏற்பாடு செய்திருந்தது.

இலங்கைக்கு வந்த ரஷ்ய நாட்டவருடன் அவரது மனைவி மற்றும் இரண்டு குழந்தைகளும் இருந்தனர். ரஷ்யாவிலிருந்து ஓமானுக்கு வந்த அவர்கள், பின்னர் ஓமான் தலைநகர் மஸ்கட்டிலிருந்து கட்டுநாயக்க விமான நிலையத்தை வந்தடைந்தனர். கட்டுநாயக்கா விமான நிலையத்தின் வருகை முனையத்தில் விசேடமாக ஏற்பாடு செய்யப்பட்ட நிகழ்வில், கேக் வெட்டி, மாலை அணிவித்து அவர்களை வரவேற்றனர்.

## கிளிநொச்சி...

ஆறு மணிவரை அனுமதி வழங்கப்பட்ட வகையில், மணல் விநியோகம் செய்வதற்கு சந்தர்ப்பம் வழங்கப்படுவதாக அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார்.

கிளிநொச்சி மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுவின் தலைவரான கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தலைமையில் நேற்று (26) நடைபெற்ற மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டத்தில் இவ்விடயம் தொடர்பாக ஆராய்ந்த பின்னரே இத்தீர்மானத்தை அமைச்சர் தெரிவித்தார்.

கிளிநொச்சி மாவட்டத்தில் இடம்பெற்ற

சட்டவிரோத மணல் கடத்தல்களை கட்டுப்படுத்த கடந்த 16 ஆம் திகதி அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் தலைமையில் நடைபெற்ற விசேட கலந்துரையாடலில் மணல் அகழ்வுக்கான அனுமதி நிறுத்தப்பட்டிருந்தது. இதற்கிணங்க மணல் விநியோகம் துறைசார் தரப்பினரின் ஒருங்கிணைந்த துரித நடவடிக்கையால் கட்டுப்படுத்தப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

மாவட்ட அரச அதிபர் திருமதி. றூபவதி கேதீஸ்வரன் ஏற்பாட்டில் நடைபெற்ற இந்த ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில், மாவட்டத்தின் முக்கிய விடயங்கள் கலந்துரையாடப்பட்டன.

குறிப்பாக, கிளிநொச்சி மாவட்டத்தில் மத்திய மற்றும் மாகாண அமைச்சுக்களினால் மேற்கொள்ளப்பட்டுவரும் அபிவிருத்தி திட்டங்கள் அவற்றின் முன்னேற்றங்கள் தொடர்பாக இங்கு கலந்துரையாடப்பட்டன.

மாவட்டத்தில் இடம்பெற்ற சட்டவிரோத மண் கடத்தல், போதைப் பொருள் பாவனை ஆகியவற்றை கட்டுப்படுத்த எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் அதன் முன்னேற்றங்கள் தொடர்பில் விரிவாக கலந்துரையாடல்கள் இடம்பெற்று முடிவுகளும் எடுக்கப்பட்டன .

## அடுத்து வரும்...

நான்கு டீசல் கப்பல்களை கொள்வனவு செய்வதற்காக நீண்டகால ஒப்பந்த முறைமையின் கீழ் டெண்டர் கோரப்பட்டுள்ளது. இதற்காக 05 டெண்டர்கள் முன்வைக்கப்பட்டுள்ளன. அமைச்சரவையினால் நியமிக்கப்பட்டுள்ள விசேட நிலையான திட்டமிடல்குழுவின் பரிந்துரைக்கமைய பெட்ரோசினா இன்டர்னஷனல் (சிங்கப்பூர்) பிரைவட் லிமிட்டட் என்ற நிறுவனத்திற்கு, இத்திட்டமிடலை வழங்குவதற்காக எரிசக்தி மின்சக்தி அமைச்சர் கஞ்சன விஜேசேக்கர சமர்ப்பித்துள்ள யோசனைக்கு அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளது.

## இலத்திரனியல்...

யாளர் பியல் பத்மநாத இது தொடர்பில் தெரிவிக்கையில்: தெரிவு செய்யப்பட்ட நான்கு பிரதேசங்களில் முதற்கட்டமாக இப்புதிய முறைமையை நடைமுறைப்படுத்த தீர்மானித்துள்ளதாக தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில், எதிர்வரும் ஒக்டோபர் முதலாம் திகதி முதல் பாவனையாளர்களுக்கான நீர் கட்டணத்தை வழங்குவதில் மாற்றங்கள்

கொண்டுவரப்படவுள்ளன. பரீட்சார்த்தமாக கொழும்பு தெற்கு நகர்ப்பகுதி, கண்டி தெற்கு நகர்ப்பகுதி, திருகோணமலை, பொலனறுவை ஆகிய மாவட்டங்களின் 4 பிரதேச செயலகப் பிரிவுகள் இவ்வாறு இலத்திரனியல் கட்டணப் பட்டியல் முறைமைக்கு உட்படுத்தப்படவுள்ளன.

இந்த வகையில் ஜனவரி மாதம் முதலாம் திகதிமுதல் அதை நாடளாவிய ரீதியில் விரிவுபடுத்துவதற்கு எதிர்பார்க்கப்பட்டுள்ளது. இது தொடர்பில் நீர்

பாவனையாளர்கள் எவ்வித பயம்கொள்ளவும் தேவையில்லை. இதுவரை நடைமுறையில் உள்ளதைவிட முறையான வகையில் விரைவாக இதன்மூலம் நீர் கட்டணப் பட்டியல்களை நுகர்வோருக்கு வழங்க முடியும்.

## பதுளை யூரி...

யூரி தோட்ட மாப்பகல பிரிவின் 05ஆம் இலக்க தொடர் லயன் குடியிருப்புவீட்டில் ஏற்பட்ட தீ பரவி,

லயன் குடியிருப்புக்களிலும் தொற்றியது. மின்சார ஒழுக்கு ஏற்பட்டதாலே இவ்வீட்டில் தீ பற்றிக் கொண்டது.இச்சம்பவம்

(25) மாலை ஏற்பட்டது.இதையடுத்து,லயன் குடியிருப்பில் வசித்த 09 குடும்பங்களைச் சேர்ந்த 33 பேர் வீடு மற்றும் உடமைகளை இழந்து பாதிக்கப்பட்டுள்ளனர்.

சம்பவ இடத்துக்கு விரைந்த கிராம சேவை உத்தியோகத்தர், தோட்ட முகாமையாளர், சமுர்த்தி உத்தியோகத்தர், இலங்கை தொழிலாளர் ஐக்கிய முன்னணியின் நிதிச் செயலாளர் ஆர். சலோபராஜ், இலங்கை தேசிய தோட்டத் தொழிலாளர் சங்கத்தின் இயக்குநர் கே. முத்துகுமார் ஆகியோர், மாப்பாகல தமிழ் வித்தியாலயத்தில் பாதிக்கப்பட்டவர்களை தங்க வைத்து அவர்களுக்குத் தேவையானவற்றை வழங்க நடவடிக்கை எடுத்தனர்.

## தயாசிறி MPயின்...

நேற்றைய தினம் நீதிமன்றத்தில் தயாசிறி ஜயசேகர தாக்கல்

செய்த முறைப்பாட்டை விசாரணைக்கு எடுத்துக்கொண்டதன் பின்னரே,எதிர்வரும் ஒக்டோபர் 05ஆம் திகதிவரை செல்லுபடியாகும் வகையில் கொழும்பு

மாவட்ட நீதிபதி சதுன் விதான கடந்த இரு தினங்களுக்கு முன் இந்த தடையுத்தரவை பிறப்பித்திருந்தார்.

அதேவேளை, தயாசிறி ஜயசேகரவுக்கு இதுபோன்ற கடிதமொன்றை வழங்குவதற்கு கட்சியின் மத்திய குழுவுக்கு அதிகாரம் உள்ளது என பிரதிவாதியான

மைத்திரிபால சிறிசேனவின் சார்பில் நீதிமன்றத்தில் ஆஜராகியிருந்த ஜனாதிபதி சட்டத்தரணி பைசர் முஸ்தபா நீதிமன்றத்திற்கு தெளிவுபடுத்தினார்.

முறைப்பாட்டாளர் உண்மையை மறைத்து இந்த தடையுத்தரவை பெற்றுள்ளதாகவும் இந்த தடையுத்தரவை இடைநிறுத்தும் உத்தரவை பிறப்பிக்குமாறும் பைசர் முஸ்தபா நீதிமன்றத்திடம் வேண்டுகோள் விடுத்தார்.

## 2024 பட்ஜட்;..

அவர் தெரிவித்துள்ளார். இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

வரவுசெலவுத் திட்டத்தை பாராளுமன்றத்தில் சமர்ப்பித்து ஜனாதிபதி விசேட உரை நிகழ்த்தவுள்ளார். வரவு செலவு திட்டத்துக்கான இரண்டாம் வாசிப்பு மீதான விவாதம் எதிர்வரும் நவம்பர் மாதம் 14ஆம் திகதி முதல் 21ஆம் திகதி வரை இடம்பெறவுள்ளது. இரண்டாம் வாசிப்பு மீதான சபை வாக்களிப்பு, நவம்பர் 21ஆம் திகதி மாலை நடைபெறவுள்ளது. அந்தவகையில் 2024 ஆம் ஆண்டுக்கான வரவுசெலவுத் திட்ட மூன்றாம் வாசிப்பு மீதான விவாதம் நவம்பர் 22 ஆம் திகதி முதல் டிசம்பர் மாதம் 13ஆம் திகதி வரை நடைபெறவுள்ள. மூன்றாம் வாசிப்பு மீதான வாக்கெடுப்பு அன்றைய தினம் மாலை சபையில் இடம்பெறுமென்றும் அவர் தெரிவித்துள்ளார்.

## ஜனாதிபதியின்...

பெற்றுக்கொள்வதற்கே அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

மேற்படி செயற்திட்டங்களுக்காக 200 மில்லியன் அமெரிக்கன் டொலர்கள் வீதம் கொள்கை அடிப்படையில், தலா இரண்டு கடன்களை பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படவுள்ளன. முதலாவது செயற்திட்டத்தின் கீழ் இரண்டு சத வீத வருடாந்த வட்டி வீதத்தில் 5 வருட சலுகைக் காலத்துடன் 25 வருட மீள செலுத்தும் தவணைக் காலமாக அந்த வங்கியிடமிருந்து கடன் பெற்றுக் கொள்ளப்படவுள்ளது. இதற்கான ஒப்பந்தங்களே மேற்கொள்ளப்படவுள்ளன.

# தினகரன் Business

# டிமென்ஷியா: முன்கூட்டியே கண்டறிதல், முகாமைத்துவம் தொழில்முறை ஆலோசனை



ஒவ்வொரு வருடமும் டிமென்ஷியா அல்லது முதுமையில் மறதி நோய் தொடர்பில் 10 மில்லியன் புதிய நோயாளர்கள் அடையாளம் காணப்படுகின்றனர். உலகளாவிய ரீதியில் 55 மில்லியனுக்கும் அதிகமானவர்களுக்கு டிமென்ஷியா காணப்படுவதுடன், இவர்களில் 60 வீதத்துக்கும் அதிகமானவர்கள் குறைந்த மற்றும் மத்திய வருமானம் ஈட்டும் நாடுகளில் வாழ்கின்றனர் என உலக சுகாதார ஸ்தாபனம் குறிப்பிடுகிறது.

உயிரிழப்புக்கள் ஏற்படுத்தும் முன்னணிக் காரணிகளில் ஏழாவது காரணியாக டிமென்ஷியா காணப்படுவதுடன், உலகளாவிய ரீதியில் உள்ள முதுமையானவர்கள் மத்தியில் பெரும்பாலானவர்களுக்கு ஏற்படும் அங்கவீனம் மற்றும் தங்கியிருத்தல் நிலைமைகளுக்கும் இதுவும் ஒரு முக்கிய காரணியாக விளங்குகிறது.

அல்சைமர் நோய் என்பது பொதுவான வடிவம் என்பதுடன், நோயாளர்களில் 6070% ற்கு இது பங்களிக்கின்றது. அல்சைமர் டிமென்ஷியா 60 வயதுக்கு மேற்பட்டவர்கள் மத்தியில் அதிகமாகக் காணப்படுவதுடன், இந்த நோயின் அளவு ஒவ்வொரு 5 வருடத்துக்கு ஒரு தடவையும் இரட்டிப்பாகிறது.

பக்கவாதத்தின் பின்னர் அல்லது எச்.ஐ.வி போன்ற குறிப்பிட்ட தொற்றுச் சூழ்நிலையின் போது, மோசமான மதுபானப் பாவனையின் விளைவாக, மூளையில் மீண்டும் மீண்டும் ஏற்படும் பௌதீக ரீதியான காயங்களால் டிமென்ஷியா ஏற்படலாம். பல்வேறு வடிவங்களிலான டிமென்ஷியா நோய்களுக்கு இடையிலான எல்லைகள் தெளிவற்றவை என்பதுடன் ஒன்றுடன் ஒன்று இணைந்தவையாகக் காணப்படுகின்றன.

டிமென்ஷியாவின் அடையாளங்கள் மற்றும் அறிகுறிகள் என்பன அண்மைய நிகழ்வுகள் அல்லது விடயங்களை மறத்தல், பொருட்களைத் தொலைத்தல் அல்லது காணாமல் செய்தல், நடக்கும் போது அல்லது வாகனங்களைச் செலுத்தும்போது தொலைந்து போதல், பரிச்சயமான முகங்களில் கூட குழப்பம் ஏற்படல், நேரத்தை இழத்தல், பிரச்சினைகளைத் தீர்த்தல் அல்லது தீர்மானங்களை எடுப்பதில் சிரமங்களை எதிர்கொள்ளல், உரையாடல்களைத் தொடர்ந்து சிக்கல்கள் அல்லது வார்த்தைகளைக் கண்டுபிடிப்பதில் சிக்கல் மற்றும் வழக்கமான பணிகளைச் செய்வதில் சிரமங்கள் போன்றவற்றை உள்ளடக்கியிருக்கும்.

## மஹிந்ரா ஐடியல் பினான்ஸின் புதிய கிளை இரத்தினபுரியில்



இலங்கையின் நிதியியல் துறையில் அனைத்திலும் முன்னோடியாகத் திகழ்ந்து வருகின்ற மஹிந்ரா ஐடியல் பினான்ஸ் லிமிட்டெட், தனது விரைவான கிளை வலையமைப்பு விஸ்தரிப்பைத் தொடர்ந்து முன்னெடுத்து வருவதன் மூலம், அதன் மதிப்புமிக்க வாடிக்கையாளர்களுக்கு தனது நெருக்கத்தை உறுதி செய்து வருகிறது. அதன் இரத்தினபுரி கிளையின் அங்குரார்ப்பணம் இந்தப் பயணத்தின் சமீபத்திய சாதனை இலக்காக மாறியுள்ளதுடன், மஹிந்ரா ஐடியல் பினான்ஸ் லிமிட்டெட்டின் ஓயாத உறுதிப்பாட்டை கட்டிக்காக்கும் வகையில், தான் சேவை வழங்கும் சமூகங்களின் வீட்டு வாசலில் நிதித் தீர்வுகளை வழங்க உழைத்து வருகிறது.

இலக்கம் 202, பிரதான வீதி, இரத்தினபுரி என்ற முகவரியில் அமைந்துள்ள இந்த மூலோபாய சேர்க்கையானது, நாடு முழுவதும் மஹிந்ரா ஐடியல் பினான்ஸ் லிமிட்டெட்டின் பிரசன்னத்தை மேம்படுத்துகிறது. இது செழிப்பான சமூகங்களை வளர்ப்பதற்கான அதன் நோக்கத்தை அடிக்கோடிட்டுக் காட்டுகிறது.



அகில இலங்கை பேக்கரி உரிமையாளர்கள் சங்கத்தின் 33ஆவது ஆண்டு நிறைவு விழா சனிக்கிழமை ரத்தோளுகம siyasra விழா மண்டபத்தில் நடைபெற்றது. சங்கத்தின் தலைவர் என்.கே.ஜயவர்தன மற்றும் உறுப்பினர்கள் கேக் வெட்டி கொண்டாடினர்.

படம் சுதத் மலவீர

CBL சமபோஷ 2023 மாகாண பாடசாலை போட்டிகள்

## ஊவா மாகாண சம்பியன்ஷிப்பாக அம்பகஸ்தொவ ஜனாதிபதி கல்லூரி




CBL சமபோஷ மாகாணப் பாடசாலைகள் விளையாட்டுப் போட்டி 2023 இன் இரண்டாவது போட்டியானது ஊவா மாகாணத்தின் பதுளை, வின்சன்ட் டயஸ் மைதானத்தில் செப்டெம்பர் 1ஆம் திகதி முதல் 4ஆம் திகதி வரை நடைபெற்றது. இந்தப் போட்டிகளில் ஊவா மாகாண சம்பியன்ஷிப்பை அம்பகஸ்தொவ ஜனாதிபதிக் கல்லூரி பெற்றுக்கொண்டதுடன், பண்டாரவளை தர்மபால கல்லூரி இரண்டாவது இடத்தைப் பெற்றுக்கொண்டது.

## Haycarb PLC தனது 50ஆவது ஆண்டு நிறைவை ஒட்டி புதிய ESG திட்டமான "ACTIVATE" ஐ நடைமுறைப்படுத்துகிறது




*Haycarb PLC*, அதிக மதிப்புள்ள தேங்காய் ஓட்டிலுள்ள செயற்பாட்டு கார்பன் தயாரிப்பில் உலகளாவிய முன்னணியிலும் மற்றும் *Hayleys PLC* குழுமத்தின் அங்கத்துவ நிறுவனமாகவும் உள்ளதுடன் அதன் ஐம்பதாவது ஆண்டு நிறைவை ஒட்டி "ACTIVATE" என்ற புதிய ESG திட்டத்தை அறிமுகப்படுத்தியுள்ளது. இந்த திட்டம் சுற்றுச் சூழல், சமூக மற்றும் கட்டுப்படுத்தல் (ESG) இலக்குகளில் கவனம் செலுத்துகிறது மற்றும் 2030 வரை நிறுவனத்தின் செயல்பாடுகள் மற்றும் மூலோபாயத்தை வழிநடத்துகிறது.

"ACTIVATE" ஆனது *Hayleys Lifecode, Hayleys* குழுமத்தின் ESG கட்டமைப்பின் இலக்குகளுடன் சீரமைக்கப்பட்டுள்ளது, மேலும் 2030 ஆம் ஆண்டளவில் ESG தனது முயற்சிகளை அடைய வழிகாட்டுகிறது.

ACTIVATE ஐந்து முக்கிய கொள்கைகளின் அடிப்படையில் கட்டமைக்கப்பட்டுள்ளது. அதாவது மீளமைத்தல், புதுப்பித்தல், உற்சாகப்படுத்துதல், உயர்த்துதல் மற்றும் புத்தாக்கம் செய்தல் ஆகும். சூழல், பணியாளர்கள், வாடிக்கையாளர்கள், சமூகங்கள் மற்றும் அதன் தயாரிப்புகள் உட்பட *Haycarb* இன் மதிப்புச் சங்கிலியின் அனைத்து அம்சங்களுக்கும் நிலையான மதிப்பை வழங்க இது ஒரு குறிப்பிட்ட மற்றும் தெளிவான வழியை வழங்குகிறது.

ACTIVATE மூலம், *Haycarb* 2030க்குள் அடைய வேண்டிய இலக்குகளை வலியுறுத்தியுள்ளது. இந்த இலக்குகளில், புதுப்பிக்கத்தக்க எரிசக்தி ஆதாரங்களின் பயன்பாட்டை 50% அதிகரிப்பது, பொருட்களுக்கு 25% நிலையான பேக்கேஜிங் பயன்படுத்துதல் மற்றும் 10% அதிகமான தண்ணீரை நிலையானதாக பெறுதல் ஆகியவை அடங்கும். கழிவுகளை கணிசமாகக் குறைக்கவும், தண்ணீரை மறுபயன்பாடு மற்றும் மீள்சுழற்சி செய்யவும், அவற்றின் நீர்மின் பயன்பாட்டைக் குறைக்கவும் அவர்கள் திட்டமிட்டுள்ளனர்.

## நவீன நுகர்வோரின் வளர்ந்து வரும் தேவைகளுக்கு மதிப்பை சேர்ப்பிக்க காப்புறுதித் தொழில்துறை செயல்திறன் வேகத்தை மேம்படுத்துகின்றது

இலங்கை காப்புறுதிச் சங்கம் (*Insurance Association of Sri Lanka IASL*) தனது உறுப்பு நிறுவனங்களின் உற்சாகமான பங்கேற்புடன் ஆண்டுதோறும் செப்டெம்பர் மாதத்தில் 'காப்புறுதி மாதத்தை' அனுட்டித்து வருகின்றது. இலங்கை அரசாங்கத்தால் 2017 ஆம் ஆண்டு செப்டெம்பர் 1 ஆம் திகதி தேசிய காப்புறுதி தினமாக பிரகடனப்படுத்தப்பட்டது.

செப்டெம்பர் 1 ஆம் திகதி முதல் இந்த வருடத்தின் காப்புறுதி மாதம் ஆரம்பமாகும் நிலையில், தொற்று நோய் பரவல் மற்றும் பொருளாதார நெருக்கடியின் போது முன்னர் ஒரு போதும் முகங்கொடுத்திராத வகையில் எழுந்த நெருக்கடிகளின் போது, காப்புறுதி மூலமான பாதுகாப்பின் முக்கியத்துவத்தை வலியுறுத்தும் வகையில், IASL ஆனது, 'விழிப்புடன் இருந்து பாதுகாக்கப்படுவோம்' (*Staying aware is staying protected*) என்ற கருப்பொருளுடன் ஊக்குவிப்புப் பிரசாரமொன்றை முன்னெடுக்கின்றது.

இன்றைய நுகர்வோர் தேவைகளைப் பொறுத்தவரையில், சுகாதாரம், கல்வி மற்றும் ஓய்வூதியத் திட்டங்கள் அவர்களின் முன்னுரிமைப் பட்டியலில் முதலிடத்தில் உள்ளன. அதிகரித்து வரும் பணவீக்கம், வரிகள் மற்றும் மருத்துவச் செலவுகள் ஆகியவற்றின் பின்னணியில், வாடிக்கையாளர்களின் அதிகரித்து வரும் தேவைகளைப் பூர்த்தி செய்ய காப்புறுதித் தொழில்துறை தயாராக உள்ளது. விரைவான வேகத்தில் டிஜிட்டல் மாற்றத்தை உள்வாங்கிக் கொண்ட முதன்முதல் தொழில்துறைகளில் காப்புறுதித் துறையும் ஒன்று என்று சொல்வது மிகவும் பொருத்தமானது. வாடிக்கையாளர் தேவைகள் பூர்த்தி செய்யப்படுவதை உறுதி செய்வதற்காக தொழில்துறையானது காப்புறுதித் திட்டங்கள் தொடர்பான புத்தாக்கங்களில் தொடர்ந்து முதலீடு செய்து வருகின்றது. வாடிக்கையாளர்களுக்கு பிரத்தியேகமாக உருவாக்கப்பட்ட காப்புறுதித் தீர்வுகளை உருவாக்க வாடிக்கையாளர் நடத்தைகளை அடையாளம் காண தரவு மற்றும் ஆராய்ச்சியில் இந்தத் தொழில்துறை பெருமளவில் முதலீடு செய்கின்றது.

## Samsung – Warner Bros. Pictures ஒன்றிணைந்த 8K தரத்திலான திரைப்பட Trailer



பதினேழு (17) ஆண்டுகளாக உலகிலேயே முன்னணித் தொலைக்காட்சி தயாரிப்பாளரான *Samsung Electronics*, ஆனது *Warner Bros. Pictures* உடன் ஒரு அர்த்தபூர்வமான கூட்டுவணிகச் செயற்பாட்டினை மேற்கொண்டு வருகின்றது. இக்கூட்டுவணிகச் செயற்பாட்டினைத் தனது நியோ *QLED 8K* திரைகளில் மிகவும் ஆவலுடன் எதிர்பார்க்கப்படுகின்ற திரைப்பட *Trailer* களைக் காண்பிக்கின்றது.இதன் மூலம் சர்வதேச ரீதியில் 65,000 க்கும் மேற்பட்ட *Retail Store* களில் பார்வையாளர்களைக் கவர்ந்து வருகின்றது.

"இத்தொழில் சார் கூட்டானது *8K* யினை உளீற்கும் ஒரு அற்புதமான முயற்சியாகும். இது *NEO QLED 8K* இன் சிறப்பியல்புகளினை வெளிக்கொணருகின்றது. அது மட்டும் அல்லாது சினிமா தரத்தினில் திரைப்படங்களைப் பார்த்து ரசிப்பதற்கு அதன் பாவனையாளர்களுக்கு களம் அமைத்துக் கொடுக்கின்றது" என்று *Samsung Electronics Visual Display Business* இன் நிறைவேற்று அதிகாரம் கொண்ட உப தலைவர் *Cheolgi Kim* அவர்கள் கூறினார். *Samsun* ஆனது *Warner Bros.* உடன் தனது கரங்களினை கோர்த்துக் கொண்ட நிகழ்வானது *Ultra – Premium TV* தொழில்நுட்பம் ஊடாக அதன் பாவனையாளர்கள் தமக்குப் பிடித்த திரைப்படங்களை முழு மனநிறைவுடன் கண்டு அனுபவிக்கும் வாய்ப்பினையும் *Samsung* ஆனது பெற்றுத் தந்திருக்கின்றது.

*8K Content* இற்கான கேள்வியினைப் பரீட்சித்துப் பார்த்து அதன் தேவைதனை நன்கு புரிந்து கொள்ளும் முகமாக, *Samsung* மற்றும் *Warner Bros.* என்பன இந்த ஆண்டின் தொடக்கக் காலப் பகுதியிலேயே அமெரிக்கா மற்றும் ஐரோப்பாவில் உள்ள 450க்கும் மேற்பட்ட சில்லறை விற்பனை இஸ்தாபனங்களில் *'Creed III' Trailer* ரைக் காட்சிப் படுத்துவதன் மூலமாக தமது கூட்டுவணிகச் செயல்பாட்டினைப் பரீட்சித்துப் பார்த்தனர். இம் முயற்சியானது சர்வதேச ரீதியாகப் பார்வையாளர்களிடமிருந்து ஏராளமான கவனத்தையும் விருப்பார்வத்தினையும் பெற்றது.

# இலங்கை, மாலைதீவுகளுக்கான பிரான்ஸ் தூதுவர் யாழ். பல்கலைக்கழகத்துக்கு விஜயம்





(யாழ்.விசேட, யாழ்ப்பாணம் குறூப் நிருபர்கள்)

இலங்கை மற்றும் மாலைத்தீவுகளுக்கான பிரான்ஸ் தூதுவர் ஜீன் ப்ராங்கோஸிஸ் பக்றெற் தலைமையிலான குழுவினர், யாழ்.பல்கலைக்கழகத்துக்கு உத்தியோகபூர்வ விஜயமொன்றை நேற்று மேற்கொண்டிருந்தனர். இதன்போது பல்கலைக்கழகத் துணைவேந்தர் பேராசிரியர் சி.சிறிசற்குணராஜாவைச் சந்தித்துக் கலந்துரையாடினர்.

இலங்கை மற்றும் மாலைத்தீவுகளுக்கான பிரான்ஸ் தூதுவர் ஜீன் ப்ராங்கோஸிஸ் பக்றெற், கலாசார ஒத்துழைப்புக்கான துணைத் தூதுவர் ஒலிவியா பெலீமியர் மற்றும் பிரான்ஸ் தூதரகத்தின் ஊடகத் தொடர்பாடல் அதிகாரி டினுசா இல்லப்பெருமா ஆகியோர் அடங்கிய குழுவினரே இவ்விஜயத்தில் கலந்துகொண்டனர்.

பல்கலைக்கழகத்துக்கு வருகை தந்த பிரான்ஸ் தூதுவர் தலைமையிலான குழுவினரை யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத் துணைவேந்தர் பேராசிரியர் சி. சிறிசற்குணராஜா, பதிவாளர் வி. காண்டீபன், கலைப்பீடாதிபதி பேராசிரியர் சி. ரகுராம் ஆகியோர் சந்தித்துக் கலந்துரையாடினர்.

சமகால விடயங்கள் மற்றும் பிரான்ஸ் தூதரகத்தினூடாக யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் முன்னெடுக்கப்படும் கற்றல் மற்றும் ஆராய்ச்சி செயற்றிட்டங்களின் மீளாய்வு குறித்தும் இச்சந்திப்பின் போது கலந்துரையாடப்பட்டது.

## வடக்கின் உதயம்

வவுனியா குற்றத்தடுப்பு பிரிவு பொலிஸார் அதிரடி:

# இரு பெண்கள் உட்பட நால்வர் கைதுசெய்யப்பட்டனர்

வவுனியா விசேட நிருபர்

மன்னாரிலிருந்து திருகோணமலை நோக்கி பயணித்த பஸ்சில் 20 பவுண் தங்கநகைகளை திருடிய குற்றச்சாட்டில் இரு பெண்கள் உட்பட நால்வர் கைது செய்யப்பட்டுள்ளதாக வவுனியா குற்றத் தடுப்பு பிரிவு பொலிஸார் தெரிவித்தனர்.

மன்னாரிலிருந்து திருகோணமலை நோக்கி பயணித்த பஸ்சில் சென்ற ஆசிரியரொருவரின் தங்க நகைகளே இவ்வாறு திருடப்பட்டுள்ளன. அதற்குள் இருந்த அவரது சங்கிலி, மோதிரம் உட்பட 20 பவுண் நகைகள் காணாமல் போயுள்ளதாக தெரியவருகின்றது.

இதனையடுத்து வவுனியா குற்றத்தடுப்பு பொலிஸ்பிரிவில் ஆசிரியர் முறைப்பாடு செய்துள்ளார். முறைப்பாட்டையடுத்து வவுனியா தலைமையகப் பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி ஜயதிலகவின் வழிகாட்டலில் குற்றத்தடுப்பு பிரிவு அதிகாரி ரத்நாயக்கா தலைமையிலான குழுவினர் துரித விசாரணைகளை முன்னெடுத்திருந்தனர்.

அதற்கமைய சம்பவம் தொடர்பில் மகாறம்பைக்குளத்தில் வாடகைக்கு வீடு எடுத்து தங்கியிருந்த புத்தளம், 4ஆம் கட்டைப் பகுதியைச் சேர்ந்த இரு பெண்களும், இரு ஆண்களுமாக 4 பேர் கைது செய்யப்பட்டதுடன், திருடப்பட்டதாக கூறப்பட்ட 20 பவுண் நகை, முச்சக்கர வண்டி மற்றும் பட்டா ரக வாகனம் ஒன்றும் பொலிஸாரால் கைப்பற்றப்பட்டுள்ளது.

மேலதிக விசாரணையின் பின்னர் நால்வரை நீதிமன்றத்தில் ஆஜர்படுத்த நடவடிக்கை எடுத்துள்ளதாக பொலிஸார் மேலும் தெரிவித்தனர்.

யுத்தத்தால் உயிரிழந்தவர்களுக்கு

# பொதுவான நினைவுச்சின்னமொன்றை அமைப்பதற்கு இடமளிக்கப்போவதில்லை

## தமிழ்த் தேசியப் பசுமை இயக்க தலைவர் பொ. ஐங்கரநேசன்

(யாழ்.விசேட நிருபர்)



யுத்தத்தில் உயிரிழந்த இராணுவத்தினர், போராளிகள், பொதுமக்கள் ஆகிய முத்தரப்பினருக்கும் பொதுவான நினைவுச் சின்னமொன்றை அமைப்பதற்கான தீவிர முயற்சியில் அரசாங்கம் இறங்கியுள்ளதாகவும் அதற்கு எக்காரணம் கொண்டும் இடமளிக்கபோவதில்லையெனவும் தமிழ்த் தேசியப் பசுமை இயக்கத்தின் தலைவர் . ஐங்கரநேசன் தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதிச் செயலகம் போரில் உயிர்நீத்தவர்களுக்கான பொதுநினைவுச் சின்னமொன்றை அமைக்க முற்பட்டிருப்பது தொடர்பாக ஊடகங்களுக்கு வெளியிட்டுள்ள அறிக்கையிலேயே அவர் இதனை குறிப்பிட்டுள்ளார்.

அவர் தொடர்ந்து கருத்து தெரிவிக்கையில்,

இதுதொடர்பாக அரசதரப்பால் நியமிக்கப்பட்ட நிபுணர்குழு யாழ். மாவட்ட செயலகத்தில் கடந்த சனிக்கிழமை கலந்துரையாடலொன்றை நிகழ்த்தியுள்ளது.

தமிழர் பகுதிகளிலும் இக்கலந்துரையாடல் தொடர்ந்து இடம்பெறவுள்ளது. ஆனால், அரசதரப்பு எத்தகைய தீவிரம் காட்டினாலும் போரில் உயிரிழந்த அனைவருக்கும் பொதுவான நினைவுச்சின்னமொன்றை அமைப்பதற்கு இடமளிக்கபோவதில்லையென அவர் தெரிவித்துள்ளார்.

ஐக்கியநாடுகள் சபையின் மனித உரிமைகள் ஆணையத்தின் தீர்மானத்துக்கமைவாக நல்லாட்சி அரசாங்கம் தான் ஏற்றுக்கொண்ட நிலைமாறுகால நீதிப்பொறிமுறையின் கீழ் இனங்களுக்கிடையில் நல்லிணக்கத்தை ஏற்படுத்தும் விதமாகப் போரில் உயிர்நீத்தவர்களுக்கான பொது நினைவுச் சின்னமொன்றை அமைப்பதற்கு முடிவெடுத்திருந்தது.

போராளிகளையும் பொதுமக்களையும் அவர்களைக் கொன்றொழித்த படைத்தரப்பையும் ஒன்றாக நினைவில் கொள்ளும் இம்முடிவுக்கு தமிழ் மக்கள் அப்போதே தமது எதிர்ப்பை வெளிக்காட்டியிருந்தனர்.

போர்முடிவுற்று 14 வருடங்கள் கடந்துவிட்ட போதிலும் இனங்களுக்கிடையில் நல்லிணக்கத்தை ஏற்படுத்துவதற்கான எந்தவொரு ஆக்கபூர்வ சமிக்ஞையையும் அரசதரப்பு வெளிக்காட்டவில்லையென அவர் குறிப்பிட்டுள்ளார்.

# வண்ணை நாவலர் வித்தியாலயத்தின் 175 ஆவது ஆண்டு நிறைவு விழா





யாழ்ப்பாணம், வண்ணை நாவலர் மகா வித்தியாலயத்தின் 175ஆவது ஆண்டு நிறைவு விழா, பாடசாலை அதிபர் க.கலியுகன் தலைமையில் நேற்று முன்தினம் திங்கட்கிழமை (25) நடைபெற்றது.

இவ்விழாவில் பிரதம விருந்தினராக யாழ்ப்பாண வலயக் கல்விப் பணிப்பாளரும் ஆறுமுக நாவலர் தர்மகர்த்தாசபை தலைவருமான பொ.ரவிச்சந்திரன் கலந்துகொள்ளவுள்ளதுடன், சிறப்பு விருந்தினராக கோப்பாய் ஆசிரிய கலாசாலை முதல்வர் சந்திரமௌலீசன் லலீசன் கலந்துகொள்ளவுள்ளார்.

விழாவின் ஆரம்பத்தில் பாடசாலையில் அமைந்துள்ள நாவலர் திருவுருவச் சிலைக்கு வணக்கம் செலுத்தப்பட்டதுடன், நால்வர் திருக்கோவிலில் வழிபாடுகள் நடைபெற்றன.

மேலும், விழாவில் கோட்டக் கல்விப் பணிப்பாளர் நா.சிவநேசன், நாவலர் தர்மகர்த்தா சபையினர், பழைய மாணவர்கள் உள்ளிட்ட பலர் கலந்துகொண்டு சிறப்பித்தனர்.

# விவசாயிகளுக்கு எலிக்காய்ச்சல் விழிப்புணர்வு செயலமர்வு

(சாவகச்சேரி விசேட நிருபர்)

பூநகரிப் பிரதேச விவசாயிகளுக்கு எலிக்காய்ச்சல் தொடர்பான விழிப்புணர்வுக் கூட்டம் நேற்றுமுன்தினம் பூநகரி சுகாதார வைத்திய அதிகாரி அலுவலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்றது.

பூநகரி சுகாதார வைத்திய அதிகாரி தலைமையில் நடைபெற்ற இக்கருத்தரங்கில் சுகாதார வைத்திய அதிகாரி மருத்துவர் துஷ்யந்தன் மற்றும் மேற்பார்வை பொதுச் சுகாதாரப் பரிசோதகர் ஆ.ஜென்சன் றெனால்ட் ஆகியோர் கலந்துகொண்டனர். இது தொடர்பாக சுகாதார அதிகாரி கருத்துத் தெரிவிக்கையில்,

தற்போது பருவகாலப் பயிர்ச்செய்கை ஆரம்பித்துள்ளதால் எலிகளின் சிறுநீர் நீருடன் கலக்கும் வாய்ப்புகள் அதிகம். எனவே வயல் வேலைகளில் ஈடுபடும் போது பாதணிகளை அணியுமாறும் அறிவுறுத்தல் வழங்கப்பட்டது.

மேலும் எலிக்காய்ச்சல் ஏற்பட்டால் உரிய சிகிச்சைகளை மேற்கொள்ளுமாறும் அறிவுறுத்தப்பட்டனர்.

# வாகன வருமான வரிப்பத்திரம் தற்காலிகமாக இடைநிறுத்தம்

(கோப்பாய் குறூப் நிருபர்)



வாகன வருமான வரிப்பத்திரம் வழங்கும் நடைமுறை கடந்த செப்டெம்பர் 24 ஆம் திகதியுடன் தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டுள்ளதாகவும் அதற்கான முன்னாயத்த நடைமுறைகளை பின்பற்றுமாறும் மோட்டார் போக்குவரத்து திணைக்களத்தின் வட மாகாண ஆணையாளர் சுஜீவா தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பில் அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில்,

வாகன வருமான வரிப் பத்திரம் வழங்கும் புதிய நடைமுறை (ERL 20) எதிர்வரும் ஒக்டோபர் மாதம் 01ஆம் திகதி நாடளாவிய ரீதியில் பரீட்சார்த்தமாக நடைமுறைப்படுத்த தீர்மானிக்கப்பட்டுள்ளது.

அதற்கமைய செப்டெம்பர் மாதம் 24ஆம் திகதி நள்ளிரவு 12 மணியுடன் இணைய வழி வாகன வருமான வரி அனுமதிப்பத்திரம் பெறும் முறை தற்காலிகமாக நிறுத்த மீண்டும் ஒக்டோபர் மாதம் 06 ஆம் திகதி முதல் இது வழமைக்கு திரும்பும்

கருமபீடங்கள் ஊடான செயற்பாடுகளும் செப்டெம்பர் மாதம் 26ஆம் திகதி பிற்பகல் 3.00 மணியுடன் தற்காலிகமாக நிறுத்தப்பட்டுள்ளது.

அதன்படி செப்டெம்பர் 27ஆம் திகறி முதல் ஒக்டோபர் 02ஆம் திகதி வரை நாடளாவிய ரீதியில் வாகன வருமானவரி அனுமதிப்பத்திரம் விநியோகிக்கும் செயன்முறை நடைமுறைப்படுத்தப்படமாட்டாது.

பொதுமக்களின் நலன்கருதி செப்டெம்பர் 27ஆம் திகதி தொடக்கம் ஒக்டோபர் 06ஆம் திகதி வரையான இடைப்பட்ட காலப்பகுதியில் வருமான வரி அனுமதிப்பத்திரங்களுக்கான அறவிடப்படுவதிலிருந்து விலக்களிக்கப்பட்டுள்ளது.

பின்னர் மீண்டும் வருமானவரி வழங்கும் செயற்பாடானது ஒக்டோபர் மாதம் 3ஆம் திகதி பரீட்சார்த்தமாக ஆரம்பிக்கப்படும்.

இப்பரீட்சார்த்த காலப்பகுதி முடிவடையும் வரை வடக்கு மாகாணத்துக்குட்பட்ட வாகன வருமானவரி அனுமதிப்பத்திரம் மட்டும் வழங்கப்படும் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

விடுதலைப் புலிகள் புதைத்ததாக கருதப்படும் தங்க நகைகள்:

# முல்லையில் இரண்டாவது நாளாக தொடரும் அகழ்வு பணிகள்

(ஓமந்தை விசேட நிருபர்)



விடுதலைப் புலிகளால் புதைக்கப்பட்ட ஆயுதங்கள், தங்கநகைகளை இருப்பதாக தெரிவித்து முள்ளிவாய்க்கால் மேற்கு பகுதியில் நேற்றும் இரண்டாவது நாளாக (26) அகழ்வு பணிகள் முன்னெடுக்கப்பட்டன.

முல்லைத்தீவு முள்ளிவாய்க்கால் மேற்கு பகுதியில் விடுதலைப் புலிகளால் புதைக்கப்பட்ட ஆயுதங்கள், தங்க நகைகள் இருப்பதாக புலனாய்வு பிரிவினருக்கு கிடைத்த இரகசிய தகவலுக்கமைய நீதிமன்ற அனுமதியை பெற்று நேற்றுமுன்தினம் (25)பிற்பகல் அகழ்வுப்பணிகள் பொலிஸாரால் முன்னெடுக்கப்பட்டிருந்தன.

இந்நிலையில் அகழ்வு பணியில் எந்தவொரு ஆயுதங்களோ, நகைகளோ மீட்கப்படாமையால் நேற்றுமுன்தினம் (25) மாலை 6 மணியுடன் நிறுத்தப்பட்டு மீண்டும் நேற்றையதினம் காலை 9 மணியளவில் மீண்டும் இரண்டாவது நாளாக அகழ்வு பணியானது ஆரம்பிக்கப்பட்டது.

கனரக இயந்திரம் கொண்டு தோண்டப்பட்ட போதும் நிலத்துக்குள் இருந்து தகரங்களும், ஒலிநாடா ஒன்றும் மீட்கப்பட்டிருந்தது. மேலும் நிலத்தை தோண்ட நீர்வர தொடங்கியுள்ளதால் நீரை வெளியேற்றும் பணியானது தற்போது நடைபெற்று வருகிறது. இதுவரை புதைக்கப்பட்டதாக கூறப்படும் பொருட்கள் எவையும் மீட்கப்படவில்லை.

முல்லைத்தீவு நீதிவான் நீதிமன்ற நீதிபதி தர்மலிங்கம் பிரதீபன் முன்னிலையில் பொலிஸார், விஷேட அதிரடி படையினர், இராணுவத்தினர், கிராம சேவையாளர், தொல்லியல் திணைக்களத்தினர், சுகாதார பிரிவினர், தடயவியல் பொலிஸார் பிரசன்னத்துடன் அகழ்வு பணிகள் இடம்பெற்று வருகின்றன.

# சாவகச்சேரி நகரசபை மண்டபத்தில் குளவிக் கூடுகளால் அச்சுறுத்தல்

(சாவகச்சேரி விசேட நிருபர்)



சாவகச்சேரி நகரசபை பொன்விழா மண்டப மேற்சுவரில் பெரும் ஆபத்தை விளைவிக்கக் கூடிய பாரிய குளவிக்கூடு ஒன்று இருப்பதாக பொதுமக்கள் தெரிவித்துள்ளனர்.

மக்கள் நடமாட்டம் அதிகமாகவுள்ள இப்பகுதிகளில் குளவிக் கூட்டை அகற்றாத பட்சத்தில் பொன்விழா மண்டபத்துக்கு வருகை தருவோர்,

நீதிமன்றத்துக்கு வருகை தருவோர் எனப்பலரும் பாதிப்பை எதிர்கொள்ள நேரிடும் என பொது மக்கள் தெரிவிக்கின்றனர். எனவே நகரசபை விரைந்து குளவிக்கூட்டை அகற்றுவதற்கான நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் எனவும் கேட்டுக்கொண்டுள்ளனர்.

கடந்த சில தினங்களுக்கு முன்பாக சாவகச்சேரி சோலை அம்மன் ஆலய பகுதி மற்றும் கரம்பகம் பகுதிகளில் குளவிக்கூடு கலைந்ததில் பெருமளவானோர் குளவிக் கொட்டுக்கு இலக்காகி வைத்தியசாலைகளில் சிகிச்சை பெற்றனர்.

# மலைச்சாரல்



## பதுளை –மாப்பாகலை தோட்டத்தில் தீ விபத்து; மாவட்ட அரச அதிபருடன் இ.தொ.கா தலைவர் கலந்துரையாடல்



பதுளை–மாப்பாகலை பகுதியிலுள்ள நெடுங்குடியிருப்பில் தீ பரவியதையடுத்து அங்குள்ள மக்கள் அப்பகுதியிலிருந்து பாதுகாப்பாக வெளியேற்றப்பட்டுள்ளனர்.

இவர்களை பாதுகாப்பான முறையில் பாடசாலைகளில் தங்க வைத்து அவர்களுக்கு தேவையான உணவு மற்றும் ஏனைய வசதிகளை உடனடியாக செய்து கொடுக்க நடவடிக்கை எடுக்கவேண்டுமென இ.தொ.கா தலைவரும் கிழக்கு மாகாண ஆளுநருமான செந்தில் தொண்டமான், பதுளை மாவட்ட அரச அதிபரிடம் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

அதற்கமைய தேவையான ஏற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

மேலும் சேதமடைந்த குடியிருப்புகளை மறுசீரமைக்க தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு தோட்ட முகாமையாளருக்கு செந்தில் தொண்டமான் பணிப்புரை விடுத்துள்ளார்.





பதுளை, பசறை யூரி தோட்ட, மாப்பகல பிரிவு நெடுங்குடியிருப்பில் ஏற்பட்ட தீ விபத்து காரணமாக 9 குடும்பங்களைச் சேர்ந்த 33 பேர் பாதிக்கப்பட்டதுடன் ஏழு லயன் குடியிருப்புக்கள் முற்றாக எரிந்து நாசமடைந்துள்ளன.

### மின்னொழுக்கு சம்பவங்களை கட்டுப்படுத்த

## பாதுகாப்பற்ற மின்கம்பங்களை சீர்செய்யுமாறு அமைச்சர் ஜீவன் தொண்டமான் பணிப்பு

(ஹற்றன் விசேட நிருபர்)

பாதுகாப்பற்ற மின்கம்பங்கள், மின் ஒழுக்குகள் தொடர்பில் விசேட கவனம் செலுத்தி அவற்றை சீர்செய்வதற்கு உடனடியாக நடவடிக்கை மேற்கொள்ளுமாறு அமைச்சர் ஜீவன் தொண்டமான் சம்மந்தப்பட்ட அதிகாரிகளுக்கு பணிப்புரை விடுத்துள்ளார்.

பசறை யூரி தோட்ட, மாப்பாகல பிரிவில் நெடுங்குடியிருப்பில் ஏற்பட்ட தீ விபத்து சம்பவத்தையடுத்தே அமைச்சர் இவ்வாறு பணிப்புரை விடுத்துள்ளார்.



மேலும் யூரி தோட்ட, மாப்பாகல பிரிவில் ஏற்பட்ட தீ விபத்தினால் பாதிக்கப்பட்ட மக்களின் வாழ்க்கையை மீண்டும் இயல்பு நிலைக்கு கொண்டு வருவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறும் இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் பொதுச்செயலாளரும், நீர்வழங்கல் மற்றும் தோட்ட உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தி அமைச்சருமான ஜீவன் தொண்டமான் பணிப்புரை விடுத்துள்ளார்.

இந்த பணிப்புரையை அடுத்து பெருந்தோட்ட மனிதவள அபிவிருத்தி நிதியத்தால் மேற்படி தோட்டத்துக்கு பிரதிநிதிகள் குழுவொன்று அனுப்பிவைக்கப்பட்டுள்ளது.

பாதிக்கப்பட்டுள்ள மக்களுக்கான தங்குமிட வசதி, உணவு மற்றும் மருத்துவ வசதிகளை இக்குழு ஏற்படுத்திக்கொடுக்கவுள்ளது. அத்துடன், அவர்களுக்கான மாற்று இடங்கள் உள்ளிட்ட விடயங்கள் தொடர்பிலும் அமைச்சருக்கு அறிக்கையொன்றையும் கையளிக்கவுள்ளது.

தீ விபத்தால் 9 குடும்பங்களைச் சேர்ந்த 33 பேர் வீடு மற்றும் உடமைகளை இழந்து பாதிக்கப்பட்டுள்ளனர். அவர்களின் வீடுகளும் தீக்கிரையாகியுள்ளன.

இதுதொடர்பில் அமைச்சர் ஜீவன் தொண்டமானின் கவனத்துக்கு கொண்டுவரப்பட்டது. இதனையடுத்தே மேற்படி நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டுள்ளது.

## கம்பளையில் புதிய சிறைச்சாலை



(அக்குறணை குறூப் நிருபர்)

கம்பளை நகரில் புதிய சிறைச்சாலையொன்றை அமைக்க நீதி, அரசியலமைப்பு, சட்டமறுசீரமைப்பு அமைச்சர் விஜயதாச ராஜபக்ச அடிக்கல் நாட்டிவைத்தார். இவ்வைபவத்தில் மத்திய மாகாண ஆளுநர் லலித் யூ கமகே, இராஜாங்க அமைச்சர் அனுராதா ஜயரத்ன ஆகியோரும் கலந்து கொண்டனர்.

### சப்ரகமுவ மாகாணத்தில்

## வாகன வருமான வரிப்பத்திர விநியோகம் தற்காலிகமாக இடைநிறுத்தம்

(பலாங்கொடை தினகரன் நிருபர்)

சப்ரகமுவ மாகாணத்தில் வாகனங்களுக்கான வருமான வரிப்பத்திரம் விநியோகிப்பது தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டுள்ளதாக சப்ரகமுவ மாகாண சபை அறிவித்துள்ளது.

இம்மாதம் 27ஆம் திகதி முதல் எதிர்வரும் ஒக்டோபர் மாதம் இரண்டாம் திகதி வரை ஒரு வார காலத்துக்கு இச்சேவை தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டுள்ளதாக சப்ரகமுவ மாகாண சபை அறிவித்துள்ளது.

அதற்கமைய சப்ரகமுவ மாகாணத்தில் சகல பிரதேச செயலக காரியாலயங்களிலும் வாகனங்களுக்கான வருமான வரிப்பத்திரம் வழங்கும் பணிகள் இத்தினங்களில் இடைநிறுத்தப்பட்டுள்ளதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது. சப்ரகமுவ மாகாண சபை பிரதான செயலாளர் மஹிந்த எஸ். வீரசூரிய இதுதொடர்பில் மாகாணத்திலுள்ள அனைத்து பிரதேச செயலாளர்களுக்கு அனுப்பி உள்ள கடிதத்தில் குறிப்பிட்டுள்ளதாவது, வாகன அனுமதிப்பத்திரம் விநியோகிக்கும் நடைமுறையில் புதிய மாற்றம் ஒன்றை அறிமுகப்படுத்தும் நோக்கில் தற்பொழுது நடைமுறையிலுள்ள தகவல்கள் புதிய நடைமுறைக்கு உள்வாங்குவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்தார்.



மாகாண மட்ட தமிழ் மொழித்தினப் போட்டியில் வில்லுப்பாட்டு போட்டியில் தலவாக்கலை தேசிய பாடசாலை முதலிடத்தைப் பெற்று தேசிய மட்டத்துக்கு தெரிவாகியுள்ளது. மத்திய மாகாணத்தில் 14 கல்வி வலயங்களுடன் போட்டியிட்டு தலவாக்கலை தேசிய பாடசாலை முதலிடத்தைப் பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது. (படம் தலவாக்கலை குறூப் நிருபர்)

## எஸ்.பி. மறைந்து 3 வருட நிறைவு; சிறப்பு அஞ்சலி இசை நிகழ்ச்சி



புசல்லாவை தினகரன் நிருபர்

மறைந்த இந்திய பின்னணிப் பாடகர் எஸ்.பி.பாலசுப்ரமணியவின் மூன்றாம் ஆண்டு நினைவு தினத்தை முன்னிட்டு சிறப்பு அஞ்சலி இசைநிகழ்ச்சி எதிர்வரும் 29ஆம் திகதி ஹற்றன் நகர சபை மண்டபத்தில் மாலை 04.00 மணிக்கு பிரமாண்டமாக நடைபெறவுள்ளது.

இந்நிகழ்ச்சிக்கு பிரபல இசைக்குழுவான கலைமாமணி S.சௌந்தர்ராகவனின் Fantasy இசைக்குழுவினர் இசை வழங்கவுள்ளனர். மேலும் பல முன்னணி இசைக்கலைஞர்கள் இந்நிகழ்வில் கலந்து சிறப்பிக்கவுள்ளனர். நிகழ்ச்சிக்கான அனுமதி இலவசமாகும். இதன்போது பாடகர் எஸ்.பி.பாலசுப்ரமணியனின் திருவுருவப்படத்துக்கு மலர்மாலை அணிவித்து அவரது பாடல்களை பாடி இசைத்துறை கலைஞர்கள் கௌரவிக்கவுள்ளனர்.

## எட்டியாந்தோட்டை எக்கிளாஸ் முத்துமாரியம்மன் ஆலய திருவிழா

எட்டியாந்தோட்டை, எக்கிளாஸ் கீழ்ப்பிரிவில் அமைந்துள்ள மஹாசக்தி ஸ்ரீ முத்துமாரியம்மன் ஆலயத்தின் வருடாந்த தேர்த்திருவிழா நாளை வியாழக்கிழமை நடைபெறவுள்ளது.

இம்மாதம் 20ஆம் திகதி கொடியேற்றத்துடன் ஆலயத்தின் வருடாந்த அலங்கார உற்சவம் ஆரம்பமானது.

கடந்த நாட்களில் நடைபெற்ற விசேட பூஜை வழிபாடுகளை தொடர்ந்து இன்று புதன்கிழமை இரவு சப்பர திருவிழா நடைபெறவுள்ளது. இதனை தொடர்ந்து நாளை வியாழக்கிழமை முற்பகல் நவோத்திர சகஸ்ர சங்காபிஷேகம் நடைபெறவுள்ளதுடன், இதன் பின்னர் முற்பகல் 10.45 மணியளவில் தேர்த்திருவிழா ஆரம்பமாகவுள்ளது.

தேர்த் திருவிழவை தொடர்ந்து வெள்ளிக்கிழமை காலை களனி கங்கையில் தீர்த்தோற்சவம் நடைபெறவுள்ளது. இதனை தொடர்ந்து மாலை திருவூஞ்சல் மற்றும் கொடியிறக்கம் நிகழ்வுகள் நடைபெறவுள்ளன.




கண்டி உதவி இந்தியத் தூதுவராலயத்தின் அனுசரணையுடன் கண்டியில் தகவல் தொழில்நுட்ப தினம் கொண்டாடப்பட்டது. இதில் பிரதம அதிதியாக வடமேல் மாகாண ஆளுநர் லக்ஷ்மன் யாப்பா அபேவர்தன கலந்து கொண்டார். விசேட அதிதியாக பெருந்தோட்ட மனிதவள அபிவிருத்தி நம்பிக்கை நிதியத்தின் தலைவர் பாரத் அருள்சாமி மற்றும் கண்டி உதவி இந்தியத் தூதுவர் டாக்டர். எஸ். ஆதிரா உட்பட பலர் கலந்து கொண்டார்.



கே/மாவ/ மாவனெல்ல ஸாஹிராக் கல்லூரி வணிகக் கழக மாணவர்களும் ஆசிரியர்களும் கடந்த 21ஆம் திகதி கொழும்பு லேக்ஹவுஸ் நிறுவனத்தைப் பார்வையிட வந்திருந்த போது எடுக்கப்பட்ட படம். படம் ;துஸ்மந்த மாயாதுன்ன )

## ஊவா மாகாணத்தில் கடும் குளிர், பனிப்பொழிவு தேயிலை செய்கை பாதிப்பு

(ஊவா சுழற்சி நிருபர்.)

ஊவா மாகாணத்தில் கடந்த ஒரு வாரகாலமாக கடும் குளிரும், பனிப்பொழிவும் நிலவுவதால் மக்களின் இயல்புவாழ்க்கை பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளது. இதனால் தோட்டத் தொழிலாளர்கள் மாத்திரமின்றி பாடசாலை மாணவர்கள் என பலரும் பாதிக்கப்பட்டுள்ளனர். கடும் பனிப்பொழிவினால் மரக்கறி செய்கை பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளது. அது மட்டுமின்றி தேயிலைச் செடிகளில் ஒரு வகை கரும்புள்ளிகள் விழுந்து இலைவாடல் நோய் ஏற்பட்டு வருவதாக தோட்ட உரிமையாளர்கள் தெரிவிக்கின்றனர். ஏனைய பொது மக்களும் வெகுவாகப் பாதிக்கப்பட்டு வருகின்றனர். அதேவேளை கை, கால் விறைப்பு, தோல் வெடிப்புக்களும் ஏற்படுவதாக பிரதேச மக்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

# கிழக்கின் குரல்



# வாகன வருமான அனுமதிப்பத்திரம் வழங்கல் தற்காலிகமாக இடைநிறுத்தம்

**ஏறாவூர் சுழற்சி, ரொட்டவெவ குறூப் நிருபர்கள்**

கிழக்கு மாகாணத்தில் வாகன வருமான அனுமதிப்பத்திரம் வழங்கும் கணினி முறை வலையமைப்பை புதுப்பிக்கும் நோக்கில் இன்று புதன்கிழமை (27) முதல் எதிர்வரும் ஒக்டோபர் 2ஆம் திகதிவரை வாகன வருமான அனுமதிப்பத்திரம் வழங்குதல் தற்காலிகமாக நிறுத்தப்படுவதாக, அம்மாகாண மோட்டார் போக்குவரத்து திணைக்கள ஆணையாளர் ஐ.எம்.றிகாஸ் அறிவித்துள்ளார்.

இக்காலப்பகுதியில் கிழக்கு மாகாணத்தில் வருமான அனுமதிப்பத்திரம் வழங்கும் சகல கருமபீடங்களும் மூடப்படுவதாகவும், அவர் தெரிவித்தார்.

வாகன வருமான அனுமதிப் பத்திரம் வழங்குவதில் தற்போதுள்ள செயலிக்கு பதிலாக புதிய செயலியை உருவாக்கும் நடவடிக்கை முடிவடைந்துள்ளதாகவும் இந்த புதிய செயலியின் உதவியுடன் ஒக்டோபர் 3ஆம் திகதி முதல் இந்த செயற்பாடு மீண்டும் ஆரம்பிக்கப்படுமெனவும், அவர் தெரிவித்தார்.

இதேவேளை, குறிப்பிட்ட காலப்பகுதிக்கு உரித்தான தாமதக் கட்டணம் அறவிடுவதை இன்று (27) முதல் ஒக்டோபர் 6ஆம் திகதிவரை இடைநிறுத்துவதற்கு தீர்மானித்துள்ளதாகவும் பொதுமக்களுக்கு அவர் அறிவித்துள்ளார்.



# திருக்கோவிலில் பனை உற்பத்திகளை அதிகரிப்பதற்கான வேலைத்திட்டம்

**திருக்கோவில் தினகரன் நிருபர்**



அம்பாறை, திருக்கோவில் பிரதேசத்தில் சுயதொழில் முயற்சியினூடாக பொருளாதாரத்தை கட்டியெழுப்பும் நோக்கில் பனை உற்பத்திப் பொருட்களை அதிகரிப்பதற்கான வேலைத்திட்டமொன்று ஆரம்பிக்கப்படவுள்ளது.

இது தொடர்பாக பொது மக்களை விழிப்புணர்வூட்டும் செயலமர்வு, திருக்கோவில் பிரதேச செயலாளர் தங்கையா கஜேந்திரன் தலைமையில் திருக்கோவில் பிரதேச செயலகத்தில் நேற்று செவ்வாய்க்கிழமை (26) நடைபெற்றது.

மட்டக்களப்பு மற்றும் அம்பாறை மாவட்டங்களை ஒன்றிணைத்து பனை அபிவிருத்தி சபையினூடாக பாசிக்குடா, அறுகம்பை போன்ற சுற்றுலாத் தளங்களை மையமாக் கொண்டு பனை உற்பத்திப் பொருட்களை அதிகரித்து, பொருளாதாரத்தை கட்டியெழுப்ப திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

அந்த வகையில், திருக்கோவில் பிரதேசத்தில் பனை உற்பத்திகளை ஊக்குவிப்பதற்காக குழுக்களை அமைத்து, அக்குழுக்களினூடாக ஆர்வமுடையோருக்கு பயிற்சி வழங்கி, பனை உற்பத்திப் பொருட்களை அதிகரித்து, உற்பத்தியாளர்களிடமிருந்து உற்பத்திகளை பனை அபிவிருத்தி சபை கொள்வனவு செய்யவுள்ளது.

இதனூடாக உற்பத்தியாளர்களின் பொருளாதாரத்தை கட்டியெழுப்புவதற்கான செயற்திட்டமாக இந்தச் செயலமர்வில் ஆராயப்பட்டது.

### தௌபீக் எம்.பி.யின் முயற்சியால்

# குறிஞ்சாக்கேணி பாலம் புனரமைக்க ஏற்பாடு

**கந்தளாய் தினகரன் நிருபர்**



கிண்ணியா, குறிஞ்சாக்கேணி பாலம் அமைக்கும் வேலை மீண்டும் மிக விரைவில் ஆரம்பிக்கப் படவுள்ளது. திருகோணமலை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் எம்.எஸ்.தௌபீக்கின் தொடர் முயற்சியினால் சவூதி அபிவிருத்தி நிதியம் பாலம் அமைப்பதற்குரிய நிதியை வழங்குவதற்கான அனுமதியை உத்தியோக பூர்வமாக நிதி அமைச்சுக்கு நேற்று முன்தினம் திங்கட்கிழமை (25) அறிவித்துள்ளது.

கடந்தகாலத்தில் ஆரம்பிக்கப்பட்ட குறிஞ்சாங்கேணி பால வேலைகள் இடைநிறுத்தப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# ஆரையம்பதியில் தாலிக்கொடியை திருடிய 28 வயது இளைஞர் கைது

**மட்டக்களப்பு குறூப் நிருபர்**



மட்டக்களப்பு, காத்தான்குடி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட ஆரையம்பதி பிரதேசத்திலுள்ள வீடொன்றில் 28 இலட்சம் ரூபா பெறுமதியான தங்கத் தாலிக்கொடியை திருடிய 26 வயதுடைய சந்தேகநபர் ஒருவரை நேற்று முன்தினம் திங்கட்கிழமை (25) இரவு காத்தான்குடி பொலிஸார் கைது செய்துள்ளனர்.

ஊர் வீதியை அண்டி அமைந்துள்ள ஓய்வுபெற்ற கல்விப் பணிப்பாளரின் வீட்டில் எவரும் இல்லாத வேளையில் இத்திருட்டுச் சம்பவம் இடம்பெற்றது. கடந்த 12ஆம் திகதி வீட்டின் முன் கதவுப் பக்கமாக உடைத்துக்கொண்டு நுழைந்த இச்சந்தேகநபர் திருட்டை புரிந்துள்ளதாக, பொலிஸார் தெரிவித்தனர்.

சம்பவ தினத்தன்று வீட்டை பூட்டிவிட்டு மட்டக்களப்பிலுள்ள தனது மகளின் வீட்டுக்குச் சென்றுவிட்டு மீண்டும் பிற்பகல் 2.00 மணிக்கு வீட்டு உரிமையாளர் தனது வீட்டுக்கு திரும்பிய போது, தாலிக்கொடி திருட்டுப் போனமை தெரிய வந்தது.

இந்தச் சம்பவம் தொடர்பாக காத்தான்குடி பொலிஸ் நிலையத்தில் பாதிக்கப்பட்ட வீட்டு உரிமையாளர் செய்த முறைப்பாட்டை அடுத்து, பொலிஸார் விசாரணை நடத்தி இச்சந்தேநபரைக் கைது செய்துள்ளனர்.

சந்தேகநபரிடம் காத்தான்குடி பொலிஸார் மேலதிக விசாரணையை மேற்கொண்டுள்ளனர்.

# சித்தாண்டி யோகசுவாமி இல்ல முகாமையாளர் மரணம்

**பாசிக்குடா நிருபர்**

மட்டக்களப்பு, சித்தாண்டி யோக சுவாமி சைவ மகளிர் இல்லத்தில் நேற்று முன்தினம் திங்கட்கிழமை (25) மாலை நடைபெற்ற நிகழ்வொன்றில் உரையாற்றிக்கொண்டிருந்த இல்ல முகாமையாளர் திடீரென மயக்கமுற்று உயிரிழந்துள்ளார்.

மாவடிவேம்பைச் சேர்ந்த 63 வயதுடைய சிவசம்பு பாக்கியராசா என்பவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

புலம்பெயர் நாடொன்றில் வசிக்கும் நன்கொடையாளர், இந்த இல்லத்துக்கு 2 இலட்சம் ரூபா பெறுமதியான அரிசி மூடைகளை வழங்கி வைத்தார். இதற்கு நன்றி தெரிவித்து அவர் உரையாற்றிய போதே இந்தச் சம்பவம் இடம்பெற்றது

திடீரென மயக்கமுற்றவரை வைத்தியசாலைக்கு எடுத்துச் செல்லும் வழியில் உயிரிழந்துள்ளதாக, பொலிஸார் தெரிவித்தனர்.

# சிறந்த சேவைக்காக அக்கரைப்பற்று வைத்தியசாலைக்கு சான்றிதழ்



**அக்கரைப்பற்று வடக்கு தினகரன் நிருபர்**

அக்கரைப்பற்று ஆதார வைத்தியசாலையின் சிறந்த கண்காணிப்பு நடவடிக்கைகளுக்காக மூன்று செயற்றிறன் தகுதிச் சான்றிதழ்கள் கிடைத்துள்ளன.

சுகாதார அமைச்சினுடைய தொற்றாநோய் பிரிவின் தேசிய நோய் தடுக்கும் கண்காணிப்பு செயல் முறையின் கீழ் கடந்த 2022ஆம் ஆண்டின் மாவட்ட மற்றும் மாகாண நிறுவனங்களுக்கிடையே நடத்தப்பட்ட தொடர்ச்சியான கண்காணிப்பு மற்றும் மேற்பார்வை தரக் கணிப்பீட்டுக்கமைய, சிறந்த செயற்றிறனுக்கான தேசிய மதிப்பாய்வு விருது வழங்கும் விழாவில், அக்கரைப்பற்று ஆதார வைத்தியசாலைக்கும் தரச் சான்றிதழ்கள் கிடைத்தன. கொழும்பு, நாரஹேன்பிட்டி இரத்த வங்கி கேட்போர் கூடத்தில் வைத்து இச்சான்றிதழ்கள் வழங்கி வைக்கப்பட்டதுடன், அக்கரைப்பற்று ஆதார வைத்தியசாலை சார்பாக தொற்றாநோய் பிரிவு மற்றும் பொதுச் சுகாதார பொறுப்பு வைத்திய அதிகாரி டாக்டர் எஸ்.அகிலன் இச்சான்றிதழ்களை பெற்றுக்கொண்டார்.

வைத்திய அத்தியட்சகர் டாக்டர் ரீ.எஸ்.ஆர்.ரீ.ஆர்.றஜாப்பின் வழிகாட்டலில் பல்வேறுபட்ட விருதுகளையும் சிறப்பு சான்றிதழ்களையும் அக்கரைப்பற்று ஆதார வைத்தியசாலை தொடர்ச்சியாக பெற்றுக்கொண்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

# பொருளாதார வளர்ச்சிக்காக அரச அதிகாரிகள் பங்காற்ற வேண்டும்

**ஒலுவில் விசேட நிருபர்**



நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்கு அரசாங்க உத்தியோகத்தர்கள் அர்ப்பணிப்புடன் செயற்பட வேண்டுமென, அக்கரைப்பற்று மற்றும் அம்பாறை பிரதேச அஞ்சல் அத்தியட்சகர் கே.பி.எஸ்.பிரியந்த தெரிவித்தார்.

தபால் மற்றும் உப தபால் அதிபர்களுக்கான கருத்தரங்கு நிந்தவூர் மாவட்ட தொழில் பயிற்சி நிலையத்தில் கடந்த ஞாயிற்றுக்கிழமை (24) நடைபெற்ற போதே, அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இந்நிகழ்வில் அவர் மேலும் உரையாற்றிய போது,

"தபால் திணைக்களத்தை மேலும் அபிவிருத்தி செய்து மக்களுக்கு விரைவாகவும் சிறப்பாகவும் சேவையை வழங்குவதற்காக அரசாங்கத்தினால் பல வேலைத்திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

புதிய தகவல் தொழில்நுட்ப அறிவை ஒவ்வொரு உத்தியோகத்தரும் அறிந்திருக்க வேண்டும். அப்போதே, எமது திணைக்களத்தின் சேவைகளை பொதுமக்களுக்கு விரைவாகவும் வினைத்திறனுடையதாகவும் வழங்க முடியும்.

திணைக்களத்தினால் முன்னெடுக்கப்பட்டு வரும் வேலைத் திட்டங்களுக்கு உத்தியோகத்தர்களும் ஒத்துழைப்பு வழங்க வேண்டும். அப்போது தான் திணைக்களத்தின் இலக்கை அடைவதோடு சிறந்த சேவையையும் வழங்க முடியும்" என்றார்.

# 'கெகுழு' சிறுவர் கழக போட்டியில் வெற்றியீட்டியோருக்கு சான்றிதழ்

**அம்பாறை விசேட நிருபர்**



இறக்காமம் பிரதேச செயலகத்தினுடைய சமுர்த்தித் திணைக்களத்தின் சமுர்த்தி 'கெகுழு' சிறுவர் கழக கலாசார போட்டியில் வெற்றியீட்டிய மாணவர்கள் சான்றிதழ் வழங்கி கௌரவிக்கப்பட்டனர்.

இறக்காமம் பிரதேச செயலகத்தில் நடைபெற்ற இப்போட்டியில் 'மொழி உரிமையும் அதன் பயன்களும்' எனும் தலைப்பில் அமைந்த பேச்சுப் போட்டியிலும் சிறுவர் சிறுகதைப் போட்டியிலும் இறக்காமம் கமு/சது /அஸ்றப் மத்திய கல்லூரியில் தரம் 9 இல் கற்கும் மாணவி எச்.ஸைனப் சிபா வெற்றி பெற்றார். இம்மாணவிக்கு அம்பாறை மாவட்ட சமுர்த்தி முகாமையாளர் எம்.எஸ்.சப்ராஸ் சான்றிதழ் வழங்கி வைத்தார். இந்நிகழ்வில் இறக்காமம் பிரதேச செயலாளர் எம்.எஸ்.எம்.றஸ்ஸான் உட்பட பலர் கலந்துகொண்டார்.

# கிரிக்கெட் சுற்றுப்போட்டியில் தேசிய சாம்பியனாக வெற்றி பெற்ற அக்கரைப்பற்று அஸ் சிராஜ் வித்தியாலய அணியினர் கௌரவிப்பு








**அட்டாளைச்சேனை குறூப் நிருபர்**

2. விலைமனுக்களை **2023.11.07** ஆம் திகதி இலங்கை நிலையான நேரப்படி **14.00** மணி தாமதிக்காது தலைவர், திணைக்கள பெறுகைக் குழு, வரையறுக்கப்பட்ட லங்கா சீனி (தனியார்) நிறுவனம், இல.27, மெல்போர்ன் ஒழுங்கை, கொழும்ப 04 என்ற முகவரிக்கு கிடைப்பதற்கு முத்திரை பொறிக்கப்பட்ட கடித உறையில் பதிவுத் தபால், விரைதூதர், நேரடியாக கையளிக்கப்பட வேண்டும். கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் **“சக்கரத்துடனான Turbine Shaft with Pinion & Gear Shaft வழங்களுக்கான கேள்விமனு”** எனத் தெளிவாக குறிப்பிடுதல் வேண்டும். அதன் பின்னர் விலைமனுக்கள் உடனடியாக திறக்கப்படும். விலைமனுக்கள் திறக்கப்படும் சந்தர்ப்பத்தில் விலைமனுதாரர் அல்லது அவர்தம் அதிகாரம் பெற்ற பிரதிநிதிகள் பங்கேற்கலாம். தாமதமாக கிடைக்கும் விலைமனுக்கள் ஏற்கப்படமாட்டாது. கேள்விமனுக் குழுவின் முடிவு இறுதியானதாகும்.
3. அனைத்து விலைமனுக்களும் மேலே உள்ள அட்டவணையின்படி **“மனுப் பாதுகாப்பு”** இணைத்திருத்தல் வேண்டும். விலைமனுக்கள் திறக்கப்பட்ட திகதியிலிருந்து **119** நாட்களுக்கு செல்லுபடியாகும்.
4. திங்கள் முதல் வெள்ளி வரை மு.ப.8.00 மணி முதல் பி.ப.4.00 மணி வரை, திகதி மற்றும் நேரத்தை தள பரிசீலனைக்காக முன்கூட்டியே ஏற்பாடு செய்யலாம். **(தொடர்பு கொள்ள வேண்டிய அதிகாரி - திரு.நந்த விபுலசிறி - முகாமையாளர் (பொறியியல்) 071-7610545)**
5. முன் மனுக்கூட்டம் **2023.10.25 ஆம் திகதி** மு.ப. **9.30** மணிக்கு பெல்வத்த கேட்போர்கூடத்தில் நடைபெறும், கூட்டத்தில் கலந்து கொள்ள முடியாதவர்கள் Zoom Link ஐக் கோருங்கள்.
4. ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள் வறையக்கப்பட்ட லங்கா சீனி (தனியார்) நிறுவன - தலைமை அதிகாரி (பெறுகை) இருந்து மேலதிக விபரங்களை பெற்றுக்கொள்ளலாம். தொலைபேசி : +94 112 584 184,, கைத்தொலைபேசி **: + 94 77 010 3359,** தொலைநகல் : **+94 11 2500674,** மின்னஞ்சல்**: sapumal@lscl.lk).**

தலைவர், திணைக்கள பெறுகைக் குழு,
வரையறுக்கப்பட்ட லங்கா சீனி (தனியார்) நிறுவனம்,
இல-27, மெல்போர்ன் ஒழுங்கை, கொழும்பு 04,
இலங்கை.

# கேள்வி கோரல்

## கண்டி மாநகர சபைக்கு தேவையான உருப்படிகளை பெற்றுக்கொள்ளல்

கண்டி மாநகர சபைக்குத் தேவையான கீழ்க்காணும் உருப்படிகளை பெற்றுக்கொள்வதற்காக 2023.10.17ம் திகதி பொறியிடப்பட்ட கேள்விகள் கோரப்படுகின்றன. இதற்காக தகைமையுள்ள கேள்விதாரர்களுக்கு கேள்வி ஆவணங்களைப் பெற்றுக்கொள்வதற்கு காசு செலுத்தப்பட்ட பற்றுச்சீட்டு அல்லது காசுக் கட்டளையுடன் வேண்டுதல் கடிதத்தை மற்றும் வியாபார பெயர் சட்டவாக்கத்தின் கீழ் அல்லது கம்பனிகள் சட்டத்தின் கீழ் பதிவு செய்த சான்றிதழ்களின் பிரதியை சமர்ப்பித்தல் வேண்டும்.

| | உருப்படி | அளவு | கேள்வி இணைப்பு இலக்கம் | கேள்விப் பிணையின் பெறுமதி |
|---|---|---|---|---|
| 01 | Ordinary Potland Cement 50Kg bags | 15,000 bags | CPC/KMC/FD/S/PC 04/2023/09 | ரு 350,000.00 |
| 02 | Premix | 2500 $m^3$ | CPC/KMC/FD/S/PC 04/2023/05 | ரு 500,000.00 |
| 03 | Grade 25 Ready Mix Concrete with early strength adminxtures | 320 $m^3$ | CPC/KMC/FD/S/PC 04/2023/06 | ரு 100,000.00 |

| | | |
|---|---|---|
| 01 | கேள்வி ஆவணத்தின் விலை | **1. ரு.2300.00 (சகலவரிகள் உற்பட)**<br>கண்டி மாநகர சபையின் காசாளரிடம் செலுத்தி கேள்வி ஆவணத்தை பெற்றுக் கொள்ளலாம் இல்லையெனில்<br>காசுக் கட்டளையாயின் மாநகர ஆணையாளர் கண்டி பெயரில் செலுத்தி 2023.10.17 அல்லது அதற்கு முன் கிடைக்குமாறு அனுப்புதல் வேண்டும். |
| 02 | கேள்வி ஆவணங்களை விநியோகித்தல் | 2023.09.27ஆம் திகதி மு.ப 9.00 முதல் பி.ப 2.45 வரை வாரத்தின் வேலை நாட்களில் |
| 03 | கேள்வி ஆவணத்தை விநியோகிக்கும் இறுதி திகதி மற்றும் நேரம் | 2023.10.16 பி.ப 2.45 வரை |
| 04 | கேள்வி ஆவணங்களை ஏற்றுக்கொள்ளும் இறுதித் திகதி மற்றும் நேரம் | 2023.10.17 மு.ப 10.00 அல்லது அதற்கு முன் கிடைக்குமாறு |
| 05 | கேள்விப்பினைமுறி | இலங்கை மத்திய வங்கியினால் அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக வங்கியிலிருந்து பெற்றுக்கொண்ட 03 மாதம் செல்லுபடியாகும் கால எல்லையுடன் மேலே தரப்பட்டுள்ள பெறுமதியில் பெற்றுக்கொண்ட கேள்வி பினையொன்றை மாநகர ஆணையாளர் கணக்கு பெயரில் சமர்ப்பித்தல் வேண்டும் (செல்லுப்படியாகும் கால எல்லை 2024.10.17 முதல் 2023.01.16வரை) |
| 06 | கேள்வி ஆவணங்கள் திறக்கப்படும் இடம் | 2023.10.17 மு.ப 10.00 இற்கு நகர மண்டபத்தில் இவ்வேளையில் கேள்விதாரர் அல்லது அவர்களது அதிகாரமளிக்கப்பட்ட பிரதிநிதியொருவர் சமுகமளிக்கலாம். |
| 07 | கேள்வி ஆவணங்கள் விநியோகிக்கப்படும் இடம் | மாநகர வழங்கல் விரிவு மாநகர சபை, கண்டி |
| 08 | பூர்த்தி செய்யப்பட்ட கேள்வி ஆவணங்கள் ஏற்றுக்கொள்ளும் இடம் | கையோடு கொண்டு வந்து ஒப்படைப்பதாயின், 2023.10.17 மு.ப 10.00 இற்கு அல்லது அதற்கு முன் பிரதம மாநகர கணக்காளரின் பொறுப்பில் வைக்கப்பட்டுள்ள கேள்விப்பெட்டியில் உள்ளிட வேண்டும். பதிவுத் தபாலில் அனுப்புவதாயின் 2023.10.17 மு.ப 10.00 இற்கு அல்லது அதற்கு முன்பு கிடைக்குமாறு அனுப்புதல் வேண்டும். |

விலைமனுக்கள் பற்றிய தீர்மானம் மாநகர சபைக்கு உரியது.

கேள்வி ஆவணங்கள் இலவசமாக பரீட்சித்து பார்க்க முடிவதுடன், மேலதிக விபரங்களுக்கு கணக்காளர் (வழங்கல்கள்) அல்லது தொ.பே.இல : 081-2232071 மூலம் விபரங்களைப் பெற்றுக் கொள்ளலாம்.

**2023.09.25**

**கே.கே.ஜி.ஐ.டி.ஜீ.விஜேதிலக்க**
**மாநகர ஆணையாளர்**
**மாநகர சபை - கண்டி**

---

நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சு

## கட்டிடங்கள் திணைக்களம்

# விலைமனுக்களுக்கான அழைத்தல்

1. கீழே விபரிக்கப்பட்டவாறான வேலைகளுக்காக தகுதியும் தகைமையுமுள்ள விலைமனுதாரர்களிடமிருந்து முத்திரையிடப்பட்ட விலைமனுக்களை கட்டிடங்கள் திணைக்களத்தின் சார்பாக பிராந்திய பெறுகை குழுத் (04 ஆம் வலயம்) தலைவர் இப்போது அழைக்கின்றார்.

| | வேலையின் விபரம் | பெசேவ நீங்கலான மதிப்பீடு செய்யப்பட்டுள்ள ஆகுசெலவு (மில். ரூபா) | நிர்மாணக் காலம் (நாட்கள்) | CIDA தரம் | விலைமனுப் பிணை (ரூபாவில்) | மீளளிக்கப் படாத கட்டணம் |
|---|---|---|---|---|---|---|
| 1. | அக்கரைப்பற்று தள வைத்தியசாலையின் புதுப்பித்தல் - II ஆம் கட்டம் BD-089 - Z4/23/RCT02/2023 | 8.5 | 77 நாட்கள் | சி-8, சி-7 அல்லது சி-6 | 128,000.00 | 3,500.00 |
| 2 | மாவடிப்பள்ளியின் ஆரம்ப மருத்துவ பராமரிப்பு அலகு கட்டிடம் - III ஆம் கட்டம் BD-088-Z4/23/RCT/03/2023 | 7.4 | 77 நாட்கள் | சி-8, சி-7 அல்லது சி-6 | 111,000.00 | 2,500.00 |
| 3 | பொத்துவில் தள வைத்தியசாலையில் நிருவாக கட்டிடத்தின் நிருமாணம் BD-086-Z4/23/RCT04/2023 | 8.8 | 77 நாட்கள் | சி-8, சி-7 அல்லது சி-6 | 132,000.00 | 3,500.00 |
| 4 | அம்பாறை சென்னல் கிராமம் ஆரம்ப வைத்திய பராமரிப்பு அலகின் புதுப்பித்தல். BD-104-Z4/23/RCT05/2023 | 2.9 | 42 நாட்கள் | சி-9, சி-8 அல்லது சி-7 | 43,000.00 | 1,500.00 |
| 5 | ஹபரண பொலில் நிலையத்தில் பொலிஸ் பரிசோதகர்களின் விடுதிகளின் கழிவறையின் புதுப்பித்தல் | 6.2 | 91 நாட்கள் | சி-8, சி-7 அல்லது சி-6 | 93,000.00 | 2,500.00 |

2. -விலைமனுக்கோரல் தேசிய போட்டி ரீதியிலான விலைமனுக்கோரல் நடைமுறை மூலம் நடாத்தப்படும். இந்த பெறுகையின் கீழ் நிறைவேற்றப்படவுள்ள வேலையின் பெறுமதியானது(பெசேவ நீங்கலாக மற்றும் ஏனைய வரிகள்) 50 மில்லியன் ரூபாவிற்கு குறைவாகவுள்ளதினால், பிராந்திய முன்னுரிமை மற்றும் CIDA தர முன்னுரிமைகள் 04/2016(iv) மற்றும் 03/2020 ஆகிய இலக்கங்களையுடைய அரச நிதி சுற்றறிக்கைகளில் நிர்ணயிக்கப்பட்டவாறு பிரயோகப்படுத்தப்படும்.
3. ஒப்பந்தத்தை வழங்குவதற்கான தகுதிக்காக, சித்திகரமான விலைமனுதாரர் அபகீர்த்தியானோர் பட்டியலில் சேர்க்கப்படாதவராகவும் மேலேயுள்ள அட்டவணையில் சுட்டிக்காட்டியவாறு கட்டிட நிமாமாண துறையில் நிர்மாண கைத்தொழில் அபிவிருத்தி அதிகாரசபையுடன் பதிவு பெற்றவராகவும் விலைமனுக்களை மூடும் திகதி வரையும் செல்லுபடியாகும் தன்மையிலுமிருத்தல் வேண்டும். மேலும், பதிவு செய்தலானது ஒப்பந்தத்தை வழங்கும் திகதியன்றும் செல்லுபடியாகும் தன்மையிலிருத்தல் வேண்டும்.
   1987 ஆம் ஆண்டின் 03 ஆம் இலக்க பொது ஒப்பந்தங்கள் சட்டத்தின் பிரகாரம், இலங்கை பொது ஒப்பந்தங்கள் பதிவாளருடன் விலைமனுதாரர்கள் பதிவு பெற்றிருத்தல் வேண்டும். பதிவு செய்தலின் மூலப்பிரதி சான்றிதழானது (பிசிஏ-03) விலைமனுவுடன் இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும். பிசிஏ-03 சான்றிதழை சமர்ப்பிக்காத எந்தவொரு விலைமனுதாரருக்கும், செயற்றிட்டம் 4 நீங்கலானது, பெறுகையானது வழங்கப்பட மாட்டாது. (மதிப்பீடு செய்யப்பட்டுள்ள ஆகுசெலவு 5 மில்லியனுக்கு குறைவாகவிருப்பதனால்)
4. ஆர்வமுள்ள விலைமனுதாரர் மேலதிக தகவலை மட்டக்களப்பு, திரைமடு, பணிச்சவாடி I ஆம் வலயம், கட்டிடங்கள் திணைக்களம், பிரதான பொறியியலாளர் (04 ஆம் வலயம்) இடமிருந்து பெற்று, விலைமனுக்கோரல் ஆவணங்களை அதே முகவரியில் எந்தவொரு வேலை நாளிலும் மு.ப. 9 மணியிலிருந்து பி.ப. 4 மணி வரையும் பெற்றுக் கொள்ளலாம்.
   தொடர்பெண்கள் பின்வருமாறு: தொலைபேசி: 065-2229808. தொலைநகல்: 065-2229807
5. 2023.09.26 ஆம் திகதியிலிருந்து 2023.10.10 ஆம் திகதி வரையும் மு.ப. 9 மணியிலிருந்து பி.ப. 3 மணி வரையும் மேலேயுள்ள அட்டவணையில் குறிப்பிட்டவாறான மீளளிக்கப்படாத கட்டணத்தை செலுத்திய பின்னர், மட்டக்களப்பு, திராய்மடு, பணிச்சவாடி, I ஆம் வலயம், கட்டிடங்கள் திணைக்களம், பிரதான பொறியியலாளர் (04 ஆம் வலயம்) இற்கு எழுத்து மூலமான விண்ணப்பமொன்றைச் சமர்ப்பிப்பதன் மூலம், ஆங்கில மொழியிலுள்ள விலைமனுக்கோரல் ஆவணங்களின் முழுமையான தொகுதியொன்று ஆர்வமுள்ள விலைமனுதாரர்களினால் கொள்வனவு செய்யப்படலாம்.
6. 2023.10.11 ஆம் திகதியன்று மு.ப. 10 மணிக்கு அல்லது அதற்கு முன்னராக கிடைக்கும் வகையில் விலைமனுக்கள் தலைவர், பிராந்திய பெறுகைக் குழு (04 ஆம் வலயம்), பிரதான பொறியியலாளரின் அலுவலகம் (04 ஆம் வலயம்), கட்டிடங்கள் திணைக்களம், 1 ஆம் வலயம், பணிச்சவாடி, திரைமடு, மட்டக்களப்பு என்ற முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்பப்படல் வேண்டும். விலைமனுக்கள் அவைகளை அதே முகவரியில் மூடிய பின்னர், சமுகமளித்திருக்கும் விலைமனுதாரர்களின் பிரதிநிதிகளின் முன்னிலையில் திறக்கப்படும்.
7. விலைமனுக்கள் அவைகளை பெற்றுக் கொள்ளும் திகதியிலிருந்து 77 நாட்கள் காலப்பகுதிக்கு அல்லது நீடிக்கப்பட்ட எந்தவொரு காலப்பகுதிக்கும் செல்லுபடியாகும் தன்மையிலிருத்தல் வேண்டும்.
8. அனைத்து விலைமனுக்களும் பின்வருமாறு அமைந்துள்ள விலைமனுப்பிணையொன்றுடன் இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும்.
   - விலைமனுக்கோரல் ஆவணங்களின் 09 ஆம் பிரிவில் அடக்கப்பட்டுள்ள படிவத்தில்.
   - கட்டிடங்களுக்கான பணிப்பாளர் நாயகத்தின் பெயரில் வழங்கப்பட்டிருத்தல்.
   - மேலேயுள்ள அட்டவணையில் சுட்டிக்காட்டியவாறான தொகைக்காகவிருத்தல்.
   - 2024 சனவரி 23 ஆம் திகதி வரையும் செல்லுபடியாகும் தன்மையிலிருத்தல்.
   - அட்டவணையில்/ விலைமனுக்கோரல் தரவில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளவாறான ஒரு முகவராண்மையினால் வழங்கப்பட்டிருத்தல்.

**Engineer A.M. Wickramasinghe,**

**நிர்மாண பணிப்பாளர் (பிராந்தியம் 1)),**
**கட்டிடங்கள் திணைக்களம்,**
**2ஆம் மாடி, ''செத்சிரிபாய'',**
**பத்தரமுல்ல.**

---

# விலைமனுக்களுக்கான அழைப்பு

## விமான நிலையம் மற்றும் விமான சேவைகள் (இலங்கை) (பிறைவெட்) லிமிடெட்

**விலைமனு இல.: 036/T/2023**

**கட்டுநாயக்க, பண்டாரநாயக்க சர்வதேச விமானநிலையத்தில் IRON-PORT மேம்படுத்தலின் வழங்கல், நிறுவுதல் மற்றும் செயற்படவைத்தல்**

கட்டுநாயக்க, பண்டாரநாயக்க சர்வதேச விமானநிலையத்தில் IRON-PORT மேம்படுத்தலின் வழங்கல், நிறுவுதல் மற்றும் செயற்படவைத்தலுக்காக விமான நிலையம் மற்றும் விமான சேவைகள் (இலங்கை) (பிறைவெட்) லிமிடெட், தலைவரினால் விலைமனுக்கள் கோரப்படுகின்றன.

விலைமனுதாரரினால் வழங்கப்படும் கோரிக்கையின் உத்தியோகபூர்வ கடிதத்துடன் சேர்த்து மீளளிக்கப்படாத விலைமனு ஆவண கட்டணம் ஒன்றாக ரூபா ஐயாயிரத்து ஐந்நூறை (ரூபா 5,500.00) ரொக்கப்பணமாக செலுத்தி கட்டுநாயக்க, பண்டாரநாயக்க சர்வதேச விமானநிலையம், விமான நிலையம் மற்றும் விமான சேவைகள் (இலங்கை) (பிறைவெட்) லிமிடெட், விநியோக சங்கிலி முகாமைத்துவ பிரிவில் இருந்து பெறப்பட்ட ஆவணங்களை விலைமனுதாரர்கள் சமர்ப்பித்தல் வேண்டும்.

விலைமனு ஆவணங்களை 2023.09.27 ஆம் திகதி தொடக்கம் 2023.10.23 ஆம் திகதி வரை எந்த ஒரு வேலை நாட்களிலும் மு.ப. 9.00 மற்றும் பி.ப. 3.00க்கு இடையே கட்டுநாயக்க, பண்டாரநாயக்க சர்வதேச விமானநிலையம், விமான நிலையம் மற்றும் விமான சேவைகள் (இலங்கை) (பிறைவெட்) லிமிடெட், விநியோக சங்கிலி முகாமைத்துவ பிரிவில் இருந்து வாங்கலாம். விலைமனு ஆவணங்கள் மேலுள்ள முகவரியில் கட்டணம் இன்றி பரீட்சிப்பதற்காக கிடைக்கப்பெறும்.

விலைமனுக்களை கட்டுநாயக்க, பண்டாரநாயக்க சர்வதேச விமானநிலையம், விமான நிலையம் மற்றும் விமான சேவைகள் (இலங்கை) (பிறைவெட்) லிமிடெட், விநியோக சங்கிலி முகாமைத்துவ பிரிவில் இந்த நோக்கத்திற்காக வைக்கப்பட்டுள்ள பெட்டியில் இடுதல் வேண்டும். விலைமனுதாரர்கள் அதிக விருப்புடன் இருந்தால் மேலுள்ள முகவரிக்கு முத்திரை பொறுக்கப்பட்ட விலைமனுக்களை தனிப்பட்ட முறையில் கையளிக்கலாம்.

விலைமனுக்களை ஏற்பது 2023 ஒக்டோபர் 24 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை பி.ப. 2.00க்கு நிறைவடைவதோடு, அதன் பின் விநியோக சங்கிலி முகாமைத்துவ பிரிவு, விமான நிலையம் மற்றும் விமான சேவைகள் (இலங்கை) (பிறைவெட்) லிமிடெட், பண்டாரநாயக்க சர்வதேச விமானநிலையம், கட்டுநாயக்க என்ற முகவரியில் உடன் திறக்கப்படும். விலைமனுக்களை திறக்கும் நேரத்தில் விலைமனுதாரர்கள் அல்லது அவர்களின் முறையான அதிகாரம் பெற்ற பிரதிநிதிகள் பங்கேற்கலாம்.

விமான நிலையம் மற்றும் விமான சேவைகள் (இலங்கை) (பிறைவெட்) லிமிடெட், தலைவருக்கு செலுத்தும் வகையில் இலங்கையில் இயங்கும், மத்திய வங்கியினால் அங்கீகரிக்கப்பட்ட வங்கி ஒன்றின் மூலம் வழங்கப்பட்ட வங்கி உத்தரவாதம் ஒன்றின் வடிவத்தில் இலங்கை ரூபா நானூறு ஆயிரத்துக்கு (ரூபா 400,000.00) இணையான கோரும்போது பெறத்தக்க விலைமனு உத்தரவாதத்தை விலைமனுவுடன் சமர்ப்பித்தல் வேண்டும்.

ஏதேனும் வேறு தகவல்களை www.airport.lk. என்ற இணையதளத்திற்கு பிரவேசிப்பதன் மூலம் அல்லது head.scm@airport.lk என்ற மின்னஞ்சல், 011-2264103 / 011-2264106 என்ற தொலைபேசியில் விநியோக சங்கிலி முகாமைத்துவ பிரிவு, விமான நிலையம் மற்றும் விமான சேவைகள் (இலங்கை) (பிறைவெட்) லிமிடெட், பண்டாரநாயக்க சர்வதேச விமானநிலையம், கட்டுநாயக்க என்ற முகவரியில் இருந்து பெறலாம்.

**தலைவர்,**
**விமான நிலைய மற்றும் விமான சேவைகள் (இலங்கை) (பிறைவட்) லிமிடெட்,**
**பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையம்,**
**கட்டுநாயக்க.**

---

# விலைமனுக்களுக்கான அழைப்பு

## விமான நிலையம் மற்றும் விமான சேவைகள் (இலங்கை) (பிறைவெட்) லிமிடெட்

**விலைமனு இல.: 025/T/2023**

**கட்டுநாயக்க, பண்டாரநாயக்க சர்வதேச விமானநிலையத்தில் அனுமதிச் சீட்டு வழங்கும் உருப்படிகளின் வழங்கல்**

கட்டுநாயக்க, பண்டாரநாயக்க சர்வதேச விமானநிலையத்தில் அனுமதிச் சீட்டு வழங்கும் உருப்படிகளின் வழங்கலுக்காக விமான நிலையம் மற்றும் விமான சேவைகள் (இலங்கை) (பிறைவெட்) லிமிடெட், தலைவரினால் விலைமனுக்கள் கோரப்படுகின்றன.

விலைமனுதாரரினால் வழங்கப்படும் கோரிக்கையின் உத்தியோகபூர்வ கடிதத்துடன் சேர்த்து மீளளிக்கப்படாத விலைமனு ஆவணக் கட்டணம் ஒன்றான ரூபா பதினைந்தாயிரத்தை (ரூபா 15,000.00) ரொக்கப்பணமாக செலுத்தி கட்டுநாயக்க, பண்டாரநாயக்க சர்வதேச விமானநிலையம், விமான நிலையம் மற்றும் விமான சேவைகள் (இலங்கை) (பிறைவெட்) லிமிடெட், விநியோக சங்கிலி முகாமைத்துவ பிரிவில் இருந்து பெறப்பட்ட ஆவணங்களை விலைமனுதாரர்கள் சமர்ப்பித்தல் வேண்டும்.

விலைமனு ஆவணங்களை 2023.09.27 ஆம் திகதி தொடக்கம் 2023.10.17 ஆம் திகதி வரை எந்த ஒரு வேலை நாட்களிலும் மு.ப. 9.00 மற்றும் பி.ப. 3.00க்கு இடையே கட்டுநாயக்க, பண்டாரநாயக்க சர்வதேச விமானநிலையம், விமான நிலையம் மற்றும் விமான சேவைகள் (இலங்கை) (பிறைவெட்) லிமிடெட், விநியோக சங்கிலி முகாமைத்துவ பிரிவில் இருந்து வாங்கலாம். விலைமனு ஆவணங்கள் மேலுள்ள முகவரியில் கட்டணம் இன்றி பரீட்சிப்பதற்காக கிடைக்கப்பெறும்.

விலைமனுக்களை கட்டுநாயக்க, பண்டாரநாயக்க சர்வதேச விமானநிலையம், விமான நிலையம் மற்றும் விமான சேவைகள் (இலங்கை) (பிறைவெட்) லிமிடெட், விநியோக சங்கிலி முகாமைத்துவ பிரிவில் இந்த நோக்கத்திற்காக வைக்கப்பட்டுள்ள பெட்டியில் இடுதல் வேண்டும். விலைமனுதாரர்கள் அதிக விருப்புடன் இருந்தால் மேலுள்ள முகவரிக்கு முத்திரை பொறிக்கப்பட்ட விலைமனுக்களை தனிப்பட்ட முறையில் கையளிக்கலாம்.

விலைமனுக்களை ஏற்பது 2023 ஒக்டோபர் 18ஆம் திகதி புதன்கிழமை பி.ப. 2.00க்கு நிறைவடைவதோடு, அதன் பின் விநியோக சங்கிலி முகாமைத்துவ பிரிவு, விமான நிலையம் மற்றும் விமான சேவைகள் (இலங்கை) (பிறைவெட்) லிமிடெட், பண்டாரநாயக்க சர்வதேச விமானநிலையம், கட்டுநாயக்க என்ற முகவரியில் உடன் திறக்கப்படும். விலைமனுக்களை திறக்கும் நேரத்தில் விலைமனுதாரர்கள் அல்லது அவர்களின் முறையான அதிகாரம் பெற்ற பிரதிநிதிகள் பங்கேற்கலாம்.

விமான நிலையம் மற்றும் விமான சேவைகள் (இலங்கை) (பிறைவெட்) லிமிடெட், தலைவருக்கு செலுத்தும் வகையில் இலங்கையில் இயங்கும், மத்திய வங்கியினால் அங்கீகரிக்கப்பட்ட வங்கி ஒன்றின் மூலம் வழங்கப்பட்ட வங்கி உத்தரவாதம் ஒன்றின் வடிவத்தில் இலங்கை ரூபா ஒரு மில்லியனே முந்நூற்று இருபதாயிரத்திற்கு (ரூபா 1,320,000.00) இணையான கோரும்போது பெறத்தக்க விலைமனு உத்தரவாதத்தை விலைமனுவுடன் சமர்ப்பித்தல் வேண்டும்.

ஏதேனும் வேறு தகவல்களை www.airport.lk. என்ற இணையதளத்திற்கு பிரவேசிப்பதன் மூலம் அல்லது head.scm@airport.lk என்ற மின்னஞ்சல், 011-2264103 / 011-2264106 என்ற தொலைபேசியில் விநியோக சங்கிலி முகாமைத்துவ பிரிவு, விமான நிலையம் மற்றும் விமான சேவைகள் (இலங்கை) (பிறைவெட்) லிமிடெட், பண்டாரநாயக்க சர்வதேச விமானநிலையம், கட்டுநாயக்க என்ற முகவரியில் இருந்து பெறலாம்.

**தலைவர்,**
**விமான நிலைய மற்றும் விமான சேவைகள் (இலங்கை) (பிறைவட்) லிமிடெட்,**
**பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையம்,**
**கட்டுநாயக்க.**

# உலகக் கிண்ணத்தில் பங்கேற்க இலங்கை அணி இந்தியா பயணம்

## கடைசி நேரத்தில் உத்தியோகபூர்வ அணி அறிவிப்பு

ஒருநாள் உலகக் கிண்ண போட்டியில் பங்கேற்பதற்காக இலங்கை அணி நேற்று (26) இரவு இந்தியாவை நோக்கி புறப்பட்ட நிலையில் அதற்கு சில மணி நேரத்திற்கு முன்னரே இலங்கை குழாம் உத்தியோகபூர்வமாக அறிவிக்கப்பட்டது.

இதன்படி 17 வீரர்கள் மற்றும் 13 உதவிப் பணியாளர்களுக்கு விளையாட்டுத் துறை அமைச்சு ஒப்புதல் அளித்துள்ளது. இதில் சகல துறை வீரரான சாமிக்க கருணாரத்ன மற்றும் துஷான் ஹேமேந்த மேலதிக வீரர்களாகவே இலங்கை அணியுடன் சென்றனர்.



எனினும் முன்னணி சுழற்பந்து வீச்சாளர்களான வனிந்து ஹசரங்க மற்றும் மஹீஷ் தீக்ஷன இருவரும் நேற்று இந்தியா பயணிக்கவில்லை. தீக்ஷன காயத்தில் இருந்து முழுமையாக குணம் பெற்று ஒரு வாரத்தில் இலங்கை அணியுடன் இணையவுள்ளார்.

மறுபுறம் ஹசரங்க இலங்கை அணியில் இணைக்கப்பட்டபோதும் அவர் அணியில் இடம்பெறுவது தொடர்ந்து சந்தேகமாக உள்ளது. உடல் தகுதி அடிப்படையிலேயே அவர் அணியில் சேர்ப்பது உறுதி செய்யப்படும்.

உபாதைக்கு உள்ளான மற்ற வீரர்களான தீக்ஷனவுடன் டில்ஷான் மதுஷங்கவின் பங்கேற்பும் உடல் தகுதி அடிப்படையிலேயே தீர்மானிக்கப்படவுள்ளது. எனினும் முன்னணி வேகப்பந்து வீச்சாளர் துஷ்மந்த சமீர உலகக் கிண்ண அணியில் இடம்பெறவில்லை. காயத்தால் ஆசிய கிண்ண போட்டியில் ஆடாத வலது கை வேகப்பந்து வீச்சாளர் லஹிரு குமார் 15 பேர் குழாத்தில் சேர்க்கப்பட்டுள்ளார்.

உலகக் கிண்ண கிரிக்கெட் போட்டி எதிர்வரும் ஒக்டோபர் 5 ஆம் திகதி ஆரம்பமாகவுள்ளதோடு இலங்கை அணி தனது முதல் போட்டியில் ஒக்டோபர் 7 ஆம் திகதி டெல்லி, அருன் ஜெய்ட்லி அரங்கில் தென்னாபிரிக்க அணியை எதிர்கொள்ளவுள்ளது. இதற்கு முன்னதாக எதிர்வரும் செப்டெம்பர் 29 மற்றும் ஒக்டோபர் 3ஆம் திகதிகளில் முறையே பங்களாதேஷ் மற்றும் ஆப்கானிஸ்தான் அணிகளுடன் இலங்கை பயிற்சி போட்டிகளில் ஆடும்.

**இலங்கை குழாம்:** தசுன் ஷானக்க (தலைவர்), குசல் மெண்டிஸ் (உப தலைவர்), பத்தும் நிசங்க, தனன்ஜய டி சில்வா, குசல் பெரேரா, திமுத் கருணாரத்ன, சதீர சமரவிக்ரம, சரித் அசலங்க, வனிந்து ஹசரங்க, மஹீஷ் தீக்ஷன, துனித் வெள்ளாலகே, கசுன் ராஜித, லஹிரு குமார, டில்ஷான் மதுசங்க, மதீஷ பதிரண, மேலதிக வீரர்கள் – துஷான் ஹேமன்த, சாமிக்க கருணாரத்ன.

# பாக். அணியின் இந்திய விசா இழுபறி முடிந்தது



உலகக் கிண்ணத்தில் பங்கேற்பதற்காக பாகிஸ்தான் அணி இந்தியா புறப்பட்டுச் செல்வதற்கு திட்டமிட்டு 48 மணி நேரத்திற்கு குறைவான காலத்திலேயே அந்த அணிக்கான விசாவை இந்திய அரசு உறுதி செய்துள்ளது.

பாகிஸ்தான் அணி இன்று (27) டுபாய் வழியாக ஹைதராபாத்தை அடைய திட்டமிட்ட நிலையில் இந்தியா விசாவை உறுதி செய்யாதது குறித்து அதிருப்தி வெளியிட்டு பாகிஸ்தான் கிரிக்கெட் சபை, சர்வதேச கிரிக்கெட் கௌன்சிலுக்கு கடிதம் அனுப்பியது.

இதனை அடுத்து நேற்று முன்தினமே (25) பாகிஸ்தான் வீரர்களின் விசாவை அங்கீகரித்து மின்னஞ்சல் அனுப்பப்பட்டுள்ளது.

எனினும் இந்தத் தாமதத்தால் பாகிஸ்தான் அணி ஏற்கனவே உலகக் கிண்ணத்திற்கு முன்னரான திட்டங்களை கைவிட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. கடந்த ஒகஸ்ட் இறுதியில் இந்திய விசாவிற்காக விண்ணப்பித்ததாக பாகிஸ்தான் கிரிக்கெட் சபை தெரிவித்தது. ஆசிய கிண்ண போட்டிக்காக இலங்கைக்கு பாகிஸ்தான் அணி பயணித்தது. இதனால் பாகிஸ்தான் அணி வீரர்களின் கடவுச்சீட்டுகளை சமர்ப்பிக்க தாமதம் ஏற்பட்டபோதும் செப்டெம்பர் 19இல் இலங்கையில் இருந்து தாயகம் திரும்பிய உடனேயே பாகிஸ்தான் அணி கடவுச்சீட்டுகளை சமர்ப்பித்திருந்தது.

# எனசல்கொல்ல மத்தி பழைய மாணவர்கள் கிரிக்கெட் போட்டி

தெல்தோட்டை எனசல்கொல்ல மத்திய கல்லூரியின் பழைய மாணவர் சங்கம் பழைய மாணவர்களை கல்லூரியுடன் இணைக்கவும் அவர்களின் மூலம் பாடசாலையின் அபிவிருத்தி நடவடிக்கைகளை முன்னெடுக்கவும் எதிர்வரும் 28, 29 மற்றும் 30ஆம் திகதிகளில் தெல்தோட்டை மெதகெகில, ஸ்ரேன்ஜர்ஸ் விளையாட்டுக் கழக மைதானத்தில் கிரிக்கெட் சுற்றுப் போட்டியொன்றை நடத்தவுள்ளது.

எனசல்கொல்ல பிறீமியர் லீக் என்ற பெயரில் இடம்பெறும் இப்போட்டித் தொடரின் ஆரம்ப நிகழ்வு எனசல்கொல்ல மத்திய கல்லூரியின் பிரதான மண்டபத்தில் இன்று புதன்கிழமை மாலை 4.00 மணிக்கு இடம்பெற உள்ளது.

இதில் அனைத்து பழைய மாணவர்களையும் கலந்துகொள்ளுமாறு கல்லூரியின் பழைய மாணவர்கள் சங்கம் அழைப்பு விடுக்கிறது.




பாரிஸில் நடைபெற்று வரும் உலகக் கிண்ண ரக்பி போட்டியில் அரையிறுதிப் போட்டியை காண்பதற்கு இரண்டு பேருக்கான வாய்ப்பை பெற்ற கொமர்ஷல் வங்கி மாஸ்டர் கார்ட் வாடிக்கையாளர் எஸ்.ஏ.எப். ஏன்ஜலோ மற்றும் அவரது மனைவி திருமதி. பெர்னான்டோ ஆகியோர் கொமர்ஷல் வங்கியின் பிரதம நிறைவேற்று அதிகாரி சனத் மனதுங்கவிடம் இருந்து தமது பரிசை பெற்றுக்கொள்வதை படத்தில் காணலாம்.

# நெஸ்டமோல்ட் சைக்கிளோட்டப் போட்டி: பெர்னாண்டோ வெற்றி




நெஸ்டமோல்ட் சைக்கிளின் சலேஞ்ச் சைக்கிள் பந்தயத்தின் உயர்நிலை பெண்கள் பிரிவில் எம். பெர்னாண்டோ வெற்றியீட்டினார். கொழும்பு விஹாரமஹாதேவி பூங்காவுக்கு அருகில் இருந்து கடந்த ஞாயிறன்று (24) நடைபெற்ற இந்தப் போட்டியில் 24 கிலோமீற்றர்கள் தூரம் கொண்ட உயர்நிலை பெண்கள் பிரிவு போட்டியில் எம். பெர்னாண்டோ 54.12 நிமிடங்களில் போட்டித் தூரத்தை முடித்து வெற்றியீட்டினார். இவர் இலங்கை இராணுவம் சார்பிலேயே போட்டியில் பங்கேற்றிருந்தார். இதில் எஸ். பிரியதர்ஷினி இரண்டாம் இடத்தையும் சந்தமினி மூன்றாம் இடத்தையும் பெற்றனர்.

இந்தப் போட்டிகளுக்கு நெஸ்லே நெஸ்டமோல்ட் பூரண அனுசரணை வழங்கியது.




# ஆசிய விளையாட்டுப் போட்டியில் இலங்கை ரக்பிக்கு 10ஆவது இடம்

*சீனாவிலிருந்து நிரோஷன் பிரியங்கர*

சீனாவின் ஹாங்சோ நகரில் நடைபெற்றுவரும் 19 ஆவது ஆசிய விளையாட்டுப் போட்டியில் இலங்கை ரக்பி அணி 10 ஆவது இடத்தையே பிடித்தது.

சர்வதேச தடையால் ஆசிய ஒலிம்பிக் கொடியின் கீழ் போட்டியிட்ட இலங்கை ரக்பி அணி நேற்று (26) காலை 9 ஆவது இடத்திற்காக போட்டியிட்டு நேபாள அணியை 68–0 புள்ளிகளால் அபார வெற்றியை பெற்றபோதும் நேற்று மாலை நடந்த தாய்லாந்துக்கு எதிரான போட்டியில் 7–10 என தோல்வியை சந்தித்தது.



இந்நிலையில் நேற்று பெண்களுக்கான 200 மீற்றர் பேக் ஸ்ட்ரோக் நீச்சல் போட்டியில் பங்கேற்ற இலங்கையின் கங்கா செனவிரத்ன 2:26.37 நிமிடங்களில் போட்டியை முடித்து ஐந்தாவது இடத்தையே பெற்றதோடு இறுதிப் போட்டிக்கு தகுதி பெறவில்லை. இது ஒட்டு மொத்த போட்டியாளர் எண்ணிக்கை 16 ஆவது இடமாக இருந்தது.

ஆண்களுக்கான 50 மீற்றர் பிரீ ஸ்டை போட்டியில் பங்கேற்ற மத்தியு அபேசிங்க 23.10 வினாடிகளில் போட்டியை முடித்து நான்காவது இடத்தையே பெற்றார்.

அதேபோன்று ஆர்டிஸ்டிக் ஜிம்னாஸ்டிக் போட்டியில் பங்கேற்ற நலீன் நெத்விரு அந்தப் போட்டியில் 18 பேரில் 17 ஆவது இடத்தையே பெற்றதோடு காற்றுப் படகோட்டப் போட்டியின் பெண்களுக்கான பிரிவில் பங்கேற்ற அரியானா தால்யா 5 ஆவது இடத்தையே பெற்றதோடு ஆண்களுக்கான பிரிவில் தரோ காஷ்ப 11 ஆவது இடத்தையே பெற்றார்.

செஸ் மற்றும் வுஷு போட்டிகளிவும் இலங்கை வீர, வீராங்கனைகள் சோபிக்கத் தவறினர். இந்நிலையில் ஆசிய விளையாட்டுப் போட்டியில் இலங்கையின் மற்றொரு பதக்க எதிர்பார்ப்பாக உள்ள கிரிக்கெட் போட்டிகள் இன்று (27) ஆரம்பமாகவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

ஆசிய விளையாட்டுப் போட்டியின் நான்காவது நாள் நிறைவின்போது போட்டியை நடத்தும் சீனா முதலிடத்திலும் தென்கொரியா மற்றும் ஜப்பான் முறையே இரண்டு மற்றும் மூன்றாவது இடங்களிலும் உள்ளன. 9 ஆண்டுகளின் பின் வெள்ளிப் பதக்கம் ஒன்றை வென்றிருக்கும் இலங்கை 20 ஆவது இடத்தில் உள்ளது.

# ஸ்கொஷ் சம்பியன்களாக லக்மன், சினாலே தெரிவு



ரிட்ஸ்பரி கனிஷ்ட தேசிய ஸ்கொஷ் சம்பியன்ஷிப் போட்டியில் ஆண்கள் பிரிவில் கொழும்பு டி.எஸ். சேனநாயக்க கல்லூரியின் நெவிந்து லக்மன் கனிஷ்ட தேசிய சம்பியன் பட்டத்தையும் பெண்கள் பிரிவில் ஸ்ரீமாவோ பண்டாரநாயக்க வித்தியாலயத்தின் சனித்மான சினாலே கனிஷ்ட தேசிய சம்பியன் பட்டத்தையும் வென்றனர்.

இரத்மலானை விமானப் படை ஸ்கொஷ் திடலில் கடந்த ஞாயிற்றுக்கிழமை (17) நிறைவடைந்த இந்தப் போட்டியில் பல்வேறு வயது மட்டங்களில் 450 வீர, வீராங்கனைகள் பங்கேற்றனர்.

இதற்கு இலங்கையர்களின் அபிமானம் வென்ற சொக்லட் வர்த்தக நாமமான, சிலோன் பிஸ்கட்ஸ் லிமிடெட் நிறுவனத்தின், ரிட்ஸ்பரி அனுசரணை வழங்கியது.

சிங்கப்பூரில் வெற்றிகரமாக

# வெடிக்கச் செய்யப்பட்ட உலகப் போர் குண்டு



சிங்கப்பூரின் கட்டுமானத் தளம் ஒன்றில் கண்டுபிடிக்கப்பட்ட இரண்டாம் உலகப் போர் காலத்தின் 100 கிலோகிராம் கொண்ட குண்டு ஒன்று அந்நாட்டு இராணுவத்தால் நேற்று (26) வெற்றிகரமாக வெடிக்கச் செய்யப்பட்டது.

4,000க்கும் அதிகமான குடியிருப்பாளர்கள் அப்புறப்படுத்தப்பட்டு கட்டுப்பாட்டுடன் வெடிக்கச் செய்யப்பட்டபோது அந்தப் பகுதியில் பெரும் அதிர்வு ஏற்பட்டது.

வானில் இருந்து வீசப்பட்டு வெடிக்காத நிலையில் இருந்த இந்த குண்டு குடியிருப்பு பகுதி ஒன்றில் கடந்த வாரம் கண்டுபிடிக்கப்பட்டது. சுமார் 47 கிலோகிராம் வெடிபொருட்களைக் கொண்ட இந்த குண்டு தொடர்மாடி குடியிருப்பு ஒன்றை தகர்க்கும் அளவுக்கு சக்தி கொண்டதாகும்.

1941 டிசம்பர் 8 ஆம் திகதி பிரிட்டனின் காலனித்துவத்தில் இருந்து சிங்கப்பூர் மீது ஜப்பான் விமானங்கள் முதல் முறை குண்டு வீச ஆரம்பித்தது. 1942 ஜனவரியில் குண்டுத் தாக்குதல்கள் தீவிரப்படுத்தப்பட்டு பெப்ரவரியில் அந்த தீவை ஜப்பான் கைப்பற்றியது.

## சர்வதேச செய்திகள்

# அசர்பைஜான் கைப்பற்றிய பிராந்தியத்தின் எரிபொருள் கிடங்கில் வெடிப்பு: 20 பேர் பலி

அசர்பைஜானின் நகொர்னோ–கரபக் பிராந்தியத்தில் எரிபொருள் கிடங்கு ஒன்றில் இடம்பெற்ற வெடிப்பில் 20 பேர் கொல்லப்பட்டு நூற்றுக்கணக்கானோர் காயமடைந்துள்ளனர். இந்த பிராந்தியத்தை அசர்பைஜான் கடந்த வாரம் கைப்பற்றியதை அடுத்து அங்குள்ள ஆர்மேனிய இனத்தினர் வெளியேறி வரும் நிலையிலேயே கடந்த திங்கட்கிழமை இரவு இந்த வெடிப்பு இடம்பெற்றுள்ளது.

இதில் 290 பேர் காயமடைந்திருப்பதாகவும் பலரது நிலை கவலைக்கிடமாக இருப்பதாகவும் பிராந்திய சுகாதார திணைக்களம் தெரிவித்துள்ளது. பிராந்திய தலைநகரான ஸ்டெபனார்கட்டில் இடம்பெற்ற இந்த வெடிப்புக்கான காரணம் உறுதி செய்யப்படவில்லை.




இந்தப் பிராந்தியத்தில் இருந்து கட்டாயமாக வெளியேற்றப்பட்ட 13,350 அகதிகள் ஆர்மேனியாவில் அடைக்கலம் பெற்றிருப்பதாக ஆர்மேனிய அரசு குறிப்பிடுகிறது. எனினும் இந்தப் பிராந்தியதில் பெரும்பான்மையாக சுமார் 120,000 ஆர்மேனியர்கள் உள்ளனர். மோதலினால் வீடற்றவர்களாக்கப்பட்டவர்களை நாட்டுக்குள் உள்வாங்கும் திட்டத்தை ஆர்மேனியா அறிவித்த நிலையிலேயே அங்கு அகதிகள் எண்ணிக்கை அதிகரித்துள்ளது.

இந்தப் பிராந்தியத்தில் இன சுத்திகரிப்பு இடம்பெறுவதாக ஆர்மேனிய பிரதமர் நிகோல் பஷின்யான் எச்சரித்துள்ளார். எனினும் ஆர்மேனியர்களை சமமான பிரஜைகளாக மீள் ஒருங்கிணைப்பு மேற்கொள்ள வேண்டி இருப்பதாக அசர்பைஜான் தெரிவித்துள்ளது.

ஆர்மேனியர்களை பெரும்பான்மையாகக் கொண்டிருக்கும் நகொர்னோ–கரபக் பிராந்தியம் அசர்பைஜானின் அங்கம் என்று சர்வதேசம் அங்கீகரித்தபோதும் அது ஆர்மேனிய பிரிவினைவாதிகளின் கட்டுப்பாட்டில் இருந்தது. எனினும் அசர்பைஜான் கடந்த வாரம் மேற்கொண்ட அதிரடி இராணுவ நடவடிக்கையை அடுத்து பிரிவினைவாதிகள் போர் நிறுத்தத்திற்கு ஒப்புக்கொண்டனர்.

இப்பத்திரிகை அஸோஸியேட்டட் நியூஸ் பேப்பர்ஸ் ஒப் சிலோன் லிமிடட் கம்பனியரால் கொழும்பு இல. 35, டி ஆர். விஜயவர்தன மாவத்தையிலுள்ள லேக் ஹவுஸில் 2023 செப்டெம்பர் மாதம் 27ம் திகதி புதன்கிழமை அச்சிட்டுப் பிரசுரிக்கப்பட்டது.

தினகரன்
கேள்வி மற்றும் ஏனைய விளம்பரங்கள்

# கேள்வி அறிவித்தல் - கலவான பிரதேச சபை

## 2024ஆம் வருடத்திற்கான ஆதனங்களை குத்தகைக்கு விடுவதற்கான கேள்வி அழைப்பு

2024ஆம் வருடத்தில் கலவான பிரதேச சபைக்குரித்தான பின்வரும் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள ஆதனங்களை 2024.01.01ஆம் திகதி முதல் 2024-12-31ஆம் திகதி வரை குத்தகைக்கு வழங்குவதற்கான கேள்விகள் கோரப்படுகின்றன.

1. **கேள்வி மாதிரி படிவங்கள் விநியோகிக்க ஆரம்பிக்கும் திகதி** : 2023-09-27
2. **கேள்வி மாதிரி படிவங்கள் விநியோகிக்கப்படும் இறுதித் திகதி மற்றும் நேரம்** : **2023-10-18ஆம் திகதி பி.ப. 2.00 மணி**
3. **கேள்விகள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதி மற்றும் நேரம்** : **2023.10.19ஆம் திகதி மு.ப. 10.00 மணி**
4. **கேள்வி திறக்கப்படும் திகதி மற்றும் நேரம்** : **2023.10.19ஆம் திகதி மு.ப. 10.30 மணிக்கு**

**அட்டவணை**

| தொ. இல. | ஆதனங்களின் விபரம் | கேள்விப் படிவக் கட்டணம் (மீளளிக்கப் படாதது) ரூ. சதம் | கேள்விப் பிணை (மீளளிக்கப் படும்) ரூ. சதம் | ஆகக் குறைந்த வருடாந்த கேள்வி (பெசேவ நீங்கலாக) ரூ. சதம் |
|---|---|---|---|---|
| 01 | பொத்துபிட்டிய திங்கள் சந்தை | ரூபா 1000.00 (ஆயிரம் ரூபாய்) | ரூபா 5,000.00 (ஐயாயிரம் ரூபாய்) | ரூபா 264,000.00 (இரண்டு இலட்சத்து அறுபத்தி நாலாயிரம் ரூபாய்) |
| 02 | பொத்துபிட்டிய பன்றியிறைச்சிக் கடை | ரூபா 1000.00 (ஆயிரம் ரூபாய்) | ரூபா 25,000.00 (இருபத்தையாயிரம் ரூபாய்) | ரூபா 72,125.00 (எழுபத்து இரண்டாயிரத்து நூற்றி இருபத்தைந்து ரூபாய்) |
| 03 | பொத்துபிட்டிய கோழியிறைச்சித் தட்டு | ரூபா 1000.00 (ஆயிரம் ரூபாய்) | ரூபா 25,000.00 (இருபத்தையாயிரம் ரூபாய்) | ரூபா 55,000.00 (ஐம்பத்தையாயிரம் ரூபாய்) |
| 04 | பொத்துபிட்டிய மாட்டிறைச்சிக் கடை | ரூபா 1000.00 (ஆயிரம் ரூபாய்) | ரூபா 25,000.00 (இருபத்தையாயிரம் ரூபாய்) | ரூபா 75,000.00 (எழுபத்து ஐயாயிரம் ரூபாய்) |
| 05 | பொத்துபிட்டிய உப அலுவலக காணியின் விளைச்சலை குத்தகைக்கு விடல் | ரூபா 1000.00 (ஆயிரம் ரூபாய்) | ரூபா 1,000.00 (ஆயிரம் ரூபாய்) | ரூபா 5350.00 (ஐயாயிரத்து முன்னூற்று ஐம்பது ரூபாய்) |
| 06 | பொத்துபிட்டிய சந்தை மீன் தட்டு (வாரத்தின் ஏழு நாட்களிலும்) | ரூபா 1000.00 (ஆயிரம் ரூபாய்) | ரூபா 10,000.00 (பத்தாயிரம் ரூபாய்) | ரூபா 298,000.00 (இருபத்தொன்பது இலட்சத்து எட்டாயிரம் ரூபா) |
| 07 | கலவான சனிக்கிழமை சந்தை | ரூபா 1000.00 (ஆயிரம் ரூபாய்) | ரூபா 25,000.00 (இருபத்தையாயிரம் ரூபாய்) | ரூபா 1,342,100.00 (பதின்மூன்று இலட்சத்து நாற்பத்து இரண்டாயிரத்து நூறு ரூபாய்) |
| 08 | கலவான பொதுச் சந்தை மீன் கடை அறை இலக்கம் 01 | ரூபா 1000.00 (ஆயிரம் ரூபாய்) | ரூபா 25,000.00 (இருபத்தையாயிரம் ரூபாய்) | ரூபா 1,233,550.00 (பன்னிரண்டு இலட்சத்து முப்பத்து மூவாயிரத்து ஐந்நூற்றி ஐம்பது ரூபாய்) |
| 09 | கலவான பொதுச் சந்தை மீன் கடை அறை இலக்கம் 02 | ரூபா 1000.00 (ஆயிரம் ரூபாய்) | ரூபா 25,000.00 (இருபத்தையாயிரம் ரூபாய்) | ரூபா 957,950.00 (ஒன்பது இலட்சத்து ஐம்பத்து ஏழாயிரத்து தொலாயிரத்து ஐம்பது ரூபாய்) |
| 10 | கலலான பொதுச் சந்தை கோழியிறைச்சிக் கடை | ரூபா 1000.00 (ஆயிரம் ரூபாய்) | ரூபா 25,000.00 (இருபத்தையாயிரம் ரூபாய்) | ரூபா 75,000.00 (எழுபத்தையாயிரம் ரூபாய்) |
| 11 | கலவான பொதுச் சந்தை மாட்டிறைச்சிக்கடை | ரூபா 1000.00 (ஆயிரம் ரூபாய்) | ரூபா 25,000.00 (இருபத்தையாயிரம் ரூபாய்) | ரூபா 772,200.00 (ஏழு இலட்சத்து எழுபத்தி இரண்டாயிரத்து இருநூறு ரூபாய்) |
| 12 | கலவான பொதுச் சந்தை பன்னியிறைச்சிக் கடை | ரூபா 1000.00 (ஆயிரம் ரூபாய்) | ரூபா 25,000.00 (இருபத்தையாயிரம் ரூபாய்) | ரூபா 275,000.00 (இரண்டு இலட்சத்து எழுபத்தி ஐயாயிரம் ரூபாய்) |
| 13 | கலவான சனி சந்தை உணவகம் | ரூபா 1000.00 (ஆயிரம் ரூபாய்) | ரூபா 5000.00 (ஐயாயிரம் ரூபாய்) | ரூபா 41,000.00 (நாற்பத்து ஒரு ஆயிரம் ரூபாய்) |
| 14 | தபஸ்ஸரகந்த மீன் தட்டு | ரூபா 1000.00 (ஆயிரம் ரூபாய்) | ரூபா 25,000.00 (இருபத்தையாயிரம் ரூபாய்) | ரூபா 500,500.00 (ஐந்து இலட்சத்து ஐந்நூறுரூபாய்) |
| 15 | கொஸ்வத்த மீன் தட்டு | ரூபா 1000.00 (ஆயிரம் ரூபாய்) | ரூபா 25,000.00 (இருபத்தையாயிரம் ரூபாய்) | ரூபா 550,000.00 (ஐந்து இலட்சத்து ஐம்பதாயிரம் ரூபாய்) |
| 16 | திஹகொட சந்தி மீன் தட்டு | ரூபா 1000.00 (ஆயிரம் ரூபாய்) | ரூபா 25,000.00 (இருபத்தையாயிரம் ரூபாய்) | ரூபா 332,150.00 (மூன்று இலட்சத்து முப்பத்து இரண்டாயிரத்து நூற்றி ஐம்பது ரூபாய்) |
| 17 | கலவான குளத்து மீன் தட்டு | ரூபா 1000.00 (ஆயிரம் ரூபாய்) | ரூபா 25,000.00 (இருபத்தையாயிரம் ரூபாய்) | ரூபா 102,000.00 (ஒரு இலட்சத்து இரண்டு ஆயிரம் ரூபாய்) |
| 18 | ரம்புன சந்தி தனபெல வீதி மீன் தட்டு | ரூபா 1000.00 (ஆயிரம் ரூபாய்) | ரூபா 25,000.00 (இருபத்தையாயிரம் ரூபாய்) | ரூபா 40,000.00 (நாற்பதாயிரம் ரூபாய்) |
| 19 | வெந்தக சந்தி மீன் தட்டு | ரூபா 1000.00 (ஆயிரம் ரூபாய்) | ரூபா 25,000.00 (இருபத்தையாயிரம் ரூபாய்) | ரூபா 80,000.00 (என்பதாயிரம் ரூபாய்) |
| 20 | கலவான புதிய பஸ் நிலைய கீழ் மாடி பொது மலசலகூடம் | ரூபா 1000.00 (ஆயிரம் ரூபாய்) | ரூபா 500.00 (ஐயாயிரம் ரூபாய்) | ரூபா 96,000.00 (தொண்ணூற்று ஆறாயிரம் ரூபாய்) |

முறையாகப் பூர்த்தி செய்யப்பட்ட கேள்விப் படிவங்களை மூலப் பிரதி மற்றும் நகல் பிரதியென வெவ்வேறான உறைகளில் இட்டு, உறையின் இடதுபக்க மேல் மூலையில் ''நகல் பிரதி'' மற்றும் "மூலப் பிரதி'' எனக் குறிப்பிட்டு அவ்விரு உறைகளையும் வேறொரு உறையில் இட்டு ''தலைவர், கலவான பிரதேச சபை, கலவான'' எனும் முகவரிக்கு பதிவுத் தபாலில் 2023.10.18ஆம் திகதி மு.ப. 10.00 மணிக்கு முன் கிடைக்கும் வகையில் அனுப்பலாம் அல்லது அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் உள்ளிடலாம். அவ்வுறையின் இடதுபக்க மேல் மூலையில் ஆதனத்தின் விபரங்களில் குறிப்பிட்டுள்ள விடயங்களைக் குறிப்பிடுதல் வேண்டும்.

**உ+ம்: பொதுபிட்டிய திங்கள் சந்தை**

கேள்விகள் திறக்கப்படும் வேளையில் கேள்விதாரர் அல்லது அவரது அதிகாரபூர்வ பிரதிநிதியொருவர் கலந்து கொள்ளலாம்.

கேள்விகள் தொடர்பான இறுதித் தீர்மானம் கலவான பிரதேச சபையின் கேள்விச் சபை தன்னகத்தே கொண்டுள்ளது. மேலதிக விபரங்களை பிரதேச சபை அலுவலகத்தில் விசாரிக்கவும்.

**செயலாளர்,**
**தலைவர்,**
**கலவான பிரதேச சபை**
**கலவான.**

**தொ.பே. 045-2255275**
2023.09.25ஆம் திகதி




For classified advertisements and for replies

received in response to advertisements published under Lake House box numbers

Manager front office

+94 112429341

Hotline 1949

# விலைக்கேள்விக்கான கோரல் (2023/01)

## கட்டடங்கள் திணைக்களம், வட மாகாணம், யாழ்ப்பாணம்

1. வடமாகாண கட்டடங்கள் திணைக்களம் சார்பாக பிரதம செயலாளர் பெறுகைக்குழுவின் - (Major) தவிசாளர் கீழ் வரும் அட்டவணையில் குறிப்பிடப்பட்ட வேலைக்கான தகவுடையோரும் தகைமை பெற்றவருமான விலைக்கேள்வியாளர்களிடமிருந்து மூடப்பட்ட கடித உறையில் விலைக்கேள்விகளைக் கோருகின்றார்.

2. விலைக்கேள்வியானது தேசிய போட்டி விலைக்கேள்வி நடைமுறையின் மூலம் நடாத்தப்படும்.

3. விலைக்கேள்வியாளர்கள், நிர்மாணத்தொழில் அபிவிருத்தி அதிகாரசபையில் (CIDA). கட்டடம் நிர்மாணிப்பதற்கு கீழே அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள தரத்தினை பதிவு செய்யப்பட்டிருப்பதுடன் கறுப்புப் பட்டியலில் பெயர் இடம் பெறாதவராயிருத்தலும் வேண்டும்.

4. தகைமைகள் பற்றிய தேவைப்பாடுகள் விலைக்கேள்வி ஆவணத்தில் பகுதி 4 இல் குறிப்பிடப்பட்டுள்ளது மற்றும் மேலதிக தகவல்கள் விலைக்கேள்வி ஆவணத்தில் Bidding Data & Contract Data (பகுதி 5) இல் உள்ளடக்கப்பட்டுள்ளன.(SBD-01)

5. அக்கறை கொண்டுள்ள விலைக்கேள்வியாளர்கள் பிரதம எந்திரி அலுவலகம், கட்டடங்கள் திணைக்களம், வடக்கு மாகாணம், கடற்கரை வீதி, குருநகர், யாழ்ப்பாணம் (தொலைபேசி இல: 021-222 2632, தொலைநகல் 021-222. 2632) இம் முகவரியில் மேலதிக தகவலைப் பெறலாம் என்பதுடன் அம் முகவரியில் மு.ப 9.00 மணியிலிருந்து பி.ப 3.00 மணி வரை அலுவலக நாட்களில் விலைக்கேள்வி ஆவணங்களைப் பரிசீலனை செய்யலாம்.

6. அக்கறை கொண்டுள்ள விலைக்கேள்வியாளர் ஆங்கில மொழியிலான விலைக்கேள்வி ஆவணங்களின் பூரணமான தொகுதியொன்றை மாகாணப்பணிப்பாளர், கட்டடங்கள் திணைக்களம், வடக்கு மாகாணம், கடற்கரை வீதி, குருநகர், யாழ்ப்பாணம் (தொலைபேசி இல: 021-222 8091, தொலைநகல் 021-221 2700) எனும் முகவரியில் எழுத்து மூலமான விண்ணப்பமொன்றை கீழே அட்டவணையில் காட்டப்பட்ட காலப்பகுதியான 2023-09-27 முதல் 2023-10-18 வரை மு.ப 9.00 மணியிலிருந்து பி.ப 3.00 மணி வரையில் சமர்ப்பித்து மீளளிக்கப்படாத தொகையான ரூபா 25,0000 யினை பணமாகச் செலுத்தி பெற்றுக்கொள்ளலாம்.

7. விலைக்கேள்விகள் (மூலம்,பிரதி) கீழே அட்டவணையில் குறிப்பிடப்பட்ட திகதி மு.ப 10.30 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் தவிசாளர், பிரதம செயலாளர் பெறுகைக்குழு - (Major) , கட்டடங்கள் திணைக்களம், வடக்கு மாகாணம், கடற்கரை வீதி, குருநகர், யாழ்ப்பாணம் எனும் முகவரியில் நேரடியாகவோ அல்லது பதிவுத்தபால் மூலமாகவோ ஒப்படைத்தல் வேண்டும். காலந்தாழ்த்தப்பட்ட விலைக்கேள்விகள் நிராகரிக்கப்படும். கேள்விதாரர்கள் வேலைக்கான கேள்வி அடையாள இலக்கத்தினை தபாலுறையின் இடது மேல் மூலையில் குறிப்பிடுதல் வேண்டும். விலைக்கேள்விகள், அவைகளை மூடியவுடன் மேலேயுள்ள முகவரியில் சமுகமளித்திருக்கும் விலைக்கேள்வியாளர்களின் பிரதிநிதிகளது முன்னிலையில் திறக்கப்படும்.

8. விலைக்கேள்விக்கு முன்னரான கூட்டம் மாகாணப் பணிப்பாளர், கட்டடங்கள் திணைக்களம், வடக்கு மாகாணம், கடற்கரை வீதி, குருநகர், யாழ்ப்பாணம் எனும் முகவரியில் 2023-10-06 அன்று பி.ப 2.30 மணிக்கு நடைபெறும்

9. கீழே அட்டவணையில் குறிப்பிடப்பட்டவாறான கேள்விப் பிணைப்பொறுப்பு இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும்.

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| | **கேள்வி ஆவணம் வழங்கும் / பெற்றுக்கொள்ளும் காலம்** | | | **2023.09.27 முதல் 2023.10.18 வரை** | | | |
| | **விலைக்கேள்விக்கு முன்னரான கூட்டம்** | | | **2023.10.16 அன்று பி.ப 2.30** | | | |
| | **கேள்வி மூடுதல் / திறத்தல்** | | | **2023.10.19 அன்று மு.ப 10.30** | | | |
| **கேள்வி அடையாள இல** | **வேலை விபரம்** | **மதிப்பீட்டுத் தொகை (ரூ. மில்லியன்)** | **ஒப்பந்த காலம்** | **தேவையான தரம்** | **நிதி** | **கேள்விப் பிணை விபரம்** | |
| | | | | | | **தொகை (ரூ)** | **தேவைப்படும் காலம்** |
| CBG/ NP /B/ JA/01/2023 | Construction of Three Storeyed Office Building for Department of Buildings, Nothern Province at Jaffna (Stage III) | 130.00 | 450 Days | C4 or C3 (Buildings) | CBG | 1,300,000.00 | Till 2024.02.15 |

விலைக்கேள்வியானது தேசிய போட்டி விலைக்கேள்வியின் மூலம் நடாத்தப்படும். அத்துடன் இக்கேள்வியின் போது 09.10.2020 மற்றும் 11.01.2021 ஆம் திகதிய பொதுநிதிச் சுற்றறிக்கை இல முறையே 03/2020 மற்றும் 03/2020(i) என்பனவும் பின்பற்றப்படும்

**தவிசாளர்**
**பிரதம செயலாளர் பெறுகைக்குழு -Major**
**கட்டடங்கள் திணைக்களம், வ.மா**
**கடற்கரை வீதி, குருநகர், யாழ்ப்பாணம்**

# விலைமனுக்களுக்கான அழைத்தல்

## நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசிய கொள்கைகள் அமைச்சு
## இலங்கை சுங்க திணைக்களம்
## Procurement of Supply and implementation of Enterprise Data Center, Enterprise e-mail and Backup Solution

**IFB No.: CUS/LOG/S/08/EES**

1. **Procurement of Supply and Implementation of Enterprise Data Center, Enterprise e-mail and Backup Solution** என்பதற்காக தகுதியுள்ள விலைமனுதாரர்களிடமிருந்து சுங்க பணிப்பாளர் நாயகத்தின் சார்பாக திணைக்கள பெறுகைக் குழுத் தலைவர் முத்திரையிடப்பட்ட விலைமனுக்களை அழைக்கின்றார். வடிவமைப்பு, அபிவிருத்தி மற்றும் அமுல் நடாத்தல் ஆகியவற்றிற்கான அமுல் நடாத்தல் காலப்பகுதியானது மூன்று (3) மாதங்கள் என்பதுடன் அனுசரணை மற்றும் பராமரிப்பு காலப்பகுதியானது ஐந்து (5) வருடங்களாகும்.

2. தேசிய பெறுகை வழிகாட்டிகளில் திட்டவட்டமாக குறிப்பிட்டுள்ளவாறு விலைமனுக்கோரலானது தேசிய போட்டி ரீதியிலான விலைமனுக்கோரல் (தேபோவி - தனிக்கட்ட-இரு உறைகள் விலைமனுக்கோரல்) நடைமுறைகள் மூலம் நடத்தப்படுவதுடன் வழிகாட்டிகளில் நிருணயிக்கப்பட்டவாறு தகுதியுள்ள விலைமனுதாரர்கள் அனைவரும் பங்குபற்றலாம்.

   ஒப்பந்த விருதை பெற்றுக் கொள்வதற்காக விலைமனுதாரர் பின்வரும் ஆகக்குறைந்த தகைமை தகவுத்திறனை பூர்த்தி செய்தல் வேண்டும்.

   அ) பொது அனுபவம்: விலைமனுவின் சமர்ப்பித்தலுக்கான இறுதி திகதிக்கு ஆகக்குறைந்தது ஐந்து (5) வருடங்களுக்கு முன்னரான காலத்தில் ஒப்பந்தக்காரராக தகவல் தொழில்நுட்பவியல் ஒப்பந்தங்களில் பொதுவான அனுபவத்தைக் கொண்டிருத்தல் வேண்டும்.

   ஆ) திட்டவட்டமான அனுபவம்: கடந்த 5 வருடங்களில் விலைமனுதாரர் ஆகக் குறைந்தது ஒரு Enterprise Data Center, Enterprise e-mail and Backup Solution ஐ ஆகக் குறைந்தது 80 மில்லியன் இ.ரூபாவில் சித்திகரமாக பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.

   இ) வருடாந்த சராசரி நிதிப்புரள்வு: கடந்த 3 வருடங்களில் நடைபெற்றுக் கொண்டிருக்கும் அல்லது பூர்த்தி செய்யப்பட்ட ஒப்பந்தங்களுக்காக மொத்த அத்தாட்சிப்படுத்தப்பட்ட பணக்கொடுப்பனவுகளாக கணக்கீடு செய்யப்பட்ட ஆகக் குறைந்த வருடாந்த சராசரி நிதிப்புரள்வானது 340 மில்லியன் இ.ரூபாவை விலைமனுதாரர் கொண்டிருத்தல் வேண்டும்.

3. ஆர்வமுள்ள விலைமனுதாரர் மேலதிக தகவலை இலங்கை சுங்கத்தின் லொஜிஸ்டிக்களுக்கான சுங்கப் பணிப்பாளரிடமிருந்து பெற்று (தொலைபேசி: 011-2221680. தொலைநகல் இலக்கம்: 011-2436096. மின்னஞ்சல்: dc.logistics@customs.gov.lk) 2023 செப்டெம்பர் 27 ஆம் திகதியிலிருந்து வேலை நாட்களில் மு.ப. 9 மணியிலிருந்து பி.ப. 3 மணி வரையும் கொழும்பு-11, பிரதான வீதி, 40 ஆம் இலக்கத்திலுள்ள இலங்கை சுங்கம், 6 ஆம் மாடி, லொஜிஸ்டிக்ஸ் பணியகத்தில் விலைமனுக்கோரல் ஆவணத்தை பரீட்சிக்கலாம். விலைமனுக்கோரல் ஆவணமானது இலங்கை சுங்க இணையதள செய்தியில் பார்வை நோக்கத்திற்கு மாத்திரம் காட்சிப்படுத்தப்பட்டுள்ளது.

4. '2023 ஒக்டோபர் 25 ஆம் திகதியன்று அல்லது அதற்கு முன்னராக வேலை நாட்களில் மு.ப. 9 மணியிலிருந்து பி.ப. 3 மணி வரையும் இலங்கை சுங்கம், 2 ஆம் மாடி, பிரதான சிறாப்பரிடம் மீளளிக்கப்படாத கட்டணமாக முப்பதினாயிரம் இலங்கை ரூபாவை (30,000 இ.ரூபா) செலுத்திய பின்னர், கீழேயுள்ள முகவரிக்கு எழுத்து மூலமான விண்ணப்பமொன்றைச் சமர்ப்பிப்பதன் மூலம், ஆங்கில மொழியிலுள்ள விலைமனுக்கோரல் ஆவணங்களின் முழுமையான தொகுதியொன்று ஆர்வமுள்ள விலைமனுதாரர்களினால் கொள்வனவு செய்யப்படலாம். பணக்கொடுப்பனவு முறைமையானது ரொக்கப் பணத்திலேயே இருத்தல் வேண்டும்.

5. 2023 ஒக்ரோபர் 25 ஆம் திகதியன்று பி.ப. 3 மணிக்கு முன்னராக கொழும்பு-11, பிரதான வீதி, 40 ஆம் இலக்கத்திலுள்ள இலங்கை சுங்கம், 6 ஆம் மாடியின் லொஜிஸ்டிக்ஸ் பணியகத்தில் விலைமனுக்கள் ஒப்படைக்கப்படல் வேண்டும். தாமதமான விலைமனுக்கள் நிராகரிக்கப்படும். 2023 ஒக்டோபர் 25 ஆம் திகதியன்று பி.ப. 3 மணிக்கு சமுகமளித்திருக்கும் விலைமனுதாரரின் பிரதிநிதிகளின் முன்னிலையில் அவற்றை மூடிய பின்னர் விலைமனுக்கள் விரைவாகவே திறக்கப்படும். அனைத்து விலைமனுக்களும் வங்கி உத்தரவாதமொன்றின் பாங்கிலமைந்த இருபது இலட்சத்திற்கான இலங்கை ரூபாவிற்கான (2,000,000 இ.ரூபா) விலைமனுப்பிணையுடன் இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும்.

6. 2023 ஒக்டோபர் 09 ஆம் திகதியன்று மு.ப. 10.30 மணிக்கு கொழும்பு-11, பிரதான வீதி, 40 ஆம் இலக்கத்திலுள்ள இலங்கை சுங்கம், 6 ஆம் மாடியின் லொஜிஸ்டிக்ஸ் பணியகத்தில் விலைமனு முன்னோடிக் கூட்டமொன்று நடைபெறும்.

**தலைவர்,**
**திணைக்கள பெறுகைக் குழு,**
**இலங்கை சுங்க திணைக்களம்,**
**இல.: 40, பிரதான வீதி, கொழும்பு-11.**

2023 செப்டெம்பர் 27 ஆம் திகதியன்று.

# அறிவித்தல்

## சப்ரகமுவ பிரதேச சபை

### 2024ம் ஆண்டிற்கு வழங்குநர்களைப் பதிவு செய்தல்

2024ஆம் ஆண்டிற்கு சப்ரகமுவ மாகாண சபைக்குச் சொந்தமான அரச நிறுவனங்களுக்கு தேவைப்படும் பொருட்கள், சேவைகள் மற்றும் வேலைகளை வழங்கக் கூடிய வழங்குநர்களைப் பதிவு செய்வதற்கு அரச கூட்டுத்தாபனங்கள், நியதிகள் சபைகள், அதிகார சபைகள், அமைப்புகள், சங்கங்கள், பொதுக் கம்பனிகள், தனியார் கம்பனிகள், கூட்டு வியாபாரங்கள் அல்லது தனிநபர் வியாபார நிறுவனங்களில் இருந்து 2023.09.27 முதல் 2023.11.30 வரை விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

விண்ணப்பங்கள் நிபந்தனைகள் மற்றும் மேலதிக விபரங்களை

பிரதி பிரதம செயலாளர் (நிதி முகாமைத்துவம்)
பிரதி பிரதம செயலாளர் (நிதி முகாமைத்துவம்,) அலுவலகம்,
சப்ரகமுவ மாகாண சபை, புதிய நகரம், இரத்தினபுரி

என்ற முகவரிக்கு 9" x 4" அளவிலான முகவரியுடனான முத்திரை கடித உறையை அனுப்புவதன் பேரில் இந்த நிறுவனத்திற்கு வருகை தருவதன் மூலம் அல்லது www.sg.gov.lk என்ற இணைய தளத்திற்கு பிரவேசித்துப் பெற்றுக் கொள்ளலாம். பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்கள் 2023.11.30ம் திகதிக்கு அல்லது அதற்கு முன்பு மேற்படி முகவரிக்கு அனுப்புதல் வேண்டும்.

தொ.பே. இல. 045-2222893, 045-2228099 மூலம் பிரதி பொதுச் செயலாளருக்கு அழைத்து மேலதிக விபரங்களைப் பெற்றுக் கொள்ளலாம்.

**மஹிந்த எஸ் வீரசூரிய**
**பிரதம செயலாளர்,**
**சப்ரகமுவ மாகாணம்.**

# விலைக்கோரல் அறிவித்தல்

## பொல்கஹவெல பிரதேச சபை

பொல்கஹவெல பிரதேச சபைக்குச் சொந்தமான பின்வரும் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள ஆதனங்களை 2024-01-01ஆம் திகதி முதல் 2024-12-12ஆம் திகதி வரையான காலத்திற்கு குத்தகைக்கு வழங்குவதற்காக கேள்வி விண்ணப்பங்கள் வழங்கப்படும்.

குறித்த கட்டணங்களைச் செலுத்தியதன் பின் 2023-09-27ஆம் திகதி முதல் 2023-10-12ஆம் திகதி பி.ப. 3.00 மணி வரையில் மட்டும் குறித்த கேள்விப் படிவங்கள் பொல்கஹவெல பிரதேச சபை தலைமை அலுவலகத்தினால் வழங்கப்படும் என்பதுடன் முத்திரைக்குறி பொறிக்கப்பட்ட கேள்விப்படிவங்கள் 2023-10-13ஆம் திகதி மு.ப. 10.00 மணி வரையில் மட்டுமே ஏற்றுக்கொள்ளப்படும். 2023-10-13ஆம் திகதி மு.ப. 10.30 மணிக்கு கேள்விகள் திறக்கப்படும்.

மேலதிக விபரங்களை பொல்கஹவெல பிரதேச சபை பிரதான அலுவலகத்தின் 037-2243274/037-4941999 எனும் தொலைபேசி இலக்கத்தின் மூலம் விசாரித்தறிந்து கொள்ளலாம்.

**அட்டவணை**

| தொ. இல. | ஆதனத்தின் தன்மை | குத்தகைக் காலம் | ஆகக் குறைந்த கேள்வி | மீளளிக்கப் படாத விண்ணப்பப் படிவக் கட்டணம் | மீளளிக்கப் படும் கேள்விப் பிணை |
|---|---|---|---|---|---|
| 01 | கொடவெல வாரச் சந்தை | 1 வருடம் | 1,908,400.00 | 1000.00 | 95,420.00 |
| 02 | பொத்துஹெர வாரச் சந்தை | 1 வருடம் | 1,730,450.00 | 1000.00 | 86,522.00 |
| 03 | வீரம்புகெதர வாரச் சந்தை | 1 வருடம் | 338,000.00 | 1000.00 | 27,040.00 |
| 04 | பொதுச் சந்தை 24ஆம் இலக்க மீன் கடை | 1 வருடம் | 513,847.00 | 2000.00 | 25,700.00 |
| 05 | பொதுச் சந்தை 25ஆம் இலக்க ஆடு, கோழியிறைச்சிக் கடை | 1 வருடம் | 100,000.00 | 2000.00 | 10,000.00 |
| 06 | பொதுச் சந்தை 26ஆம் இலக்க ஆடு, மாட்டிறைச்சிக் கடை | 1 வருடம் | 548,000.00 | 2000.00 | 27,400.00 |
| 07 | பொத்துஹெர பொதுச் சந்தை 04ஆம் இலக்க மீன் கடை | 1 வருடம | 182,325.00 | 1000.00 | 14,586.00 |
| 08 | வதாகட மாட்டிறைச்சிக் கடை | 1 வருடம் | 48,000.00 | 1000.00 | 4,800.00 |
| 09 | கொடவெல வாரச்சந்தை முன்னாலுள்ள பிரதேச சபைக்குரித்தான கட்டிடம் | 3 வருடங்கள் | 300,000.00 | 1000.00 | 24,000.00 |

**கவனிக்கவும்:**

- அட்டவணையில் காட்டப்பட்டுள்ள 08ஆம் இலக்க ஆதனம் தனியாருடையது என்பதால் அதில் மாட்டிறைச்சியை விற்கும் உரிமை மட்டும் குத்தகைக்கு விடப்படும்.
- கொடவெல வாரச் சந்தைக்கு முன்னாலுள்ள பிரதேச சபைக்குரித்தான கட்டிடம் 2024-01-01ஆம் திகதி முதல் 2026-12-31ஆம் திகதி வரையான 03 வருட காலத்திற்கு குத்தகைக்கு வழங்கப்படும்.
- சகல கேள்விகளையும் ஏற்றுக்கொள்ளும் அல்லது நிராகரிக்கும் முழுமையான உரிமையை பொல்கஹவெல பிரதேச சபை தன்னகத்தே கொண்டுள்ளது.

**செயலாளர் / அதிகாரம் வாய்ந்த அதிகாரி,**
**பொல்கஹவெல பிரதேச சபை,**
**பொல்கஹவெல.**

# கம்பனிகளின் பதிவாளர் நாயகத்திடமிருந்து பெற்றுக் கொள்ளும் உரிமமொன்று

2007 ஆம் ஆண்டின் கம்பனிகள் சட்ட இல. 7 இன் 34 ஆம் பிரிவின் பிரகாரம் ''Meedsi Foundation'' என்ற பெயர் மற்றும் பாங்கின் கீழ் உருவாக்கப்படும் ஒரு சங்கம் வரையறுக்கப்பட்ட பொறுப்புடன் அதன் பெயருடன் ''லிமிட்டட்'' சொல்லை சேர்க்காமல் பதிவு செய்வதற்கான உரிமத்திற்காக கம்பனிகளின் பதிவாளர் நாயகத்திற்கு விண்ணப்பமொன்று சமர்ப்பிக்கப்பட்டுள்ளது

இந்த சங்கத்தை தாபிப்பதற்கான உத்தேசிக்கப்பட்டுள்ள இலக்குகள் பின்வருமாறு:

i. சமூக ஒருங்கிணைப்பு செயற்பாடுகள், சுற்றுச்சூழல் அபிவிருத்தி செயற்பாடுகள், விவசாய, மீன்பிடி மற்றும் கால்நடை வளர்ப்பு செயற்பாடுகள், பொருளாதார அபிவிருத்தி செயற்பாடுகள், மகப்பேறு பராமரிப்பு, குழந்தை பராமரிப்பு, முன்பள்ளிக் கல்வி, தொழில் பயிற்சி, பெண்களுக்கான அதிகாரம், குழந்தைகளுக்கான சுகாதாரம் மற்றும் போசணை, ஊனமுற்றோர்களின் பராமரிப்பு ஆகியவற்றில் ஈடுபடல் மற்றும் சட்டவிரோத போதைப்பொருள் பாவனையை தடுப்பதற்கான விழிப்புணர்வை ஏற்படுத்தல்.

ii. இன வன்முறை, சிவில் யுத்தம், இயற்கையான பேரிடர்கள், மனிதரினால் உருவாக்கப்படும் பேரிடர்கள் மற்றும்/அல்லது இயற்கை அனர்த்தங்கள் ஆகியவற்றினால் பாதிக்கப்பட்ட சமூகங்களுக்கு நிவாரண சேவைகள், புனர்நிர்மாணங்கள் மற்றும் மீள்குடியேற்ற திட்டங்களை வழங்கல்.

iii. ஏழ்மைக் குறைப்பு, சமூகங்களில் ஏற்றத்தாழ்வின்மை அவ்வாறான சமூகங்களுக்கான பொருளாதார வளர்ச்சி ஆகியவற்றை ஏக இலக்காகக் கொண்டு வேலைவாய்ப்பு சந்தர்ப்பங்கள் மற்றும் வருமான உற்பத்தி செயற்பாடுகளை உருவாக்குவதற்காக இலங்கையின் அனைத்து பாகங்களிலும் அங்கவீனர் மற்றும் ஊனமுற்றோர் அல்லது மாற்றுத்திறனாளிகளின் மேம்படுத்தலுக்காக தாபிக்கப்பட்ட அனுசரணையாளர்கள், நிலையங்கள், கருத்தரங்குகள், பயிற்சி நிறுவனங்கள் ஆகியவற்றிற்கு நிதியுதவி வழங்கல் மற்றும் ஊக்குவித்தல்.

மட்டக்களப்பு ரொசைரோ ஒழுங்கை, 27 ஆம் இலக்கத்தில் அமைப்பு அகவிதிகளின் பிரதியொன்று பரீட்சிக்கப்படலாம்.

இந்த விண்ணப்பத்திற்கெதிராக ஆட்சேபனை தெரிவிக்க விரும்பும் எந்தவொரு நபர், கம்பனி அல்லது கூட்டுத்தாபனம் அவ்வாறான ஆட்சேபனைகளை 2023.10.17 ஆம் திகதியன்று அல்லது அதற்கு முன்னராக கொழும்பு-10, டி.ஆர். விஜேவர்தன மாவத்தை, 400 ஆம் இலக்கத்திலுள்ள ''சமாகம் மெதுர'' என்ற முகவரியின் கம்பனிகளின் பதிவாளர் நாயகத்திற்கு கடிதமொன்றின் மூலம் தெரிவிக்கலாமென இத்தால் அறிவித்தல் வழங்கப்படுகின்றது.

2023 செப்டெம்பர் 27 ஆம் நாளன்று திகதியிடப்பட்டது.

**பாக்கியமூர்த்தி குமரகுருபரன்**
**ஊக்குவிப்பாளர்.**

# மீட்கப்படாத அடகு தங்க ஆபரண ஏலவிற்பனை

மக்கள் வங்கியின் கேகாலை பிராந்தியத்துக்கு உட்பட்ட கீழ்காணும் கிளைகளிலும் சேவை நிலையங்களிலும் 2022.06.30 ம் திகதி வரை அடகு வைக்கப்பட்டுள்ள 2023.10.13 திகதி வரை மீட்கப்படாத அடகு தங்க ஆபரணங்கள் கீழே குறிப்பிட்டுள்ள திகதிகளில் கீழ்க்காணும் இடங்களில் மு.ப.9.00 மணி முதல் ஏலத்தில் விற்பனை செய்யப்படும்.

| ஏலவிற்பனை திகதி | 2023.10.14 (சனி தினம்) | | | |
|---|---|---|---|---|
| ஏலவிற்பனை இடம் | கேகாலை கிளை வளாகம் | ருவன்வெல்ல கிளை வளாகம் | மாவனல்லை கிளை வளாகம் | வரக்காபொல கிளை வளாகம் |
| அடகு வைக்கப்பட்டுள்ள கிளை | கேகாலை, கேகாலை கடை வீதி, புலக்கொஹுபிட்டிய, ரம்புக்கன, கொட்டியாகும்புர | ருவன்வெல்ல, எட்டியாந்தோட்டை, தெரனியகல, தெஹிஓவிட்ட | மாவனல்லை, ஹெம்மாத்தகம, அரனாயக்க | வரக்காபொல துல்ஹிரிய கலிகமுவ, கோனகல்தெனிய |
| அடகு வைக்கப்பட்டுள்ள சேவை நிலையங்கள் | மொரொன்தொட்ட, தேவாலேகம, பத்தம்பிட்டிய | கரவனல்லை, கித்துல்கல | மாவனல்லை, அலுத்நுவர | அல்கம, கலப்பிட்டமட, ஹொரகஸ்மங்கட, நெலுந்தெனிய, அமித்திரிகல |

மேற்குறிப்பிட்ட பிரகாரம் நடைபெறவுள்ள இந்த ஏலவிற்பனை மறுஅறிவித்தல் ஏதுமின்றி வங்கியின் விருப்பத்திற்கு ஏற்ப இரத்துச் செய்தல், ஒத்தி வைத்தல் அல்லது ஒன்றிணைத்து நடாத்தல், ஏலவிற்பனை நடைபெறும் இடத்தை மாற்றியமைத்தல் போன்ற எந்த நடவடிக்கையையும் எடுக்கும் அதிகாரம் வங்கிக்கு உள்ளது

**பிராந்திய முகாமையாளர்**
**மக்கள் வங்கி**
**பிராந்திய தலைமைக் காரியாலயம்**
**இல.17,**
**வின்ஸ்டன் விக்ரமசிங்க மாவத்தை**
**கேகாலை**

**தொலைபேசி இல : 035-2222300**
**035-2222396**

PEOPLE'S BANK
Pride of the Nation

**பத்திரிகைக்கான பொறுப்புத்துறப்பு**

**லிபர்டி வெளிநாட்டு ஆட்சேர்ப்பு ஆலோசனை மற்றும் ட்ரவல்ஸ் (பிரைவேட்) லிமிட்டெட்**

**இல 107 C, புத்தகமுவ வீதி, கலபலுவாவ, இராஜகிரிய**
**தொலைபேசி: 0113 603 332 / 0113 603 331**
**மின்னஞ்சல்: info@libertefct.org**
**இணையம் www.libertefct.org**

**பொறுப்புத்துறப்பு: எமது வெளிநாட்டு வேலைவாய்ப்பு சேவைகள் பயன்பாடு**

1. 2007ம் ஆண்டு கம்பனிகள் சட்ட இல 07 இன் கீழ் பதிவு இல P V 265161 ஐ கொண்ட லிபர்டி வெளிநாட்டு ஆட்சேர்ப்பு ஆலோசனை மற்றும் ட்ரவல்ஸ் (பிரைவேட்) லிமிட்டெட் (1985ம் ஆண்டு இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு ஆணைக்குழு சட்ட இல 21 இன் விதிகளின் கீழ் இயங்கும் அனுமதிப்பத்திரம் பெற்ற வெளிநாட்டு வேலைவாய்ப்பு முகவர் நிலையம்) ஆகிய எமது சேவைகளை பயன்படுத்த தொடங்குவதற்கு முன்னர் பின்வரும் மறுப்பை வாசித்து விளங்கிக்கொள்ளுமாறு தாழ்மையுடன் வேண்டிக்கொள்கின்றோம்.
2. அனுமதிப்பத்திர விபரம்: இல 107 C, புத்தகமுவ வீதி, கலபலுவாவ, இராஜகிரியவில் பதிவுசெய்யப்பட்ட அலுவலகத்தைக் கொண்ட லிபர்டி வெளிநாட்டு ஆட்சேர்ப்பு ஆலோசனை மற்றும் ட்ரவல்ஸ் (பிரைவேட்) லிமிட்டெட் ஆனது இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகத்தால் வழங்கப்பட்ட 1985ம் ஆண்டு இல 21 இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியக சட்டத்தின் கீழ் இல 3513ஐ கொண்ட செல்லுபடியான அனுமதிப்பத்திரத்தை கொண்டுள்ளது. இவ் அனுமதிப்பத்திரம் வெளிநாட்டுத் தொழிலாளர்களை பல்வேறு வெளிநாட்டு தொழில் வாய்ப்புக்களுக்கு ஆட்சேர்ப்புச்செய்தல், பணிக்கமர்த்துதல் மற்றும் இடமாற்றம் செய்தல் போன்ற வணிக செயற்பாடுகளில் ஈடுபட எங்களை அனுமதிக்கின்றது.
3. அனுமதிப்பத்திரம் பெற்ற வெளிநாட்டு வேலைவாய்ப்பு முகவர் நிலையம் என்ற வகையில், 1985ம் ஆண்டு இல 21 இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியக சட்ட ஏற்பாடுகள் மற்றும் வெளிநாட்டு தொழிலாளர்களின் ஆட்சேர்ப்பு மற்றும் வேலைவாய்ப்பு என்பவற்றை நிர்வகிக்கும் ஏனைய பொருத்தமான சட்டங்கள் மற்றும் விதிகளை நிலைநாட்டுவதற்கு நாங்கள் கட்டுப்பட்டுள்ளோம். எமது சகல செயற்பாடுகளிலும் நன்னெறி நடைமுறைகள் மற்றும் வெளிப்படைத்தன்மையை உறுதிசெய்ய முயல்கின்றோம்.
4. வெளிநாட்டு வேலை வாய்ப்புக்கள் தொடர்பான துல்லியமான மற்றும் இற்றைப்படுத்தப்பட்ட தகவல்களை வழங்க முயற்சிக்கும் அதேவேளை, அனைத்து வருங்கால வாடிக்கையாளர்களும் உரிய விடாமுயற்சியுடன் செயற்படவும் விபரங்களை சுயாதீனமாக சரிபார்க்கவும் வலியுறுத்துகிறோம். பயணிக்கவுள்ள நாட்டின் சட்டம் மற்றும் விதிகளை மற்றும் ஏனைய பொருத்தமான குடிவரவு மற்றும் தொழிலாளர் சட்டங்களை விளங்கி இணங்குவதும் வாடிக்கையாளர்களின் பொறுப்பாகும்.
